கல்கி




KALKI
29.10.1967
40 காசு



வசீகரமான வனப்பைப் பெறுங்கள்.. முகத்திற்கு மோகன மேன்மை அளியுங்கள்!


வெண்பனிபோன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவிக்கொண்டால் உங்கள் சருமம் மிருதுத்தன்மை பெற்று, மழமழப்பாக, பளிச்சென்று திகழும்...
முகத்தில் கரும்புள்ளிகள் வராமல் தடுப்பதோடல்லாமல், காற்றாலும், வெய்யிலினாலும் சருமம் வரட்சியடையாமல் பாதுகாக்கும். அதைத் தனியாகத் தடவிக் கொள்ளலாம் அல்லது அதன் மீது பவுடர் போடலாம். பவுடர் ஒரேசீராகப் படிந்து, மணிக் கணக்காகக் கலையாமல் இருக்கும்.
உலகெங்கும் பேரழகிகள் பலரும் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகிக்கின்றனர்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—பவுடர் ஒற்றிக்கொள்ள ஒப்பற்ற க்ரீம்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில இணைக்கப்பட்டது)

P 5590




மணிஜே
சினி புரொடக்ஷன்ஸ்

இரு மலர்கள்

கதை, டைரக்ஷன்
A.C. திருலோகசந்தர் M.A.

இசை	வசனம்	பாடல்கள்	ஸ்டூடியோ
M.S. விஸ்வநாதன்	ஆரூர்தாஸ்	வாலி	ஜெமினி



நவம்பர் 1ம் முதல்

சென்னை
வெலிங்டன் · பிரபாத் · ராக்ஸி · ராம்
மற்றும் தென்னாடெங்கும்...



தீபாவளியிலும்
ஆயுட்காலமளவும்
ஆனந்தத்தை
அளிக்கும்
உறுதுணை—
பை!
மாடல் 3326
மாடல் 3401
மாடல் 3216
மாடல் 3221
மாடல் 3039
மாடல் 3040
ரேடியோக்கள் மற்றும் ட்ரான்ஸிஸ்டர்கள்
GRA
ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் லிட்.
பை ரேடியோ டிவிஷன்
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டெல்லி
பெங்களூர் . செகந்திராபாத் .
Shilpi GRA 59/67 Tam

பயனுள்ள ஒரு திட்டமும், தேவையான வழிவகையறிவும், அதற்குரிய திறமையும் உங்களிடம் இருக்குமேயானால்



சொந்தமாக உங்கள் சிறு தொழிலைத் துவக்கிக்கொள்ள நாங்கள் நிதி உதவி வழங்குகிறோம்!

மேற்கொண்டு தகவலறிய, அருகிலுள்ள ஸ்டேட் பாங்க் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளவும்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

S. 345 TM

மூட்டைப்பூச்சி!
மூட்டைப்பூச்சி!



Dalf
டால்ஃப்



மூட்டைப்பூச்சிகளை ஒழித்துக் கட்டும்


BAYER ®

பயன்தரும் சிக்கனமான மூட்டைப்பூச்சிக் கொல்லி

மூட்டைப்பூச்சி ஒழிப்புக்குப் பயனுள்ள தெளிப்பு முறைப்பூச்சிக் கொல்லி இது. மிகவும் சிக்கனம் வாய்ந்தது! 5 தெளிப்புக் குவளைகள் கரைக்க உதவும். இன்றே டால்ப் தெளித்து, மூட்டைப்பூச்சிகளுக்கு நிரந்தரமாக விடைகொடுங்கள்.

மேற்கு ஜெர்மனியின் பாயர்-லிவர் குசன் நிறுவனத்தால் தோற்றுவிக்கப்பட்டு, தனி உரிமைபெற்ற பாயர் தயாரிப்பு.

பாயர் (இந்தியா) லிட்.
பி.ஓ. பாக்ஸ் 1456, பம்பாய்-1
டிரேட் மார்க்குகளின் ரிஜிஸ்டர்டு யூஸர். TA



டி.எஸ்.ஆர் & கோ.,


மதராஸ்–16 கும்பகோணம்.



'கோகுல்'

ஸான்டால் டாய்லேட் பவுடர்	ஸான்டல் வுட் டாய்லேட் பவுடர்

கல்கி




[அட்டைப்படத்தில் ......]

மனைவி : ஊர் கெட்டுப் போச்சு ! வழி பூரா என்னைத் தொடர்ந்து ஓர் இளைஞன் வந்து கொண்டிருந்தான் ......
நன்னாயிருக்கு. அதுக்கு என்னத்துக்கு அப்படிச் சிரிக்கிறேள் ?

பொருளடக்கம்

பிலவங்க, ஐப்பசி 12 - அக்டோபர் 29

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


வி.ஆர்.ராமசாமி
காங்கிரஸ்
தென் சென்னை
சென்னையில் தரை தட்டிய கப்பல்!
தாங்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும்போது மறக்காம-லிருக்க!
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ★ இதழ் 13

மொழிவாரிப் பிரிவினை: உக்கிரத்தைத் தணிப்போம்!

இப்போது தேசம் மொழிவாரி ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் ஏற்படும் தீமைகளைக் குறைக்க வேண்டும்; மொழிவாரி அடிப்படையின்றி நாட்டை மண்டலங்களாகப் பிரிக்க வேண்டும்; இந்தப் பணியை நான் மேற்கொள்ள வேண்டும் — இவ்வாறு ஏராளமான நன் மக்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளன. எனினும், என்னைவிட வயதில் சிறிய ஒருவரை இந்தப் பணிக்கு அவர்கள் விரும்பியிருக்கலாம்.

அதிகார சக்தி படைத்த எந்த அரசியல் அமைப்பிலும் சுய லாபம் பெறுகிற ஒரு கூட்டம் உண்டாகிவிடுகிறது. இதனால் அந்த அமைப்பு மாறாமல் நீடிக்க வேண்டும் என்ற அழுத்தமான சங்கற்பமும் அகம்பாவ உணர்ச்சியும் உண்டாகி விடுகின்றன. மொழிவாரி அமைப்பு ஏற்பட்டுப் பதினைந்தாண்டுகள் ஆகிவிட்டன. இதனால் அந்த அமைப்பை அப்படியே நீடிப்பதில் அக்கறை கொண்ட கூட்டம் வலுப்பெற்று விட்டது. எனவே, முன்பு போதிய யோசனையின்றி உண்டாக்கிவிட்ட மொழிவாரிப் பிரிவினை என்ற விஷமச் செயலை இப்போது திருத்தி அமைப்பது சிரமசாத்தியமான காரியமாகி விட்டது. மக்களின் நல்லுணர்வில் காந்தியடிகள் அதீதமான நம்பிக்கை வைத்திருந்ததாலேயே இது போன்ற ஏற்பாடுகளை அவர் ஆதரித்தார். தீமைகள் உள்ளன என்பதையும் அவை எப்படியெல்லாம் விருத்தியாகும் என்பதையும் அவர் அறியாமலில்லை. எனினும், இதையெல்லாம் ஆண்டவன் கவனித்துக் கொள்வான் என்று நம்பினார். ஆனால் ஆண்டவனோ அவனது விளக்கவொண்ணாத காரணங்களுக்காக நம்மைப் பற்றி உதாசீனமாகவும் இருப்பான் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆண்டவன் இவ்வாறும் இருக்கக்கூடும் என்பதைக் கவனிக்கக் காந்தியடிகள் தவறி விட்டார் என அஞ்சுகிறேன்.

மொழிவாரிப் பிரிவினை வேண்டும் என்று மக்கள் பலமாகக் கோஷம் எழுப்பியபோது, இந்தக் கோரிக்கை மக்களின் ஜனநாயக உரிமை என்றே நேருஜி குழப்பமடைந்து விட்டார். எனவே அவர் இதை எதிர்ப்பதைப் பற்றி எண்ணவே இல்லை. ஆனால் உண்மையில் இது ஜனநாயக உரிமையல்ல. பிரதேசப் பித்துதான். ஜனநாயகத்தைச் சுக்குநூறாகச் செய்வது பிரதேசப் பித்து. போதிய விஷயஞானமில்லாத ஐம்பது கோடி மக்களின் எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகம் நடத்தி அதன்மூலம் தேசத்தின் உண்மையான சுகத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினமான காரியம். தேசத்தைப் பல துண்டுகளாகப் பிரித்துவிட்ட பின்பு ஜனநாயக அரசியல் அமைப்பானது தேச நலனுக்கான கருவியாகவே இயங்க முடியவில்லை. ஜனநாயக அரசியல் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதையும், ஆனால் நடைமுறையில் அது அவ்வாறிருக்க எப்படியெல்லாம் தவறிவிட்டது என்பதையுமே மொழிவாரிப் பிரிவினை உணர்த்துகிறது.

மொழி அடிப்படையற்ற மண்டலங்களை அன்பர்கள் விரும்புவதாக முதலில் கூறினேன் அல்லவா? இந்தியா என்ற சமஷ்டி அமைப்புக்குள் இயங்க வேண்டிய சிறு சமஷ்டிகளே இம்மண்டலங்கள். இப்போதே ராஜ்யங்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் இடையில் போராட்டம் இருந்து வருகிறது. அன்பர்கள் விரும்பும் மண்டலங்கள் இப்போதைய ராஜ்யங்களைவிட அதிகப் பலமுள்ளவையாக இருக்குமாதலால், இவ்வாறு பாரத சமஷ்டிக்குள் உப-சமஷ்டிகள் தோன்றுவதையோ, அவை வலுவடைவதையோ மத்திய சர்க்கார்

விரும்பாது. அது ஒரு சக்தி வாய்ந்த சுயநலக் கூட்டத்தின் எதிர்ப்பாக இருக்குமாதலால், மொழி அடிப்படையற்ற அமைப்புக்குப் பெரும் தடையாக இருக்கும். இதைத் தவிர, தனிப்பட்டவர்கள் பலரின் சுய நலங்கள் வேறு உள்ளன. இவற்றையெல்லாம் கூட்டிப் பார்த்தால் அதுவும் பெரியதோர் எதிர்ப்புச் சக்தியாக இருக்கும். அரசாங்கத்தினர் சுயநோக்கங்களுக்காக அதிகார சக்தியை வெகு எளிதில் எப்படி வேண்டுமானாலும் கையாள முடியும்.

எனவே நாம் வேறு இனங்களில், சிறு அளவில்தான் பணியைத் தொடங்க வேண்டும். திறமையான சிப்பந்திகளையும் நல்ல நிருவாகத்தையும் கொண்ட பெரிய கல்லூரிகளையும் ஆஸ்பத்திரிகளையும் மண்டல அடிப்படையில் எழுப்புவோம். அவ்வப்போது அண்டை ராஜ்யங்களின் சட்ட சபையாளர் அனைவரும் கொண்ட கூட்டுச் சட்டசபைத் தொடரை நடத்துவோம். சில முக்கியமான பிரச்னைகளை விவாதிப்பதற்காக அடுத்தடுத்து இல்லாத பல ராஜ்ய சட்ட சபைகளைக் கூட ஒன்று கூட்டலாம்.

பருவமழை எந்தப் பகுதியிலுமே ஆண்டு தோறும் ஒரேபோலிருப்பதில்லை. எனவே ஒரு வருஷத்தில் நல்ல விளைச்சல் காண்கிற ராஜ்யம் அதில் ஒரு பகுதியைப் பஞ்சப் பிரதேசத்துக்கு அனுப்பும்போது, அதற்கு மத்திய சர்க்காரில் கணக்கு வைத்துக்கொள்ளலாம். தானியம் தந்த ராஜ்யத்தில் உணவுக் கஷ்டம் ஏற்படும்போது இந்தக் கணக்குக்கு ஏற்ப அதற்கு மற்ற ராஜ்யங்களிலிருந்து தானியம் வழங்கலாம். அதே உணவு தானியமாகத்தான் திருப்பித் தர வேண்டுமென்பதில்லை. அதற்கு ஈடாக வேறு எது தேவையோ அதைத் தரலாம். மொழிவாரி ராஜ்யங்களையும் அதன் அடிப்படையில் எழுந்துள்ள சுயநலக் கூட்டங்களையும் நாம் ஒப்புக்கொண்டாலும் கூட, ராஜ்யங்களிடையே பரஸ்பர உதவி நிலவுவதற்காக இப்படி ஒரு பாங்குக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

வனவிலங்குகளையும், விஷப் பாம்புகளையும் கூட வசப்படுத்துபவர்கள் இருக்கிறார்கள். மொழிவாரி ராஜ்ய அமைப்பையும் வசப்படுத்தி அடக்குவதற்கு ஏன் முயலக்கூடாது?

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது.)

பாகும் பருப்பும்

விநாயகப் பெருமானுக்கு அவ்வைப் பாட்டி ஆசையுடன் படைத்த பாகுக்கும் பருப்புக்கும் தமிழகத்தில் திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது. சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்பட்டதால்தான் வெல்ல வியாபாரிகள் வேண்டுமென்றே வெல்லத்தின் விலையை உயர்த்திவிட்டனர் என்று பொதுவாக எண்ணம் உள்ளது. பருப்பு வகைகள் திடீரென்று தலைமறைவானது ஏன் என்று பொதுமக்களுக்குப் புரியாதிருந்தது. இந்தத் தட்டுப்பாடுகளின் காரணத்தை முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் தெளிவுற விளக்கித் தீர்வும் கூறியுள்ளார்.

தமிழகத்தில் ராமநாதபுரம் போன்ற சில பகுதிகள் தவிர மற்ற இடங்களில் பருப்பு விளைச்சல் கிடையாது. பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் முதலிய இடங்களிலிருந்தே பருப்பு வகைகள் வரவேண்டியுள்ளது. இவற்றின் அளவை அதிகரிக்குமாறு தமிழக அரசாங்கம் தில்லிக்குப் பலமுறை வற்புறுத்தித் தெரிவித்தும் தில்லி காதிலேயே போட்டுக்கொள்ளாமலிருக்கிறதாம். அதே சமயத்தில் தமிழ் நாட்டு வெல்லத்தை மகாராஷ்டிரத்துக்குப் பெருமளவில் அனுப்பிவைப்பதையும் தில்லி குறைக்க மறுத்து வருகிறது. மகாராஷ்டிரத்தில் பலவிதமான மது வகைகளைத் தயாரிக்க இவ்வெல்லம் செலவாகிறது. இதையெல்லாம் எடுத்துக் கூறியுள்ள முதல் மந்திரி இனி வெல்லம் வெளி ராஜ்யங்களுக்குப் போகாமல் ராஜ்ய அரசாங்கமே தடை செய்யும் என்றும், அதனால் இங்கு வெல்லத்தின் விலை குறையும் என்றும் கூறியுள்ளார்.

தேசம் முழுவதும் ஒரு பொருளாதாரக் குடும்பம் என்றும், இயற்கையாக எந்தப் பண்டமும் நாட்டின் எந்தப் பகுதிக்கும் செல்ல வேண்டும் என்றும் 'கல்கி' பலமுறை வற்புறுத்தியுள்ளது. தமிழ் நாட்டு வெல்லத்தைத் தமிழகத்துக்கு மட்டுமே பயனாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஏற்பாடு இதற்கு முரணல்லவா என்று தோன்றக் கூடும். ஆராய்ந்து பார்த்தால் முரணல்ல என்றே விளங்கும். நமக்குப் போதிய அளவு கிடைத்த பின்பும், எஞ்சியுள்ளதைப் பிறருக்கு அனுப்பி வைப்பதில் பேரம் பேசுவது தான் முறையின்மை. ஆனால் நமக்குப் பற்றாக்குறை ஏற்படுத்துமளவுக்குப் பிற ராஜ்யங்களுக்கு, அதுவும் மது வகைகளில் உபயோகவதற்கு, ஒரு பொருளை அனுப்பிவைப்பது சரியல்ல. முன் ஆண்டுகளை விட இப்போது ஆறுயிரம் டன் அதிகமாக வெல்லம் வெளி ராஜ்யங்களுக்குச் செல்கிறது; அதே சமயத்தில், நமக்கு முன்பு வெளிராஜ்யங்களிலிருந்து கிடைத்த சர்க்கரை வருடத்துக்கு அறுபதாயிரம் டன் குறைந்துள்ளது. இதை ஈடு செய்யவே 40,000 டன் வெல்ல ஏற்றுமதியைத் தடுக்க வேண்டியுள்ளது.

பிற ராஜ்யங்களிலிருந்து பருப்பு வகைகளை எதிர்பார்க்கும் நிலையில் நாம் இருப்பதை நன்குணர்ந்துள்ள முதல் மந்திரி அதேபோல் பிறர் நம்மிடம் நியாயமாக எதிர்பார்க்கும் எதையும் தர மறுக்கமாட்டார். நம்முடைய நெல் விளைச்சலைப் பற்றி நிச்சயமாக எதுவும் தெரியாதபோதே, அவர் தமிழகத்திலிருந்து கேரளத்துக்கு ஏராளமான அரிசி அனுப்பி வைக்க ஒப்பியதை யாரும் மறந்திருக்க முடியாது. நம் கோரிக்கைக்கு தில்லி உரிய கவனம் அளிக்காததாலேயே அவர் ராஜ்ய ரீதியில் நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளார். தீபாவளித் திருநாளை இனிப்புடன் கொண்டாடப் பருப்பும் வெல்லமும் தமிழகத்தில் கிடைக்குமாக!

என்ன சேதி?

- குட்டு வெளிப்பட்டது
- ஜாக்கிரதை தேவை
- முப்பதாண்டுச் சேவை

பிரதேச மொழிகளிடம் நல்லெண்ணம் கொண்டு மத்திய சர்க்கார் அவற்றைப் போதனை மொழியாக்க நினைக்கவில்லை. தாய் மொழியைப் போதனை மொழியாகச் செய்து விட்டால் ஆங்கிலம் விரட்டப்பட்டு விடும். அந்த இடத்தை ஹிந்தி மெள்ளப் பிடித்துக் கொள்வதற்கு வழி செய்யலாம் என்பதே அவர்கள் உள் நோக்கு. இந்த அந்தரங்க ரகசியத்தை எத்தனை நாள் மூடி மறைத்து வைக்க முடியும்? ஆமதாபாத்தில் உதவிப் பிரதமர் மொரார்ஜி தேசாய், சென்ற 17ந் தேதி பேசிய பேச்சில் குட்டு வெளிப்பட்டு விட்டது. ''எவ்வளவு விரைவில் பிராந்திய மொழிகளை ராஜ்ய சர்க்கார்களும், சர்வகலாசாலைகளும் மேற்கொள்ளுகின்றனவோ, அந்த அளவுக்கு ஹிந்தி பரவும்'' என்கிறார்.

பசுத் தோலைப் போர்த்திக் கொண்டு புலி வந்தாற்போல், தாய் மொழியில் போதனை என்ற பசுத் தோலைப் போர்த்திக் கொண்டு வருவது ஹிந்தி. இதுகாறும் தாய்மொழிப் போதனையை ஆதரித்தவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வங்கப் பிரதமர் ஸ்ரீ அஜய் முகர்ஜி சிறந்த காந்தியவாதி. நேர்மைக்கும் சீலத்துக்கும் பெயர் எடுத்தவர். அவர் கூறுவதை நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் சிரத்தையுடன் கவனிக்க வேண்டும்.

''மேற்கு வங்கத்தில் ஆயுதப் புரட்சியை ஆரம்பிப்பதற்காக சீனாவின் உதவியை அரசியல் கட்சி யொன்றின் ஒரு பிரிவு பகிரங்கமாக நாடியது'' என்று அவர் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் எந்தக் கட்சியைக் குறிப்பிடுகிறார் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 'யாரோடு வேண்டுமானாலும் தொடர்பு கொள்வேன். கம்யூனிஸ்ட்களைக் கனவிலும் தீண்டேன்' என்கிற முறையில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு எம். ஆர். மஸானி பேசுவதைச் சிலர் வேடிக்கை செய்ததுண்டு. ஆனால், திரு அஜய் முகர்ஜியின் கூற்று திரு மஸானி சொல்லி வந்தது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நிரூபித்து விட்டது.

தமிழகத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் இது.

பாரத தர்மத்தை மீண்டும் நிலைநாட்டும் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ள பாரதீய வித்யாபவனத்துக்கு இது முப்பதாவது ஆண்டு. பவனம் இதுவரை ஆற்றியுள்ள பணிகள் அமோகம். 36 இணைப்பு ஸ்தாபனங்கள் மூலம் வித்யா தானம் செய்திருக்கின்றனர்; சம்ஸ்கிருத, பகவத்கீதை பரீக்ஷைகள் பல நடத்தியுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட அருமையான நூல்கள் வெளியிட்டுள்ளனர். எட்டு சஞ்சிகைகள் நடத்துகின்றனர். கணக்கற்ற கருத்தரங்குகள், சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இனிச் செய்யத் திட்டமிட்டுள்ளதைக் கேட்டால் மேலும் பிரமிப்பூட்டும். மாணவர்களுக்கு உணவு விடுதிகள்; சம்ஸ்கிருத பாஷைப் பிரசாரம்; வேதம் உபநிஷத்துக்களிலிருந்து முக்கிய பகுதிகளை டேப்புகளில் பதிவு செய்து விநியோகிப்பது; பவன் கேந்திரங்களுக்குக் கட்டிடங்கள் எழுப்புவது; பெண்களுக்குத் தொழிற் கல்விக் கலாசாலைகள் அமைப்பது; வெளி நாட்டினரிடையும், அயல் நாடுகளில் வசிக்கும் இந்திய மக்களிடையும் பாரத தர்மத்தைப் பிரசாரம் செய்வது — இப்படிப் பலப்பல. இதற்கெல்லாம் முப்பது லட்சம் ரூபாய் நிதி தேவைப்படும். குலபதி முன்ஷி இவ் விஷயத்தில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

சென்னையில் மூன்று லட்சம் செலவில் ஸிம்லன் அனந்தராம கிருஷ்ணன் அவர்கள் பெயரில் ஒரு கல்யாண கூடம் அமைக்கத் திட்டம் இருக்கிறது. முப்பதாவது ஆண்டு விழாவை வருகிற டிசம்பர் மாத இறுதியில் ஒரு மகோத்சவமாகவே கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாரதீய வித்யா பவனத்தின் தருமப் பிரசாரப் பணி மேன்மேலும் சிறப்புடன் பிரகாசிக்குமாக!

பாரதீய வித்யாபவனத்தின் பெங்களூர் கேந்திர நிர்மாணத்தை மைசூர் முதன் மந்திரி திரு நிஜலிங்கப்பா தொடங்கி வைக்கிறார். குலபதி முன்ஷியையும் மைசூர் கவர்னரையும் உடன் காணலாம்.



உங்கள்

சேமிப்பு விரைவில் வளர...

சென்னை மாநில கூட்டுறவு வங்கி பலவகையான சேமிப்புத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. சிறிய அளவிலாவதும் சீக்கிரமே ஒரு கணக்கை ஆரம்பியுங்கள்

சேமிப்புத் திட்டங்களின் விவரங்கள் :

பிக்ஸட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும்

				வருடத்துக்கு
91 நாட்களும்	அதற்கு மேலும்	6	மாதங்களுக்குள்	5 %
6 மாதங்களும்	..	12	..	$5\frac{1}{2}$%
12 மாதங்களும்	..	2	வருடங்களுக்குள்	$6\frac{1}{4}$%
2 வருடங்களும்	..	3	..	$6\frac{1}{2}$%
3 வருடங்களும்	..	5	..	$6\frac{3}{4}$%
5 வருடங்களும்	..	7	..	$7\frac{1}{4}$%
7 வருடங்களும்	அதற்கு மேலும்		—	$7\frac{1}{2}$%
ஸேவிங்ஸ் பாங்க் டெபாஸிட்டுகள்			—	4 %

M.S.C. வங்கியின் ரெக்கரிங் டெபாஸிட்டுகளின் திட்டம் மிக லாபகரமானது.

விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள M.S.C. வங்கியின் கிளை அலுவலகத்தில் விசாரியுங்கள்.

இது உங்கள் வங்கி

சென்னை மாநில கூட்டுறவு வங்கி லிட்.
271, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1

THE MADRAS STATE CO-OPERATIVE BANK LTD.
271, Angappa Naik Street, Madras-1.



MSCB-103



வன்முறைச் செயல்களைப் போலீஸார் உடனே கண்டிப்புடன் அடக்க வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்களின் அனுமதிக்குக் காத்திருக்கக் கூடாது. நீதித் துறையினரைப் போல் போலீசும் இவ்விஷயத்தில் சுதந்திரமாகச் செயலாற்ற வேண்டும். இவ்வாறு ஒரு ஜனநாயகத்தில் சட்டமும் ஒழுங்குப்பாடும் காப்பாற்றப்படாவிடில் நிருவாகமே தோல்வியடைந்து மக்களின் கண்டனத்துக்கு ஆளாக வேண்டியதுதான். நீதித் துறையின் சுதந்திரம் முக்கியமானது. என்றாலும், தீமை விளைந்த பின், கோர்ட்டில் விசாரணை ஆன பிறகே, நீதித் துறையின் சுதந்திரம் பயனாகிறது. தீமை விளையும்போதே தடுக்கிற போலீசுக்கும் இச் சுதந்திரம் வேண்டும். கடிகாரத்துக்குப் பெண்டுலம் போன்றது போலீசுக்குச் சுதந்திரம். வன்முறைக்காரர்கள் அரசியல் கட்சிகளிடமிருந்து உதவி பெற அனுமதிக்கக் கூடாது. உடனடியாகப் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பயம் அவர்களுக்கு எப்போதும் இருக்கும்படி செய்ய வேண்டும்.

ஃஃஃ

ஐரோப்பாவில் ஒவ்வொரு நாடாகச் செல்லும் பாரதப் பிரதமரின் நிபுணத்துவம் வாய்ந்த உதவியாலும், அநுபவத்தாலும், அந்தக் கண்டத்தின் சிக்கலான பிரச்னைகள் விரைவிலேயே தீர்க்கப்படலாம். ஆனால் இந்தியாவின் பிரச்னைகள் நீடிப்பதோடு மட்டுமின்றி, முன்னிலும் சிக்கலாகி வருகின்றன.

ஃஃஃ

'ஆங்கிலத்தைப் போதனை மொழியாக நீடிப்பதா கூடாதா என்பது வாழ்வா—சாவா என்கிற பிரச்னை. ஆங்கிலத்தைக் கட்டாய மொழியாகக் கொண்ட ராஜ்யங்களிலிருந்து தான் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் கருத்தை உருவாக்க முடியும். இந்த ராஜ்யத்தினரே அப்போது மதிக்கத் தக்கவர்களாயிருப்பார்கள். மற்ற ராஜ்யத்தினர் பின் தங்கி நிற்க வேண்டியதுதான்' என்று பொது வாழ்வில் அநுபவம் மிகுந்த திரு ஏ. ராமசுவாமி முதலியார் வெளிப்படப் பேசியிருக்கிறார். இது ஹிந்திப் பிரியர்களுக்கு அவர் விடுக்கும் எச்சரிக்கை.

'எப்போதுமே பின்தங்கியவர்கள் முன்னேற்றச் சக்திகளையும் தமது மட்டத்துக்கு இறக்கிக் கொள்ள முயல்வது வழக்கம். (இதைத்தான் ஹிந்தியர்கள் செய்கிறார்கள்.) ஒவ்வொரு பிரதேசத்திலும் அப்பகுதி மொழியிலுள்ள ஆசையைக் கிளறிவிட்டு ஆங்கிலத்தைக் கல்வி நிலையங்களிலிருந்து விரட்டப் பார்ப்பதுதான் இன்றைய தந்திரம். போதனையில் மொழியின் பங்கு பற்றி அரை வேக்காட்டுக் கொள்கையைப் பின்பற்றும் டாக்டர் சேன் தேசத்துக்குப் பெரும் ஊறு செய்கிறார். நூறு வருடத்து நற்காரியங்களைக் குறுகிய சக்திகளால் கெடுத்து, தேசத்தை நவீன முறையில் முன்னேற முடியாமல் தடுக்கும் இப்போது, அறிவு விளக்கம் பெற்ற பிரஜைகளும் தலைவர்களும் ஒன்று கூடித் தங்கள் கருத்துக்களை வலுவாக எடுத்துரைக்க வேண்டும்.' — இவ்வாறு 'ஹிந்து' கூறுகிறது.

அடுத்த தலைமுறைக்காரர்கள் இருள் சக்திகளை எதிர்த்து இரும்பு மனத்தோடு போராட வேண்டும். ஆங்கிலத்தை ஆதரிப்பவர்கள் தாய்மொழியைப் பிரஷ்டம் செய்ய விரும்பவில்லை என்பதைத் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும். அவசியம் நேரிட்ட போதெல்லாம் தரமான கல்விக்கு உதவுகிற வகையில், ஆங்கிலத்தில் நடக்கும் போதனையை விளக்குமளவுக்குப் பிரதேச மொழிகள் வளர வேண்டும் என்பதே ஆங்கிலத்தை ஆதரிப்பவர்களின் விருப்பம்.

ஃஃஃ

கண்டத்துக்குக் கண்டம் பாயும் ஏவுகணைகளில் ருஷியாவுடன் போட்டியிட்டு அமெரிக்கா தயாரித்துள்ள புது வகை ஆயுதங்களைப் பற்றிப் படிக்கும்போது, இந்த உலகம் நீண்ட காலம் உயிர் வாழுமா என்றே அதிசயிக்கத் தோன்றுகிறது. இப்புது ஆயுதத்தை வெடிக்கும்போது, அது பல திசைகளில் சிதறி ஒரே சமயத்தில் பல இலக்குகளைத் தாக்குமாம். 'மினிட்மன்' என்ற இவ்வாயுதப் போட்டியில் ருஷியாவும் அமெரிக்காவும் கோடி கோடியாகச் செலவழித்து வருகின்றன. மனிதன் தனக்கே எதிராக உண்டாக்கிக் கொண்டுள்ள இப் பெருந் தீமையை அகற்ற ஹிந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், மற்ற மதத்தினரும் தங்கள் சாஸ்திரப்படி தனித் தனியே தொழும் ஆண்டவன் போத மாட்டானோ, அவனை விடப் பெரிய ஒரு ஆண்டவன் தேவையோ என்று தோன்றுகிறது. அணு ஆயுத விஸ்தரிப்பு ஒரு கனவாகத் தேய வேண்டும் என்று ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று மக்கட் குலம் முழுவதும் பிரார்த்திக்க வேண்டும். மனித அறிவினால் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை. ஆண்டவனிடம் பிரார்த்திப்பது ஒன்றே நம்பிக்கை தருகிறது.

ஃஃஃ

ஒரே கட்சியின் அரசாங்கத்துக்கும் பல கட்சிகள் சேர்ந்த அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள முக்கியமான மாறுபாட்டை உணர்ந்

நாமொழிய, கூட்டணிச் சர்க்கார்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கவிழ வேண்டியதுதான். நிருவாகத்தில் முதலிடம் பெறவேண்டியவை எவை என்பதைக் கூட்டணிச் சர்க்கார்கள் உறுதியாக முடிவு செய்து கொள்ள வேண்டும். இது சிரமம். எனினும் அசாத்தியமல்ல. முதன்மையான காரியங்களை நிர்ணயித்துக் கொண்டு, அவற்றையே பின்பற்றி, குதிரைக்குக் கண் மறைப்புப் போடுவது போல், மற்ற அம்சங்களைக் காணுமலிருந்தால்தான் கூட்டணிச் சர்க்கார்கள் வாழ முடியும். இப்படிச் செயலாற்றும் கூட்டணிச் சர்க்கார்கள் வெற்றிகரமான ஜனநாயக அரசாங்கமாகப் பாராட்டுக்குரிய பல செயல்களைப் புரிய முடியும். ஒரே கட்சியின் அரசாங்கத்திலிருப்போரைவிட, கூட்டணிச் சர்க்காரில் இருப்பவர்களிடம் பேச்சில் சத்தியமும் காரியத்தில் அந்தரங்க சுத்தியும் அதிகம் இருக்க வேண்டும். இது புதிராகத் தோன்றலாம். ஆனால் நடப்பிலே கண்ட அரசியல் இதுவே.

ஃஃஃ

'பள்ளிப் படிப்பின் உயர்கட்டம் வரையிலும் பிரதேச மொழியே போதனை மொழியாக இருத்தல் வேண்டும். ஆனால் சர்வகலாசாலைக் கல்வி ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும். விருப்பமுள்ளவர் ஹிந்தியில் படிக்கவும் வசதி தரலாம். எல்லா ராஜ்யங்களும் ஹிந்திக்கு மாற விரும்பும்வரையில் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்' என்று அமிருதசரஸின் பிரதான கல்ஸா இவான் தீர்மானம் செய்துள்ளது.

'ஆங்கிலத்துக்குப் பதில் பிரதேச மொழியைப் போதனை மொழியாக்கும் பொறுப்பற்ற யோசனையைக் கேட்டு நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம். இப்படி ஒரு யோசனை தோன்றியிருப்பதே எங்களைக் கவலையிலும் கலக்கத்திலும் ஆழ்த்தியுள்ளது' என்று பம்பாய் சர்வகலாசாலையைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் உபஅத்யட்சகருக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். 'ஒபினியன்' பத்திரிகை சமீபத்தில் தந்த தகவல் இது.

ஃஃஃ

ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் செயலாற்றும் விதத்தில் ஸ்ரீ மொரார்ஜி அதிருப்தி தெரிவித்துள்ளார். போட்டியில்லாத ஏகபோக்கியம் தோல்விதான் அடையும் என்று முன்பே அவருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதே! இப்போது பொது இன்ஷூரன்ஸையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள். அதுவும் இதே கதியைத்தான் அடையும். 'சர்க்கார் கஜானாவை நிரப்பிக் கொள்ளவே இந்த ஏற்பாடுகள்; மக்களின் அதிகக் காப்புக்காக அல்ல' என்ற உண்மையை ஸ்ரீ மொரார்ஜி ஏன் ஒளிக்க முயல்கிறார்?


ஃஃஃ

'தமிழ் மக்களின் கோரிக்கைப்படி மொழிப் பிரச்னையை மத்திய அரசாங்கம் தீர்க்காவிடில் எங்கள் அபேட்சகர் ராஜிநாமா செய்து விடுவார்' என்று தென் சென்னை காங்கிரஸ் வேட்பாளர் திரு ராஜம் ராமசுவாமியின் சார்பில் திரு காமராஜ் பேசுகிறார். கேட்க விநோதமாக இருக்கிறது. 'ஆங்கிலத்துக்காக இறுதிவரை போராடுவேன்' என்று என்னிடமும் திரு ராஜம் ராமசுவாமி உறுதி சொன்னார். அவ்வாறயின் அவர் தி. மு. க. வுக்கு எதிராகத் திரு காமராஜின் பாசறைக்குள் புகுந்திருக்க வேண்டியதில்லை. சிலந்தியின் அழைப்பை ஏற்பதற்கு மற்றப் பூச்சிகள் மறுத்தபோது இவர் ஏற்றிருக்க வேண்டியதில்லை. அல்லது தேர்தலில் தி. மு. க. வுக்கு ஆதரவு தரும் சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் பெர்மிட் — லைசென்ஸ் ஆட்சி தான் வேண்டும் என்று திரு ராஜம் ராமசுவாமி போராடப் போகிறாரா? இல்லாவிடில், எந்தப் பிரச்னை எப்படிப் போகிறது என்பதில் கவனமின்றி, ஒரு ஸ்தானத்தைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகவே இப் போர் செய்யப்படுகிறதா?

பக்தி செய்வதற்குத் தத்துவம் தெரிய வேண்டுமென்பதில்லை. தத்துவக்காரர்கள், ''கோயில் சிலையில்தான் சுவாமி இருக்கிறாரா? எங்கும்தானே இருக்கிறார்?'' என்கிறார்கள். ஆனால் எங்கும் சுவாமி இருக்கிறார் என்கிற உண்மை ஞானம் நமக்கு வந்து விட்டதா? அப்படி வந்திருந்தால் கோயில் தூணில் சாப்பிட்ட கையைத் துடைப்போமா? அந்தக் காலத்தில் பகவான் அந்தத் தூணில் இல்லை, உள்ளே கருப்பக் கிருகத்துச் சிலையில் இருக்கிறார் என்றுதானே பாவிக்கிறோம்? இந்த மட்டும் பாவனை இருந்தாலே போதும். கோயிலுக்குப் போகிறது. அங்கே உள்ள விக்கிரகத்தில் மட்டும் சுவாமியைத் தரிசனம் பண்ணுகிறது. அவரையே தியானம் செய்கிறது என்ற அளவில் ஆரம்பித்தாலே போதும். காலக் கிரமத்தில் உண்மையான பக்தி உண்டாகி, 'பகவான் கோயிலில் மட்டும் இல்லை; அவர் இல்லாத இடமே இல்லை' என்ற தத்துவ தரிசனத்தை அடைய முடியும்.



காமகோடியின் கருணைமொழி



உஷ்... இருமலை நிறுத்தும் சக்திவாய்ந்த கஃப் மிக்சர் வேலை செய்கிறது.

பார்முலா 44 இருமலை விரைவாக நிறுத்துகிறது... சளிக்கட்டை அகற்றுகிறது. அதன் துணைகொண்டு இரவு முழுவதும் அயர்ந்து தூங்குங்கள்.

விரைந்து செயல் புரியும் சக்தி வாய்ந்த பார்முலா 44, இருமலை அது ஆரம்பமாகும் இருமல் கட்டுப்பாடுக் கேந்திரத்திலேயே தடுத்து நிறுத்துகிறது. முதல் டோஸ்* சாப்பிட்டதும், இந்த கஃப் மிக்சர் நீடித்த இதத்தை அளிக்கவே தயாரிக்கப்பட்டதென்று நீங்கள் அறிவீர்கள். முக்கியமாக ஜலதோஷம், ஃப்ளு மற்றும் ப்ராங்கைடிஸினால் உண்டாகும் இருமலை அடக்க பார்முலா 44 மிகச்சிறந்தது.

** விரைவிலே நிச்சயமான நிவாரணம் பெற சரியான டோஸை பின்பற்றுங்கள்*



விக்ஸ்

பார்முலா 44

உலகிலே மிக அதிகமாக விற்பனையாகும் கஃப் மிக்சர்

ரூ. 10,000 ரொக்கப் பரிசுகள்

உன்னதமான உங்கள் புகைப்படத்திற்குப் பெரியதோர் பரிசைப் பெறுங்கள்!



இரண்டு முதல் பரிசுகள் ரூ. 2,500 ஒவ்வொன்றும்.
இரண்டு இரண்டாம் பரிசுகள் ரூ. 1,000 ஒவ்வொன்றும்.
இரண்டு மூன்றும் பரிசுகள் ரூ. 500 ஒவ்வொன்றும்.
இரண்டு நான்காம் பரிசுகள் ரூ. 100 ஒவ்வொன்றும்.
36 ஆறுதல் பரிசுகள் ரூ. 50 ஒவ்வொன்றும்.

Agfa க்ளிக் III



க்ளிக் III காமிரா விசிறிகள் தங்கள் குடும்பத்தினர், வீட்டுப் பிராணிகள், தோட்டங்கள், உல்லாச விடுதிகள் மற்றும் மனதிற்கினிய காட்சிகள் யாவையும் ஒளி சிந்தும் புகைப்படங்கள் ஆக்கி மகிழ்கிறார்கள். நீங்களும் அந்த உல்லாசக் குழுவைச் சேர்ந்தவர்தாமே? இல்லையெனில், விலை அதிகமற்ற ஒரு ஆக்பா க்ளிக் III வாங்கி, இம் மாபெரும் புகைப்படப் போட்டியில் கலந்து கொள்ளுங்கள். எளியதோர் படத்தைகொண்டு பெரியதோர் பரிசைப் பெறுங்கள். உங்கள் அருகமைந்த ஆக்பா-கேவார்ட் வியாபாரியிடமிருந்து ஒரு பிரவேச் தாளைப் பெறுங்கள், அல்லது எங்களுக்கு எழுதுங்கள்: காம்படிஷன் டிபார்ட்மென்ட், ஆக்பா-கேவார்ட் இந்தியா லிட்., கஸ்தூரி பில்டிங், ஜே. டாடா ரோடு, பம்பாய் 1.

ஆக்பா க்ளிக் III உலகப் பிரசித்தி பெற்ற ஒரு நம்பத் தகுந்த காமிரா. கணத்தில் 'கிளுக்' கலாம்—இலக்குப் பார்த்து இயக்கினால் போதும். சிக்கனத்திற்குச் சிக்கனமாக ஒவ்வொரு பிலிமிலும் 12 பெரிய (6 x 6 cm) படங்களை எடுக்கிறது. நீடித்த மனத் திருப்திக்கு வாங்குங்கள் ஒரு க்ளிக். விலை ரூ. 46/50 மட்டுமே. (ஸ்தல வரிகள் தனி.)

AGFA

இன்றே 'க்ளிக்' செய்யத் தொடங்கி, உங்கள் பிரவேசத் தாள்களை டிசம்பர் 31, 1967-க்கு முன்பாக எங்களுக்கு அனுப்புங்கள்.

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிட்., பம்பாய் புது டெல்லி கல்கத்தா சென்னை

CHAG-97-203 TM

சிறுகக் கட்டிப் பெருக வாழ்!

க. சந்தானம்

பகல் கனவு கண்டு பெரிய மாளிகையைக் கட்டத் தொடங்கிப் பாதியில் மேலே கட்ட முடியாமலும் விட்டுவிட முடியாமலும் திண்டாடுவது புத்திசாலித்தனமல்ல. சக்திக்கேற்றவாறு முதலில் சிறு குடிசை கட்டிக்கொண்டு, அந்த ஓட்டு வீடாக மாற்றி முடிவில் மாளிகையாகச் செய்வதே அறிவாளிகள் செயலாற்றும் முறையாகும். நமது சக்திக்கு மிஞ்சியே திட்டம் போடுவோம், திட்டத்தில் மதிப்பிட்ட தொகைகளுக்கு அதிகமாகவே செலவு செய்வோம் என்ற தோரணையில் பாரதத்தின் பொருளாதார முன்னேற்றம் சென்ற பதினேழு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அது நடுவில் தடைபட்டுத் தவிப்பதில் ஆச்சரியம் என்ன ?

ஆசியா முழுவதிலும் எங்கள் அணைகளே உயர்ந்தவை, எமது எஃகு சாலைகளே பெரியவை, எங்கள் ஆராய்ச்சிக் கூடங்களே அற்புதமானவை என்று பிரசாரம் செய்யும்போது பேசுவோருக்கும் கேட்போருக்கும் மகிழ்ச்சி பொங்குகிறது. ஆனால் பாக்ரா அணையில் சேதமுண்டாகி விட்டது, நாகார்ஜுன சாகரில் பாலம் உடைந்து விட்டது, ரூர்கேலா எஃகு ஆலையில் பழுது பார்க்க ஜெர்மனியிலிருந்து நிபுணர்கள் வரவேண்டும், துர்க்காபூர் எஃகு ஆலையில் அஸ்திவாரம் இறங்கி விட்டது என்று படிக்கும் பொழுது துக்கமாக இருக்கிறது.

எல்லாத் திசைகளிலும் ஒரே காலத்தில் முன்னேற வேண்டும் என்று விரும்புவது பணக்கார நாடுகளுக்குக் கூட இயலாது. அப்படியிருக்க, ஏழை பாரதம் அக்கொள்கையை ஏற்றால் களைத்து மயங்க வேண்டியதுதான். இப்பொழுது நாட்டின் முன் நிற்கும் முக்கியப் பிரச்னை, இதுவரையில் பெற்ற அநுபவத்தின் படிப்பினையை ஏற்று, நமது முறைகளை மாற்றிக் கொள்ள அறிவும் ஆற்றலும் நமது தலைவர்களுக்கும், அரசாங்கங்களுக்கும் இருக்கின்றதா என்பதே.

உணவுப் பிரச்னை மிகவும் முக்கியமானது, அவசரமானது என்பதைப் பற்றிச் சிறிதும் சந்தேகமில்லை. அதன் வளர்ச்சிக்கு வேண்டிய வழிகளும் அனைவரும் அறிந்தவைகளே. நல்ல விதை, நீர்ப்பாசனம், பருவ மழை, உர வகைகள், லாபகரமான விலைகள் இவை அனைத்தும் சரிவரக் கூடினால் நல்ல மாசூல் கிடைப்பது நிச்சயம். ஆனால் திடீரென்று கோடிக்கணக்கான குடியானவர்களை முற்றிலும் புதிய முறைகளைக் கையாள வேண்டும், ஒரு போகத்தை உடனடியாக இரு போகமாக்க வேண்டும், விளைந்த தானியங்களை அரசாங்கத்திடம் கொடுத்துவிட வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தால் பிரசாரத்துக்கும் பணச் செலவுக்கும் தகுந்த உற்பத்திப் பெருக்கு இராது. புதியரக நெல் விதைகளைப் புகுத்துவது நலமே. ஆயினும் திடீரென்று அதன் உபயோகத்தைப் பெருக்குவதால் பல இடங்களில் குழப்பமும், நஷ்டமும் நேரிடும்.

ஜனப் பெருக்கத்தைத் தடுப்பது அவசியமென்றும் அதற்குக் கர்ப்பத்தடை முறைகளைக் கட்டுப்பாடுகளுடன் உபயோகிப்பதால் கெடுதல் இல்லை என்றும் நம்புகிறேன். ஆனால் கன்னிப் பெண்களிடமும், பள்ளி மாணவர்களிடமும் தடை வளையங்களையும் மலட்டு மாத்திரைகளையும் ரண சிகித்ஸை முறைகளையும் பற்றிப் பலத்த பிரசாரம் செய்வதால் அருவருப்பு தான் உண்டாகும். அதிகம் பேசாத தொண்டர்கள் பிரசவ ஆஸ்பத்திரிகளிலும், மூன்று குழந்தைகளுக்கு அதிகமாக உள்ள தம்பதிகளிடமும் அந்தரங்கமாகப் பேசி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அளிப்பதே தகுந்த முறையாகும். காந்தியடிகள் உபதேசித்த இந்திரிய நிக்ரகத்துக்குப் பக்கபலமாகவே செயற்கை முறைகளைப் பிரசாரம் செய்ய வேண்டும். இல்லாவிடில், குடும்பங்கள் சீர்கெட்டு நாடு அழிந்துவிடும்.

சக்திக்குட்பட்ட சாதனைகளைத் தேடினால், காலமும் முயற்சியும் வீண் போகா. பலனும் பூரணமாகக் கிட்டும். அரசாங்கமென்றால் அதற்கு அளவற்ற ஆற்றல் இருக்கிறது, கணக்கில்லாத செல்வம் இருக்கிறது, நமது தேவைகளை நொடியில் தீர்த்துவிடச் சக்தி பெற்றிருக்கிறது என்ற எண்ணம் நாடெங்கும் மக்களிடம் பரவி வருகின்றது. இது ஒரு பயங்கரமான மதிமயக்கம். தேர்தலில் வெற்றி பெறுவதும், கூடுமானால் மந்திரியாவதுமே வாழ்க்கையின் முக்கிய பலன்கள் என்று எண்ணும் அரசியல்வாதிகள் இதுவே சோஷலிஸம் என்றும், தீவிர வாதம் என்றும் சொல்லி ஏமாற்றி வருகின்றனர். உண்மையில் ஒரு சமூகத்தின் சக்தி தனி நபர்கள், சிறிய கூட்டுகள்; பெரிய ஸ்தாபனங்கள், அரசாங்கம் அனைத்தின் மூலமாகச் செயலாற்றப்படும் பொழுதே பேரளவில் பயன்படுகிறது. ஆரம்பப் பள்ளியிலிருந்து எல்லாக் கல்வியும் அரசாங்கத்தின் மூலமாகவே நடைபெறும் மத்திய பிரதேசம் போன்ற ராஜ்யங்கள் கல்வியில் வெகுவாக முன்னேறவில்லை. சென்னை, பம்பாய் போன்ற பிரதேசங்களில் பெரும்பாலான கல்லூரிகளும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களும் தனியார் ஸ்தாபனங்களால் அமைக்கப்பட்டிருப்பதால் கல்வி நன்கு விரிவடைந்திருக்கின்றது.

'நமது நாட்டிலும் அமெரிக்காவில் போல் குடும்பத்துக்கு ஒரு கார், இரண்டு ரேடியோ, நான்கு டெலிபோன் போன்ற சுக சாதனங்கள் வேண்டாமா? அந்த நிலையை எவ்வளவு சீக்கிரம் அடைவோம்? அவ்விதம் மிதமிஞ்சிய செல்வத்தை நமக்குச் சம்பாதித்துக் கொடுப்பவர்களை நமது தலைவர்களாகவும், மந்திரிகளாகவும் இருக்க வேண்டும்' என்று விரும்புவது சகஜம். அது சாத்தியமானால் தவறுமில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின் அது சாத்தியமாகக்கூடும். ஆனால் சமீப காலத்தில் அது உருவாக முடியாது. பாரதம் பெரும்பாலும் பல ஆண்டுகளுக்குக்

குடிசைகளில்தான் வசிக்க வேண்டும். அந்தக் குடிசைகளைச் சீராக்கி, சுத்தமாக வைத்து, உணவுக்கும் உடைக்கும் பஞ்சமின்றிச் சமாளித்தால் அதுவே பெரிய சாதனை. ஆண்டுக்கு 2, 3 சதம் குடிசை வீடுகள் ஓட்டு வீடுகளாகவும், ஆயிரத்தில் ஒன்று மாளிகையாகவும் மாறக்கூடும். அதிக ஆசை காட்டுவோர் மக்களை ஏமாற்றுவோராவர்.

ஆதலால் சிறுகக் கட்டிப் பெருக வாழ்வதே பாரதத்தின் தற்போதைய லட்சியமாக இருக்க வேண்டும். இதையே காந்தியடிகள் உபதேசித்தார். எளிய வாழ்க்கை என்றால் சோற்றுக்கும் துணிக்கும் தாளம் போடும் நிலையல்ல. மனித வாழ்வுக்கு இன்றியமையாத சாதனம் அனைவருக்கும் சர்வசாதாரணமாகக் கிடைக்கும் சமுதாயமே நமது உடனடியான நோக்கமாகவிருக்க வேண்டும். அதோடு விஞ்ஞானத்தையும், இயந்திரத் தொழில்களையும் நமது சக்திக்கேற்றவாறு வளர்ப்போம். அவற்றுக்காக நமது மக்களைப் பலி கொடுப்பது மூடத்தனமே.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மக்களனைவரும் மானமுள்ள, கஷ்டமில்லாத எளிய வாழ்க்கை வாழ்வதற்குப் போதிய சாதனங்கள் இருக்கின்றன. திடீரென்று பெரும் செல்வமுள்ள பிரதேசமாக மாறுவதற்கு வேண்டிய கனிப் பொருள்கள், மண்ணெண்ணெய் போன்ற இயற்கைப் பொருள்கள் இங்கு அதிகமில்லை. அப் பொருள்களைப் பாரதத்தின் மற்றப் பாகங்களிடமிருந்து வாங்கி, தொழில் திறமையால் அவற்றை உபயோகித்துப் பல பொருட்களை உற்பத்தி செய்து செல்வத்தைப் பெருக்கும் மதியும், திறமையும் மலிந்து கிடக்கின்றன. அவைகளைப் பல துறைகளில் பலவிதமாகப் பிணைத்துச் சிறிது சிறிதாக, ஆனால் ஓயாமல் விடாமுயற்சியுடன் பாடுபட்டால் நாட்டின் முன்னணியில் நாமிருந்து, மற்றப் பிரதேசங்களுக்கும் உதவ முடியும்.

ஒரு வேண்டுகோள்

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களே!

'எக்காரணத்தைக் கொண்டாவது நாங்கள் பதவி விலக நேர்ந்தால் இராணுவ ஆட்சி ஏற்பட்டுவிடும்' — என்று காங்கிரஸ் ஆட்சித் தலைவர்கள் பகிரங்கமாகக் கூறி வந்த நேரத்தில் நன்கு ஆராய்ந்து, தெளிந்து தி. மு. கழகத்திற்கு வாக்களித்து ஜனநாயகத்தில் ஒரு மகத்தான திருப்பத்தைத் துவக்கி வைத்தீர்கள்.

நீங்கள் முன்கூட்டியே எதிர்பார்த்தவாறு அதன் விளைவு மகத்தான வெற்றியில் முடிந்திருக்கிறது. அரசியல் மேதை திரு ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டபடி, ''நம்பிக்கையும், நேர்மையும், ஒற்றுமையும் அவரது (அண்ணாவுடைய) மந்திரி சபை தொடங்கிவைத்திருக்கிற இந்த சகாப்தத்தின் அடையாளங்களாக இருக்கின்றன.''




மிகக் குறுகிய காலமான கடந்த ஏழு மாதங்களில் உங்கள் அன்பிற்குரிய தி. மு. க. அரசு செய்து முடித்திருக்கிற சாதனைகள் கட்சிக்கு அப்பாற்பட்ட நல்லவர்கள் அனைவரின் உளமார்ந்த பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறது. 'ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை' அமுல்படுத்துவதின் மூலம் மக்களுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தி. மு. க. எவ்வளவு கவனமாக இருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டிருக்கிறது. 'மெயில்' ஏடு குறிப்பிட்டது போல் ''அவர் (அண்ணா) அதிகாரத்தில் இருக்கும்வரை எந்த நல்ல மனிதரும் தமிழ் நாட்டைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை'' — இருந்தாலும் நீங்கள் அனைவரும் தமிழ் நாட்டின் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் அண்ணாவுக்கும், அவரது அமைச்சரவைக்கும் துணையாக ஆதரவு தந்து நிற்கிறீர்கள் என்பதை உலகுக்குக்காட்டிக் கொள்ள நேரம் வந்துவிட்டது என்பதையே உங்களுக்குப் பணிவுடன் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும், மத்திய மந்திரி சபையிலிருந்து திரு சாக்ளா பதவி விலகியிருப்பது அவ்வரசு எந்த விதத்திலாவது இந்தியைத் திணிக்க விரும்புகிறது; அதன் காரணமாகவே பல்கலைக் கழகங்களிலிருந்தும், நீதி மன்றங்களிலிருந்தும் ஆங்கிலத்தை நாடு கடத்த முனைந்திருக்கிறது — என்று முன்னே தென்னகத்தில் ஏற்பட்டிருக்கும் அச்சத்தை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. நேர்முக — மறைமுக வழிகளால் திணிப்பு முறைகளை மேற்கொள்ளும் இந்தி ஏகாதிபத்தியத்தை நீங்கள் முழு மனத்துடன் எதிர்க்கிறீர்கள் என்பதைக் காட்டிக்கொள்ள ஒரு அருமையான வாய்ப்பே இந்த இடைத் தேர்தல் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.


அதனால், சென்ற முறை பொதுத் தேர்தலில் நீங்கள் அளித்த தீர்ப்பினை மீண்டும் உறுதிப்படுத்தி என்னை ஆதரித்திடப் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் உதவியை நாடி நிற்கும் அன்பன்,

முரசொலி மாறன்




திருமணம்



மேட்டூர் கெமிகல்ஸ் விற்பனை துணை நிர்வாகி ஸ்ரீ சி. எஸ். ஸ்ரீனிவாசனுடைய குமாரி ஸௌ. சியாமளா, B. Sc.க்கும் ராஞ்சி ஹெவி இஞ்சினீரிங் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த ஸ்ரீ R. ஜகன்னாதன், B.E.க்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்!

யாரோ இவர் யாரோ?



'ஜோ'

''அதுக்கு உங்கப்பன் பணம் குடுப்பானு?''

''என் பேர்லே கிரிமினல் கேஸ்னு எங்கப்பா சும்மாப் பார்த்துகிட்டு இருப்பாரா? மரியாதையா கையெழுத்துப் போட்டுக் குடுத்துடுவாரு!''

அத்தியாயம் 13

ரவியின் ஆத்திரத்தைப் பற்றிச் சிறிதுகூடக் கவலைப்படாமல் பட்டாணியன் அலட்சியமாக நின்று கொண்டிருந்தான். ரவி பொரிந்து தள்ளிய பிறகு பட்டாணியன் சர்வ சாதாரணமாக, ''சரி! பணம் எப்போ தரே சாப்?'' என்றான்.

''என் மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்றான் ரவி.

''பணம் விஷயத்திலே நம்போ யாரையும் நம்பறது இல்லே. வீட்டை நம்ம பேருக்கு எழுதித் தரேன் சொன்னே. எப்போ தரே?''

''சரி... இன்னும் ரெண்டு நாள்லே இந்த வீட்டை உன் பேருக்கு எழுதிப் பத்திரம் தயார் செய்யறேன். நான் கையெழுத்துப் போட்டுக் குடுத்துடறேன். ஆனா எங்கப்பா கையெழுத்தும் இருந்தாத்தான் விக்கிரயப் பத்திரம் செல்லும். அதனாலே அவர் வந்தவுடனே எப்படியாவது இந்த விஷயத்தை அவர்கிட்டே சொல்லி அவர் கையெழுத்தை வாங்கிக் குடுத்துடறேன்'' என்றான் ரவி.

''அவர் கையெழுத்துப் போட முடியாதுனு சொல்லிட்டா?''

''எங்கப்பாவுக்குக் கையெழுத்துப் போடத் தெரியும். அவர் படிச்சவர் தான்.''

''விளையாடாதே, ஸாப். நம்பள்கு வழி சொல்லு!''

''அவர் கையெழுத்துப் போட மறந்துட்டாக்கூட நான் மட்டும் கையெழுத்துப் போட்ட பத்திரம் உன் கையிலே இருக்கும். அதை வெச்சுகிட்டு என் மேலே கேஸ் போடலாமே.''

''என்ன கேஸ்?''

''கிரிமினல் கேஸ். உன்னை மோசம் பண்ணிட்டேன்னு எம்பேர்லே கேஸ் போடு.''

''ஆமா! நீ சொல்றது சர்தான். அப்போ பத்ரம் தயார் பண்ணு ரவி ஸாப்!''

''இனிமே மத்தவங்க யாரும் இல்லாத சமயமா பார்த்து வாய்யா!''

''அச்சா!'' என்று நகர்ந்தான் பட்டாணியன்.

ரவி வீட்டுக்குள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் முத்து வந்து சேர்ந்தான். ராஜரத்தினத்துக்குத் தன் மீது சந்தேகம் வந்ததையும், எதிராஜின் கட்டாயத்தின் பேரில் கிரிஜாவிடம் தான் பேசியதையும், கிரிஜாவும் தானும் காதலர்களாகி விட்டதையும் விவரமாக ரவியிடம் கூறினான் முத்து.

''ஏண்டா முத்து! கிரிஜா உன்னைக் காதலிக்கிறதா உங்கிட்டேயே நேரிடையாச் சொல்லிட்டாளா?'' என்று கேட்டான் ரவி.

''ஆமாண்டா! எங்கிட்டேயே சொல்லிட்டாடா!''

''நான் உனக்குத் தைரியம் சொன்னேனே ஒழிய அவ உன்னைக் காதலிப்பான்னு எதிர்பார்க்கவேயில்லே, முத்து. எனக்கே ரொம்ப ஆச்சரியமா இருக்குது. என்னாலே நம்பவே முடியலே!''

''என்னாலேயே நம்ப முடியலையே.''

''அவ உன்னைக் காதலிக்கிறேன்னு சொன்ன உடனே நீ என்னடா செய்தே?''

''சிரிச்சேன்.''

''எதுக்கு?''

''எதிராஜ் செடிக்குப் பின்னாலேருந்து காலைத் தொட்டான். எனக்கு ஒரே கிசுகிசுப்பு. சிரிச்சுட்டேன்.''

''அட மடையா! எதிராஜைக் கூட வெச்சுக்கிட்டேவா காதல் வார்த்தை பேசினே? உனக்கு வெட்கம், மானம் கிடையாது. அவன் செடிக்குப் பின்னாலே இருக்கிறபோது, அவன் எதிரிலேயே கிரிஜாவைப் பார்த்து 'நான் உன்னைக் காதலிக்கிறேன்'னு சொன்னியா? சே!''

''நான் சொல்லலியே! எதிராஜ் தானே சொன்னான்!'' என்றான் முத்து பெருமையாக.

''என்னது? எதிராஜ் சொன்னானா?''

''ஆமாம். எனக்குத் தைரியம் வரலே. அவனே சொல்லிட்டான். கிரிஜா தான் அவனைப் பார்க்கலையே. அதனாலே நான்தான் சொன்னேன்னு நினைச்சுக்கிட்டு அவளும் பதிலுக்குச் சொல்லிட்டா!''

''நீ ஒரு ஆம்பளைன்னு சொல்லிக்கவே லாயக்கத்தவண்டா.''

''நான் சொல்லிக்கிற இல்லையே!''



''அது போகட்டும் அப்புறம் அவ என்ன சொன்னா?'' என்று ரவி கேட்டான்.

''ஒண்ணும் சொல்லலே. அதுக்குள்ளேதான் ராஜரத்தினம் வந்துட்டாரே!''

''அவர் என்ன சொன்னாரு?''

''அசோக்கைச் சீக்கிரம் குணப்படுத்தாட்டி வீட்டை விட்டு போக வேண்டியதுதான்ற மாதி

ரிப் பேசிப்பிட்டாரு. டேய் ரவி, அந்த அசோக்குக்கு உடம்புக்கு என்னன்னு எனக்குப் புரியவே இல்லே. என்னைப் பார்க்கிற போதெல்லாம் நல்லாத்தான் துரத்துது. நான் எப்படிரா அதைக் குணப்படுத்தறது?''

''குணப்படுத்தாட்டிக் காதலே 'கட்' ஆயிடும் போலிருக்குதே.''

''ஆமாண்டா. அப்படி ஆகாமலிருக்க நீதாண்டா எனக்கு வழி காட்டணும்.''

''இதென்னடா பிரமாதம்? நாளைக்கு எல்லாரையும் நைஸா வெளியிலே அனுப்பிச்சுடு. அப்புறம் ஒரு மிருக வைத்தியரை அழைச்சுக்கிட்டுப் போய் அசோக்கைக் காட்டுவோம். அவர் மருந்து எழுதிக் கொடுப்பாரு. அதையே நீ எழுதிக் கொடுக்கிற மாதிரி எழுதி ராஜரத்தினத்திடம் கொடுத்திரு''

''நாய் மருந்தை அவருக்கு எதுக்குடா குடுக்கணும்?''

''எழவு! நீ மருந்து பேர் எழுதி அவர் கையிலே குடு. அவர் மருந்தை வாங்கி நாய்க்குக் குடுப்பாரு!''

''ஓ! ஆமாம். ஆமாம்! நாய் குணமாயிடும். நாம் தப்பிச்சுக்கலாம். பிரமாதமான ஐடியா? ரவி நீ பெரிய மேதாவி. நீ இருக்கிற வரைக்கும் எனக்குக் கவலையே கிடையாது'' என்று முத்து நன்றி தெரிவிக்க, அவர்கள் மகாநாடு கலைந்தது.

அடுத்த நாள் காலையில் ரவி, வழக்கம் போல் சின்னதுரை வீட்டுக்குச் சென்று அவன் முதலில் சந்தித்தது சித்ராவைத்தான். அவள் முதலில் கேட்ட கேள்வி பட்டாணியனைப் பற்றித்தான். ''ரவி! நேத்து உங்க வீட்டுக்கு ஒருத்தர் வந்தாரே, அவர் யாரு?''

''யார் வந்தாங்க?'' ரவிக்கு சித்ராவின் கேள்வி புரியவில்லை. சித்ரா பட்டாணியனைப் பார்க்கவில்லை என்றுதான் அவன் நினைத்திருந்தான்.

''அதான். நான் புறப்பட்டபோது ஒருத்தர் வந்தாரே. நீங்க கூடக் கோபமா அவர்கிட்டக் கத்தினீங்களே. பத்தான் மாதிரி...''

ரவிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''ஆமாம். பத்தான் மாதிரி..... பத்தான்'' என்று உளறிக் கொட்டினான்.

''அவன் ஏன் அங்கே வந்தான்?''

''நானும் இதையேதான் அவன் கிட்டக் கேட்டேன். ஏண்டா இங்கே வந்தேன்னு தான் கேட்டேன்.''

''உங்களுக்கு அவனைத் தெரியாதா?''

ரவி ஒரு நிமிஷம் யோசித்தான். பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக, ''சித்ரா, தயவு செய்து இந்த விஷயத்தைப் பற்றி என்கிட்ட ஒண்ணும் கேக்காதீங்க. உங்க கிட்டப் பொய் சொல்ல நான் விரும்பலே. ஆனா அதைப் பத்திக் கேட்டா, நான பொய்தான் சொல்ல வேண்டியிருக்கும்'' என்றான்.



''மிஸ்டர் ரவி! அப்போ...''

''...வேறெ விஷயத்தைப் பற்றிப் பேசுவோமா?''

சித்ரா பதில் பேசவில்லை. மாடியை நோக்கிச் சென்றாள். ரவியைப் பற்றி ஒரு விதத் தீர்மானத்துக்கும் வர முடியாமல் தவித்தாள். எல்லாவற்றையும் பற்றி அலட்சியமாக, சர்வ சாதாரணமாகப் பேசி அலசிக் கட்டும் இந்த விஷயத்தில் மட்டும் ஏன் இப்படிப் பேச வேண்டும்? ஆனாலும் அவன் பேசிய முறை அவளுக்குப் பிடித்திருந்தது. தான் சொல்வதில் திருப்தியுள்ளவன் போல் ஒரு தன்னம்பிக்கை நிறைந்த கண்டிப்பு அவன் குரலில் தொனித்தது. அயோக்கியனிடம் கண்டிப்பு இருக்காது. குழைவுதான் இருக்கும். கண்டிப்பு இருக்குமிடத்தில் கண்ணியம் இருக்கும். ஆனால் பட்டாணியனைப் பற்றிப் பேச ரவி மறுத்ததிலிருந்தே அவன் எதையோ மறைக்கிறான் என்பதும் நிதர்சனமாகத் தெரிந்தது. இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டே சித்ரா மேலே பேசாமல் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

எப்படியாவது சித்ராவின் கவனத்தைப் பட்டாணியன் விவகாரத்திலிருந்து அகற்றித் தன்னைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படச் செய்ய வேண்டுமே என்று ரவி எண்ணிக்கொண்டிருக்கும்போது சின்னதுரை உள்ளேயிருந்து வந்தார்.

''ஹலோ! வாப்பா ரவி!''

''குட் மார்னிங் ஸார்.''

''ரவி இன்னிக்குச் சாயந்திரம் உனக்கு ஒண்ணும் வேலை இல்லையே?'' என்று கேட்டார் சின்னதுரை.

''இல்லை, ஸார்! ஏன்?''

''ஒண்ணும் இல்லை. சாயந்திரம் ஏதோ காலட்சேபம் இருக்குதாம். சித்ராவும், அவ அம்மாவும் காரை எடுத்துக்கிட்டுப் போயிடப் போறாங்க. நான் இங்கேயே தனியா 'போர்' அடிச்சுக்கிட்டிருக்கணும்: நீ வாயேன் இங்கே!''

''ரெண்டு பேருமா சேர்ந்து போரடிச்சுக்கிட்டிருக்கலாமா?''

''அதுக்கு இல்லையப்பா, பொழுது போக்காப் பேசிக்கிட்டிருக்கலாம்.''

இதைக் கேட்டுக் கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்தாள் சித்ரா.

''ஏம்பா! வீட்டிலே உட்கார்ந்து அரட்டை அடிச்சாலும் அடிப்பீங்க, காலட்சேபத்துக்கு வர மாட்டீங்க. இல்லே?'' என்று கேட்டாள்.

''அங்கே எவன் வருவான்? சுத்த 'போர்''' என்றார் சின்னதுரை.

''ஆமாம்! ரவி மாதிரி ஒரேஜிதங்க இருக்கிற வரைக்கும் இப்படித்தான் பேசுவீங்க'' என்று சித்ரா ரவியைச் சாடினாள்.

சித்ராவுக்குத் தன்மீது ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட இதுவே சந்தர்ப்பம் என்று எண்ணினான் ரவி. ''என்ன அப்படிச் சொல்லிட்டீங்க. எனக்குக் காலட்சேபம்னா உசிரு. ஒரு பாகவதரை விட மாட்டேனே நான். ஸார், இன்னிக்குச் சாயந்திரம் நாமும் காலட்சேபத்துக்குப் போகலாமே!'' என்றான் ரவி.

''என்னப்பா இது! நீகூட இந்த மாதிரிப் பேசறே?'' என்றார் சின்னதுரை.

ரவி சித்ராவைப் பார்த்து, ''நீங்க உள்ளே போங்க. நான் எப்படியாவது உங்கப்பாவை இன்னிக்குச் சாயந்திரம் காலட்சேபத்துக்கு வரவழைக்கிறேனா இல்லையா, பாருங்க!'' என்றான்.

சித்ரா, ''சரி, பார்க்கிறேன்'' என்று உள்ளே செல்ல, சின்னதுரை ''ரவி, நீ சொன்னாக்கூட அங்கேயெல்லாம் நான் வரமாட்டேன் தெரிஞ்சுக்க'' என்று தீர்மானமாகக் கூறினார்.

ரவி, ''ஸார்! நான் சொல்றதைச் சொல்லிடறேன். அதைக் கேட்டுவிட்டு அப்புறம் வருவீங்களா மாட்டீங்களா என்பதைச் சொல்லுங்க'' என்று ஆரம்பித்தான்.

''என்ன, சொல்லு!''

''ஸார், எனக்கு மட்டும் காலட்சேபத்துலே 'இன்ட்ரஸ்டா'? கிடையவே கிடையாது. இருந்தாலும் இன்னிக்குச் சாயந்திரம் உபந்யாசம் செய்யறாரே அவர் புரோக்ராமுக்கு நான் போகாம இருக்கவே மாட்டேன். ஏன் தெரியுமா?''

''ஏன்?''

''அவர் கதைக்கு நடுவே நைஸா அடுத்த ரேஸுக்கு டிப்ஸ் குடுக்கிறார். நல்லாக் கவனிச்சுக்கிட்டே வந்தோம், நடுநடுவே நாளைய ரேஸ்லே ஓடற குதிரை பேர் வரும். அந்தக் குதிரை ஜெயிக்கும். நான் கரெக்டா டிப்ஸ் குடுக்கிற ரகசியமே இதுதான்'' என்று முடித்தான் ரவி.

''நிஜமாகவா?''

''நீங்க இன்னிக்கு வந்து பாருங்க.''

சின்னதுரை அதற்கு மேல் யோசிக்கவில்லை.

''சித்ரா'' என்று அழைத்தார். சித்ரா வந்தாள். ''இன்னிக்குச் சாயந்



திரம் நானும் காலட்சேபத்துக்கு வரேன். ரவியும் வரான்'' என்றார்.

சித்ரா பதிலே பேசவில்லை. ''நீ யார்! எப்படி இந்தக் காரியத்தைச் சாதித்தாய்? நீ உண்மையிலேயே ஒரு பெரிய மனிதன்தான்!'' என்று ரவியை நோக்கி அவள் கண்கள் பேசின.

தம் வாழ்க்கையிலேயே முதல் முறையாக அன்று மாலை ஒரு உபந்நியாசத்திற்குச் சென்றார் சின்னதுரை. சின்னதுரையும் ரவியும் ஆண்கள் பக்கம் சென்று அமர, சித்ராவும் பார்வதியம்மாளும் பெண்கள் பக்கம் சென்று உட்கார்ந்தார்கள். பலதரப்பட்ட மனிதர்கள் அங்கு கூடியிருந்தார்கள். அவர்கள் பேச்சிலிருந்தே ஒருவாறு அவர்கள் தரத்தை ஊகித்துக்கொள்ளலாம். ஒரு இளைஞன் மற்றவனிடம் ''என்னடா இப்படி வந்துட்டே?'' என்று கேட்க, அவன் ''ஒண்ணுமில்லேடா. பொழுதே போகலே. சும்மா வந்தேன். இதோ இப்பவே போயிடுவேன். ஒரு அஞ்சு நிமிஷம்!'' என்கிறான். வந்ததே அவமானம், ஐந்து நிமிடத்துக்கு மேல் தங்கினால் மற்றவன் தன்னைப் பற்றிக் கேவலமாக நினைத்துவிடுவான் என்கிற பயம். இப்படிச் சிலர். ஒரு வயதான பெண்மணி மற்றவளிடம் கூறுகிறாள்: ''என் பெரிய பையன், மாட்டுப் பொண்ணு பண்ற அட்டகாசம் சகிக்க முடியலே. வீட்டுலே இருப்புக் கொள்ளலே. அதான் சித்தே விச்ராந்தியா இருப்போம்னு வந்தேன்.'' இது ஒரு ரகம். ஒரு பெரியவர், தம் சகபாடியிடம், ''என்ன இவன் கதையெல்லாம் உளர்றானுமே! சுத்தப் பேத்தலாம். என்னதான் சொல்றான் பார்க்கலாமேன்னுதான் வந்திருக்கேன்!'' என்கிறார். 'உபந்யாஸகர் சொல்லி நான் ஒன்றும் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அவரை எடை போடவே வந்திருக்கிறேன்' என்று சொல்லாமல் சொல்லிப் பிரகடனம் செய்து கொள்ளும் ஒரு கோஷ்டியைச் சேர்ந்தவர் அவர்.

ஒரு பெண் தன் சிநேகிதியிடம் ''நீ இவர் கதையைக் கேட்டதில்லையே! நிறைய ஜோக்ஸ் எல்லாம் சொல்லுவார். ரொம்பத் தமாஷா இருக்கும். சினிமாப் பார்க்கிற மாதிரியே இருக்கும், தெரியுமோ!'' இப்படியும் சிலர். சினிமாவின் ஸ்தானத்தில் உபந்நியாஸத்தையும் ஒரு பொழுது போக்காக மதிப்பவர்கள் இவர்கள்.

இப்படிப் பலரகப்பட்ட மனிதர்களுக்குக் கதை சொல்லும் உபந்நியாசகர் வந்து சேர்ந்தார். அவர் ஒரு



''எனக்கு வேலை கொடுத்ததற்கு ரொம்ப நன்றி... ஒரு சின்ன வேண்டுகோள்.''

'' என்ன ?''

''என்னைத் தேடிண்டு பால்காரன், தயிர்க்காரன், லாண்டரிகாரன், ஜவுளி என்று யார் இங்கே வந்தாலும் நேத்தே நான் ராஜிநாமாப் பண்ணி விட்டதாகச் சொல்லணும்.''

ரகம்! வந்து மேடையில் அமர்ந்தவுடன் முதல் இரண்டு மூன்று வரிசைகளில் அமர்ந்திருப்பவர்களை ஒரு கண்ணோட்டம் விட்டார். 'இன்று வந்திருக்கும் பெரிய மனிதர்கள், பிரபலஸ்தர்கள் யார்' என்று குறித்துக்கொண்டு அவர்கள் பெயர்களைக் கதையின் நடுவிலே புகுத்தி அவர்களிடம் நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ளக் கையாளும் வழியோ, என்னவோ! மனிதனை தெய்வத்துக்கு ஒப்பிட்டு, தெய்வத்தின் அளவுக்கு மனிதனை உயர்த்தி மனிதனின் நிலைக்கு தெய்வத்தைத் தாழ்த்தும் ரகம் அவர்.

கதை ஆரம்பமாகியது. சித்ராவுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் அம்மாள், சித்ராவிடம் ''என்னம்மா இது அதிசயமாயிருக்குதே. உங்கப்பா எப்படி இங்கே வந்தாரு? அவருக்கு இதெல்லாம் பிடிக்காதே?'' என்று கேட்க, சித்ரா பெருமையாக, ''அவர் இப்பவெல்லாம் ரொம்ப மாறிட்டார். அப்பா பக்கத்திலே இருக்காரே அவர் அப்பாவினுடைய சிநேகிதர். அவரோட சேர்ந்ததுலேருந்துதான் அப்பாவுக்கு இதிலெல்லாம் ஒரு பக்தி வந்திருக்குது'' என்று கூறி மகிழ்ந்தாள். ரவியின்மீது அவளுக்கு இப்போது நிஜமாகவே நல்ல அபிப்பிராயம் வந்து விட்டது. அத

ளுல்தான் தன்னையு மறியாமல் அவ்வளவு உயர்வாகப் பேசிவிட்டாள்.

இந்தச் சமயத்தில் பாகவதர் அனுமார் இலங்கையைத் தாண்டும் கட்டத்தை விஸ்தாரமாக வர்ணித்துக் கொண்டிருந்தார். சின்னதுரைக்குப் பொறுமை தாங்க முடியவில்லை.

''என்னப்பா ரவி, இன்னும் டிப்ஸை குடுக்கலையே!'' என்று அவனைத் துளைத்துக்கொண்டிருந்தார். ரவியும் உபந்நியாஸத்தில் ஒருவிதக் கவனமும் இல்லாமல், இது சீக்கிரமா முடிந்தால் நன்ருக இருக்குமே என்று நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். சின்னதுரையிடம் அடிக்கடி ரவி, ''கவனிச்சுக்கிட்டே வாங்க. டிப்ஸ் வரும்'' என்று கூறியிருக்கவே, அவர் மிகவும் உன்னிப்பாகவே இருந்தார். டிப்ஸ் வரவில்லை. அவருக்குத் தூக்கம் வந்தது. அவர் தலை அசைந்து அசைந்து, ரவியை முட்டியது. ரவியும் சற்றே கண்ணயர்ந்தான். சித்ராவிடம் முதலில் பேசிய அம்மாள் சித்ராவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். ''என்னவோ பக்தி, அப்படி இப்படின்னு சொன்னியே, இவ்வளவுதாஞ உங்கப்பா லட்சணம்?'' என்று கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை. சித்ரா கோபத்தை அடக்கிக்கொண்டு எழுந்து போய்விடலாமா என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

உபந்நியாஸகர் அனுமானைப் பற்றி வர்ணித்துக் கொண்டிருந்தார்: ''எப்படித் தாண்டினுன் அனுமான்? அப்படியே ராக்கெட் மாதிரித்தாண்டினுன். ராக்கெட் மாதிரின்னு எப்படி? அதாவது ராக்கெட் லேகியம் சாப்பிட்டவன் மாதிரி! அனுமாருக்கு அவ்வளவு சக்தி! ராக்கெட் லேகியம் சாப்பிட்டா அனுமாரைப் போல சக்திவாஞகவும் பலவாஞகவும் ஆகலாம். அதாகப்பட்டது அனுமான் ராக்கெட் மாதிரி இலங்கையைத் தாண்டினுன்.''

உபந்நியாசகர் இப்படிக் கூறிக்கொண்டிருந்தது சின்னதுரையின் காதுகளில் லேசாக விழுந்தது. அவர் அப்போது அரைகுறைத் தூக்கத்தில் இருக்கவே இந்த வார்த்தைகள் அவருக்குக் கேட்டன. ராக்கெட், ராக்கெட் என்று அடிக்கடி பாகவதர்கூறவே, அதுதான் அடுத்த நாள் ரேஸில் ஜயிக்கப் போகும் குதிரை என்று தீர்மானித்து விட்டார் சின்னதுரை. ஆனுல் உண்மையில் உபந்நியாஸகருக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அடுத்த நாள் ரேஸ் இருப்பதும் அதில் ராக்கெட் என்ற பெயரில் ஒரு குதிரை ஓடுவதும் அவருக்குத் தெரியாத விஷயங்கள். பின் ஏன் அவர் அடிக்கடி ராக்கெட் என்று கூறவேண்டும்? காரணம் இருந்தது. அவருடைய மைத்துனன் 'ராக்கெட் லேகியம்' என்ற ஒரு மருந்தைத் தயாரித்து விற்றுக் கொண்டிருந்தான். அவ்வப்போது தமது உபந்யாசங்களில் அந்தப் பெயரைப் புகுத்தி விளம்பரப்படுத்துவது பாகவதர் வழக்கம். இந்த விஷயம் சின்னதுரைக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் 'ரவி சொன்னது போல் பாகவதர் டிப்ஸ் கொடுத்தே விட்டார்' என்ற ஆனந்தத்தில் தம்மை மறந்தார். பரவசமடைந்தார். எழுந்தார்.

அப்போதுதான் அரை குறைத் தூக்கம் கலந்த வேகத்தில் தம்மை மறந்து தான் இருக்கும் இடத்தையும் மறந்து உரக்க, ''கம் ஆன் ராக்கெட்! கம் ஆன் ராக்கெட்'' என்று கூவினர் சின்னதுரை. அனைவரும் அவர் பக்கம் திரும்பினர். ரவி எழுந்து அவரைப் பிடித்து நிறுத்தினுன். கூட்டமே அவரைப் பார்த்துச் சிரித்தது. சின்னதுரை தம் நிலை உணர்ந்து வெட்கித் தலை குனியச் சித்ராவுக்குப் பக்கத்திலிருந்த அம்மாள், சித்ராவைப் பார்த்து ''என்னம்மா இது? உங்கப்பா இப்படி....?'' என்ருள். சித்ராவுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. ரவியும் அப்பாவுமாகத் திட்டமிட்டு தன்னையும் அம்மாவையும் அவமானப்படுத்தி விருக்கிருர்கள் என்று தீர்மானித்தாள்.. கொட்டகையை விட்டு வெளியேறினுள். ரவி சின்னதுரையோடு அவளிடம் வந்தான். சித்ராவின் முகத்தில் தீப்பொறி பறந்தது. ரவியைப் பார்த்து, ''மிஸ்டர் ரவி, உங்களுக்கு ரொம்ப நன்றி. எங்க மானத்தை வாங்கினது போதும். இனிமே என் முகத்திலே கூட நீங்க முழிக்க வேண்டியதில்லை!'' என்று ஆவேசமாகப் பேசித் தீர்த்தாள்.

ரவி தயக்கத்தோடு ''மிஸ் சித்ரா'' என்று ஆரம்பித்தான்.


''என்னேட இனிமே நீங்க பேச வேண்டியதில்லை. உங்களுக்குக் கொஞ்சமாவது வெட்கம், மானம் இருந்தா, இனிமே எங்க வீட்டுப் பக்கம் வரமாட்டீங்க!'' என்று சீறிய சித்ரா காரில் அமர. அவருடைய தாயாரும் சின்னதுரையும் வாய் மூடி மௌனமாகப் பின் சீட்டில் அமர்ந்தனர். கார் புறப்பட்டது.

ரவி ஒன்றும் புரியாதவனுகத் திகைத்துப் போய் நின்ருன். (தொடரும்)

சாயல்கள் கண்ணுக்கழகாயிருந்தால் போதுமோ!



என்றும் குறிப்பிட்டுக் கேளுங்கள் **நேரோலாக்**



உங்கள் இல்லத்தை எழில்படுத்துவதற்கென, தேர்ந்தெடுக்கப் பல்வேறு வகையான கொள்ளையழகுச் சாயல்கள். புதுமைக் கலை மாறாமல் பல்லாண்டு நிலைத்திருப்பவை. இந்தியாவிலேயே முதன்முதலாக அக்ரிலிக் அடிப்படை கொண்ட எமல்ஷன் பெயிண்டை அறிமுகப்படுத்தியவர்கள்.

குட்லாஸ் நேரோலாக் பெயிண்டுகள்—வாங்கக் கிடைப்பவற்றுள் மிகச் சிறந்தவை

INTER PUB/GNP/3 TAM

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 29, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1

மயிலாசனம்

சரித்திர மாணவன்

இந்திய சரித்திரத்தின் மகோன்னதமானதொரு காலமும், அதிலே மயிலாசனம் ஆட்சி புரிந்த அழகும் நம் நினைவுக்கு வருகிறது. பாரதத்திலே உருவாகி, பாரதத்துக்கு உரிமையாக இருந்த அது இன்றைக்குப் பாரசீக மன்னர் ஷாவின் உடைமையாகி இருக்கிறது. மனிதனின் படைப்பிலே விலை மதிக்கவொண்ணாததொரு பொக்கிஷமாகக் கருதப்பட்ட இம்மயிலாசனத்திலே ஏராளமான பொன்னும் மணியும் மாணிக்கமும் வைத்து இழைக்கப்பட்டிருந்ததாம். மொகலாயர்களின் பொற்காலமான ஷாஜஹானின் ஆட்சியிலே அவரது மேற்பார்வையிலே உருவாகியது இந்த ஒப்பற்ற கலைப் பொக்கிஷம். இம்மயிலாசனம் உருவான கதை சுவாரசியமானது.

ஆலம்பனா ஷாஜஹானின் முன்னிலையில் ஒரு நாள் பொக்கிஷ அதிகாரி வந்து தலை குனிந்து வணங்கி நின்றார். ''பொக்கிஷ அறையிலே இனி பொன்னையும், மணியையும் வைரக் கற்களையும் சேமித்து வைப்பதற்கு இடமில்லை. அப்படி அங்கு அணி மணிகள் அடைபட்டுக் கிடக்கின்றன. இந்த இடநெருக்கடி தீர ஏதாவது செய்தாக வேண்டும்'' என்றார் அதிகாரி. ஜஹாம்பனா சிந்தித்தார்: 'அபூர்வமான வைரங்களைப் பெறுவதும் அவைகளைப் பாதுகாப்பதும் எதற்காக? அந்த வைரங்களை உடைய மன்னருக்குப் பெருமையளிக்கும் வகையில் அவைகளைக் கொண்டு ஒரு சிங்காதனம் செய்வித்தால் என்ன?' புதுமைகளைப் படைத்துப் புகழ்பெற்ற ஷாஜஹானின் உள்ளத்திலே, மயிலாசனம் உருப்பெற்று விட்டது.

பொக்கிஷ சாலையிலிருந்த வைரம், ரத்தினம், மரகதம், கோமேதகம், முத்து, பவழம், நீலம் ஆகிய நவமணிகளையும், பொற்கட்டிகளையும், அரசாங்கப் பொற்கொல்லர்களின் தலைமைக் கொல்லரின் பொறுப்பிலே ஒப்படைக்கச் சொன்னார் மன்னர். மயிலாசனத்துக்கான அமைப்பை விவரித்தார். நாட்டின் மிகச் சிறந்த பொற்கொல்லர்கள் வரவழைக்கப்பட்டனர். ஏழாண்டுகள் இடைவிடா உழைப்பின் முடிவிலே மயிலாசனம் உருவாக்கப்பட்டது. கம்பீரம்மிக்க அந்த அரச இருக்கையின் வெளிப் பக்கத்திலே அபூர்வமான ரத்தினக் கற்களைக் கொண்ட எனாமல் வேலைப்பாடும் உட்புறத்தில் தங்கத்திலே கெம்பு, ரத்தினம், வைரம், வைடூரியம் போன்ற கற்களை நெருக்கமாகப் பதித்து இழைத்துமிருந்தது. இந்த இருக்கையை மரகதக் கற்களிழைத்த பன்னிரண்டு கால்கள் தாங்கின.

ஆசனத்தின் உச்சியிலே இரண்டு மயில்கள் இணைந்திருப்பது போல் உருவாக்கி இருந்தார்கள். மயிலின் உடல் முழுதும் நெருக்கமான வைரக் கற்கள் வைத்து இழைக்கப்பட்டிருந்தன. இவ்விரு மயிலுக்கும் மத்தியிலே ஒரு மரம், அதில் கிளைகள், இலைகள், மலர்கள், கனிகள், சிறு பறவைகள் ஆகியவற்றையெல்லாம் நவரத்தினங்களைக் கொண்டே ஒப்பற்ற அழகுடன் உருவாக்கி இருந்தார்கள். நீலம், பச்சை, கெம்பு, ரத்தினம், முத்து அத்தனையும் வாகவமாகப் பதிக்கப்பட்டிருந்தன. இதன் நட்ட நடுவிலே, சாய்ந்து கொள்ளும் பின்புறத்தின் நடுவிலே, மிகப் பெரிய வைரமொன்றைப் பதித்து ஒளி வீசும்படி செய்திருந்தார்கள். இந்தப் பெரிய வைரத்துக்கு 'ஷா' வைரம் என்று பெயர். பாரசீக மன்னர் ஷா அப்பாஸ் ஷாஜஹானின் முன்னோர்களுக்கு அன்புப் பரிசாக அளித்தது இந்த வைரம். டவெர்னியர் என்ற பிரபல பிரஞ்சு வைர நிபுணர் ஷாஜஹான் காலத்திலேயே மயிலாசனத்தை மிக அருகே சென்று பார்த்து அதன் மதிப்பை வெளியிட்டிருக்கிறார். ஆங்கில நாணயத்தின்படி அது ஆறு மில்லியன் பவுன்கள் மதிப்புடையது என்று கூறியுள்ளார். இது பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் குறிப்பிட்ட மதிப்பீடு. இன்றைக்கு இதன் மதிப்பு எத்தனை இருக்கும்....?

ஆனால் இத்தனை அருமையாகத் தயாரித்த இந்த மயிலாசனத்திலே அதிக நாள் அமர்ந்து அரசாளக் கொடுத்து வைக்கவில்லை ஷாஜஹானுக்கு. மன்னரின் கடைசி நாட்கள் சோகம் நிறைந்ததாக முடிந்தது. சாம்ராஜ்யத்தின் அன்றாட அலுவல்களைக்கூடக் கவனிக்க முடியாமல் பிறரிடம் அரசாட்சியை ஒப்புவிக்கும்படி நோய்வாய்ப்பட்டார். அது மட்டுமா? 1658ல் மன்னரின் கடைசிக் குமாரன் ஔரங்கசீப் சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் தந்தையைச் சிறையிலடைத்து வைத்தான். மயிலாசனத்தை உருவாக்கிய மன்னர் எட்டாண்டுகள் சிறை வாழ்க்கை வாழ்ந்து 1666ல் காலமானார்.

ஷாஜஹானுக்குப் பிறகு மொகலாய ஆட்சி அஸ்தமிக்கலாயிற்று. பிற்கால மொகலாயர்களின் காலத்தில் டில்லி பல முறை கொள்ளைக்கு உள்ளானது. இப்படிக் கொள்ளையிட்டவர்களில் முக்கியமானவர் பாரசீக மன்னர் நாதிர்ஷா. மொகலாய சாம்ராஜ்யத்தின் வடமேற்கு எல்லை நகரமான காபூலைக் கைப் பற்றிக் கொண்ட நாதிர்ஷா அப்போதைய மொகலாய மன்னராக டில்லியிலே அரசாட்சி செய்து வந்த மன்னர் முகம்மது ஷாவுக்கு ஒரு தாக்கீது அனுப்பினார்: ''மொகலாய ;சாம்ராஜ்யத்தின் செல்வம் கொழிக்கும் இரண்டு மாகாணங்களான பஞ்சாபையும் காஷ்மீரையும் தமக்குக் காணிக்கையாக அளித்துவிட வேண்டும்.'' அது தவிர, அந்தப் பாரசீக மன்னன் அப்பட்டமாகவே இன்னுமொன்றும் கூறி விட்டான்: ''புகழ்பெற்ற மொகலாயர்களின் அரச ஆசனமான மயிலாசனத்தை இங்கிருந்து என் நாடான பாரசீகத்துக்குக் கொண்டு செல்லும் எண்ணத்துடனும் வந்திருக்கிறேன்.''


முகம்மது ஷா தம் மறுப்பைத் தெரிவித்து நாதிர்ஷாவின் பேராசையை இடித்துரைத்துப்

...திலும் அனுப்பினார் என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் சில வாரங்களிலே பஞ்சாப் சமவெளியில் தம்மைச் சந்திக்க வந்த மொகலாயப் படையை விரட்டியடித்து வெற்றி கொண்டார் நாதிர்ஷா. கொள்ளையிட்டுச் செல்வதற்காகவே வந்த நாதிர்ஷா தாம் எடுத்துச் செல்லப் போகும் சாமான்களுக்கான பட்டியல் ஒன்றை மொகலாய மன்னர் முகமது ஷாவிடம் நீட்டி அவைகளை அனுப்பித் தருமாறு உத்தர விட்டார். இன்னும் வேடிக்கை என்னவென்றால், அந்தப் பொருள்கள் அத்தனையும் சரியானபடி தம் படை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை மொகலாய மன்னரின் பிரதம மந்திரியிடமே ஒப்படைத்ததுதான். நாதிர்ஷாவின் கொள்ளைப் பொருள் பட்டியலிலே முதலிடம் பெற்றிருந்தது மயிலாசனம்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

மொகலாயர்களின் அரண்மனையை விட்டுச் சென்ற மயிலாசனம் பல மர்மச் சுழல்களில் சிக்கிக் கொண்டது. நாதிர்ஷா இந்த அரிய ஆசனத்தைத் தம்முடன் எடுத்துச் சென்றார் என்பது வரை நிச்சயம். நாதிர்ஷா குர்த் இனத்தவரால் படுகொலை செய்யப்பட்ட போது அது மன்னரின் அரிய பொருள்கள் அடங்கிய பொக்கிஷத்தில் இருந்திருக்கிறது. நாதிர்ஷா இந்த மயிலாசனத்தை மிக மிக நேசித்து வந்தார். எங்கு சென்றாலும் இந்த ஆசனத்தைத் தம்முடனேயே அவர் எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. போர்முனைகளிலும்கூட இந்த ஆசனம் அவருடன் பிரயாணம் செய்யும் என்று சொல்லப்படுகிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலேய யாத்திரிகரான பிரேஸர், பாரசீகத்துக்குச் சென்ற போது கோரசானில் மயிலாசனத்தைப் பற்றி விசாரித்திருக்கிறார். குர்த் இன மக்களில் வயோதிகனான ஒருவன் அப்பட்டமாக, "நாதிர்ஷாவைக் கொலை செய்ததும் நாங்கள் அவரது பாசறையைக் கொள்ளையடித்தோம். மயிலாசனம், முத்து விதானம் இரண்டுமே எங்கள் கையில் சிக்கிக் கொண்டன. அந்த இடத்திலேயே அவைகளை நாங்கள் பங்கிட்டுக் கொண்டு விட்டோம்" என்றானாம்.

மயிலாசனத்தைப் போலவே முத்து விதானமும் மொகலாயர்களின் விலைமதிப்பற்றதொரு பொக்கிஷம். மயிலாசனத்துக்கு மேலாக விரித்துப் பிடிக்கப்படும் அல்லது அமைக்கப்படும் கூடாரம் போன்றதொரு சாதனம். நம் ஊர்களில் ஸ்வாமி புறப்பாட்டின்போது நான்கு கால்களில் தாங்கிய ஒரு விரிப்பை வாகனத்தில் எழுந்தருளியுள்ள ஆண்டவனுக்கு மேலே பிடித்துக் கொண்டு வருவார்களே, அதுபோல். இந்த மயிலாசனத்தில் மன்னர் அமர்ந்திருக்கும் போது மேலே அவருக்கு நிழல் தரும் வகையில் இந்த விலைமதிப்பற்ற வேலைப்பாடமைந்த விரிப்பைப் பொருத்துவார்களாம். மிக நேர்த்தியான பட்டினால் நெய்யப்பட்டு வைரக் கற்களைக் கொண்டு பூவேலை செய்யப்பட்டிருந்தது அது. அதன் நான்குபுறமும் விலைமதிப்பற்ற முத்துக்களால் எல்லை கட்டிக் குஞ்சங்களாக நல்முத்துக்களைக் கோத்துத் தொங்க விட்டிருந்தார்கள். இதுவே மயிலாசனத்தோடு சேர்ந்த முத்துவிதானம். ஆனால் இவைகளையெல்லாம் பார்க்கும் போது இத்தனை விலை மதிப்பற்ற பொருள்களை நாதிர்ஷா தம்மோடு போர்முனைக்கெல்லாம் கொண்டு போயிருப்பாரா என்ற சந்தேகமும் எழத்தான் செய்கிறது.



பாரசீகப் பொக்கிஷ சாலையை நேரில் காணும் வாய்ப்பைப் பெற்ற லார்டு கர்ஸன் தமது நினைவுக் குறிப்புக்களில் புகழ் பெற்ற மயிலாசனத்தை அங்கு தாம் காணவில்லை என்று எழுதுகிறார். பலராலும் புகழ்ந்து வர்ணிக்கப்பட்ட அந்த மயிலாசனத்துக்குப் பதில் வேறு ஒரு மட்டமான நகலைத் தான் அங்கு கண்டதாகக் குறிப்பிடுகிறார். டெஹ்ரான் அரண்மனையில் லார்டு கர்ஸன் கண்ட அந்த மயிலாசனம் நாதிர்ஷாவுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த ஆகா முகம்மது ஷாவினால் செய்யப்பட்டதென்று அப்போதைய பாரசீக மன்னர் கர்ஸனிடம் கூறினாராம். நாதிர்ஷாவின் படுகொலைக்குப் பின் பட்டத்துக்கு வந்த ஆகா முகம்மது ஷா, இறந்த மன்னரின் பொக்கிஷங்களையெல்லாம் கொள்ளையிட்டவர்களைச் சித்திரவதை செய்து அந்தப் பொருள்களைத் திரும்பப் பெற்றிருக்கிறார். அவைகளில் சின்னாபின்னமான மயிலாசனத்தின் பாகங்களும் பல கைப்பற்றப்பட்டிருக்கின்றன. சிதைவுற்ற மயிலாசனத்தின் பாகங்களைப் பொருத்திச் சிறப்பாக அதை மறுபடி உருவாக்குவதற்கான பொறுமையும் காலமும் ஆகா முகமத் ஷாவுக்கு இருக்கவில்லை.

இன்றைக்குப் பாரசீக மன்னர் ஷா அவர்கள் அரியணை ஏறப் போகும் மயிலாசனம், ஷா ஜஹான் உருவாக்கிய ஆசனம்? ஆகா முகமது ஷா உருவாக்கிய ஆசனம், இவைகளிலிருந்து உருப்பெற்றதா அல்லது



" ஏதோ கோபத்தில் இனி, மாமனார் வீட்டு வாசல்படியை மிதிப்பதில்லை யென்று சத்தியம் பண்ணினது ரொம்பத் தப்பாப் போச்சு !"

நாதிர்ஷாவிட மிருந்து கொள்ளையிட்ட பொருள்களை மீட்டு உருவாக்கிய மயிலாசனமா என்பதே இன்றைய ஆராய்ச்சியாளர்களைக் குழப்பும் விஷயமாகும்.

இதனிடையே மயிலாசனத்தைப் பற்றி மற்றொரு விளக்கமும் கூறப்படுகிறது. நாதிர்ஷாவே உண்மையான மயிலாசனத்தைப் போலவே போலி ஆசனமொன்றையும் தயாரித்து வைத்திருந்தார். கொள்ளையர்களால் சூறையாடப்பட்டது இந்தப் போலி மயிலாசனம்தான். நிஜமான மயிலாசனம் அரச வாழ்க்கையின் சுகதுக்க ஏற்றத் தாழ்வுகளிலிருந்தெல்லாம் எப்படியோ தப்பியது, பல கைகள் மாறியது. ஆனால் அத்தனை வருஷங்களில் அது தன் உடலிலிருந்த ஒப்பற்ற பல ரத்தினங்களையும் வைரங்களையும் இழந்து விட்டிருந்தது. இருந்தும் அதன் புகழ் குறையவில்லை. முடிவாக இந்த ஒப்பற்ற மயிலாசனம் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷாரின் கைகளில் சிக்கியது. அவர்கள் இதை மறுபடி தில்லிக்குக் கொண்டு வந்தார்கள்.

புகழ்பெற்ற கோஹினூர் வைரத்தைப் போலவே இந்த மயிலாசனத்தையும் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தனர் பிரிட்டிஷார். மயிலாசனம் தங்களிடம் சிக்கியுள்ள விஷயத்தை மிக மிக ரகசியமாகவே பிரிட்டிஷார் பாதுகாத்தார்கள். தில்லியிலிருந்து 800 மைல்களுக்கு அப்பாலுள்ள பம்பாய்க்கு இம்மயிலாசனம் கொண்டு வரப்பட்டது. க்ராஸ்வெனர் என்ற கப்பலில் அதை இங்கிலாந்துக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் முடிந்து கப்பல் தயாராக இருந்தது. ஆசனம் பம்பாயை வந்தடைந்த மறுநாளே கப்பல் கிளம்பி விட்டது. மயிலாசனத்துடன் க்ராஸ்வெனர் கப்பல் அதே போன்ற விலை மதிக்கவொண்ணாத பல அபூர்வப் பொருள்களைத் தாங்கிச் சென்றது. அத்தனையும் பாரதத்தின் பழம் பெரும் பொக்கிஷங்கள். எத்தனையோ மன்னர்களின் அரண்மனைகளிலிருந்து பறிக்கப்பட்டவை. அந்தக் கப்பலில் சென்ற பொருள்களின் மதிப்பு பத்து மில்லியன் பவுன்கள் என்று மதிப்பிடப்பட்டது.

1782ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வாரத்தில் க்ராஸ்வெனர் கப்பல் பம்பாயிலிருந்து கிளம்பியது. சில நாட்களில் இலங்கையின் துறைமுகமான திரிகோண மலையில் நங்கூரமிட்டு நின்றது. ஜூன் பதினெட்டாம் தேதி திரிகோண மலைத் துறைமுகத்தை விட்டுக் கிளம்பியதைத்தான் உலகம் அறியும். அதன் பிறகு அந்தக் கப்பல் என்ன ஆயிற்று என்பதைப் பற்றி யாருக்குமே எதுவும் தெரியாது. ஆகஸ்ட் பதினான்காம்தேதியன்று கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் எங்கோ ஓர் இடத்தில் புயலில் சிக்கிய அம்மரக்கலம் கடலில் மூழ்கியது.

இந்திய மண்ணில் உருவான ஒப்பற்ற மயிலாசனத்தை இந்துமகா சமுத்திரமே என்றும் தன் வயிற்றில் வைத்துப் பாதுகாக்கும் பாக்கியத்தைப் பெற்றது விந்தைதான் இல்லையா ?

இதுவரை அந்தக் கப்பலோடு மூழ்கிய பொக்கிஷங்களைக் கரையேற்ற பதினாறு முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அத்தனையும் வீண். இப்படி முயற்சி செய்தவர்களில் பிரபல மர்மக் கதை ஆசிரியரான 'ஷெர்லாக் ஹோம்'ஸை சிருஷ்டித்த ஆர்தர் கானன் டாயிலும் ஒருவர்.

1962ம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு சிறிய உல்லாசப் படகு, மயிலாசனத்தைக் கடலினடியிலிருந்து கொண்டு வரும் முயற்சியை மேற்கொண்டது. கடலினடியில் க்ராஸ்வெனர் கப்பலின் பொக்கிஷங்கள் இன்னும் இருக்கின்றன என்பதற்கு அடையாளமாகச் சில விலை உயர்ந்த ரத்தினங்களையும், பொருள்களையும் சாட்சியாகத் தாங்கியபடி அந்தப் படகு டர்பன் துறைமுகத்தை வந்தடைந்தது.


அந்தப் படகின் கடல் மூழ்கிகள் தாங்கள் கண்டவைகளைப் பற்றி ஏதும் வெளியிட மறுத்துவிட்டார்கள். மோசமான காலநிலையும், கடல் கொந்தளிப்பும் தங்கள் மீட்பு வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாமல் தங்களைத் திரும்பச் செய்து விட்டன என்று மட்டும் கூறினார்கள்.


சரித்திரப் புகழ்பெற்ற ஒப்பற்ற மயிலாசனம் மீட்கப்பட்டு மறுபடியும் நம்மிடையே பவனி வரலாம் என்று நம்புவதற்கு இடமிருக்கிறதில்லையா ?

உலக நாடுகள் பல நாகரிகத்தின் தலைவாசலில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்த காலத்தில், பாரதம் நாகரிகத்தின் உச்சியை எட்டியிருந்தது. சித்திரம், சிற்பம், கட்டிட நிர்மாணம், கோவிலமைப்பு, நவமணிகளிழைத்த பொன்னாபரணங்கள் இப்படி ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் சிறந்து விளங்கியது. அந்தப் பாரதம் மீண்டும் எழுமா? காண்போமா ?




பூவிதழ்-மென்மை
Himalaya Bouquet Snow
Himalaya Bouquet Snow
...அத்தகைய
மலர் வதன எழிலுக்கே
ஹிமாலயா புக்கே ஸ்நோ
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு





செய்திப் படங்கள்

ஸ்ரீ காஞ்சி ஆசாரியாரின் பரம பக்தராக, அவரது ஆணைகளைச் சிரசால் வகித்து நிறைவேற்றி வரும் குளித்தலை வழக்குரைஞர் ஸ்ரீ அண்ணாதுரை அய்யங்கார் அவர்களது சஷ்டியப்த பூர்த்தி சமீபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.


★

பீஹார் பஞ்ச நிவாரண நிதிக்குத் தமிழகத்தின் காணிக்கையாக முதலமைச்சர் திரு அண்ணாதுரை ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணனிடம் 'செக்கை'ச் சமர்ப்பிக்கிறார்.

★

பிரேன் ராய் தாம் வரைந்த சுபாஷ் சந்திர போஸின் உருவப் படத்தை ஜெர்மன் அமைச்சருக்கு இந்திய-ஜெர்மன் நட்புறவுக் கழகத்தின் சார்பில் அன்பளிப்பாக வழங்கிறார்.







இலங்கை இருகலை சமய கலாசார சங்கத்தின் சார்பில் திரு கு. அழகிரிசாமி பாரதி விழா சொற்பொழிவுகளில் பங்கு கொண்டு உரையாற்றுகிறார்.

★

சென்ற மாதம் 30ம் தேதி சென்னை தியாகராயநகரில் சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஒரிஸ்ஸா முதன் மந்திரி திரு ஆர். என். சிங் தேவ், பேராசிரியர் ரத்தினசுவாமி, திரு என். ஜி. ரங்கா, திரு எம். ஆர். மஸானி ஆகியோர் பங்கு பற்றிப் பேசினர்.





கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்

அத்தியாயம் 42

எதிர்பாராத பரிசு

ரங்கமணி குளித்துவிட்டு வந்ததும் அவனைச் சாப்பிட அழைத்தாள் திரிவேணி. அவனுக்குப் பசி இல்லை. ஆனால் திரிவேணிக்கு எதுவும் தெரிய வேண்டாம் என்பதற்காக அவள் கூப்பிட்டதும் சாப்பிடச் சென்றான். இருவரும் ஒன்றாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள். குமார் பரிமாறினான். சாப்பிடும்போது ரங்கமணியை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தாள் திரிவேணி. ரங்கமணியும் சமாளிக்கத்தான் முயன்றான். என்னதான் முயன்றும் உள்ளத்தில் குடைந்து கொண்டிருந்த வேதனையால் அவன் முகம் சோம்பியிருந்தது.

''ஏதோ நடந்திருக்கிறது..... எனக்குப் பயமாயிருக்கிறது. நீங்கள் ஏதாவது.... '' என்று கூறித் தயங்கினாள் திரிவேணி.

''நீ பயப்படும்படியாக நான் ஒரு காரியமும் செய்துவிடவில்லை. தயவுசெய்து என்னை எதுவும் கேட்காதே!'' என்றான் ரங்கமணி தலையைக் குனிந்து கொண்டே.

பயங்கரச் செயல் எதுவும் அவன் செய்து விடவில்லை என்பதை அறிந்து திரிவேணியின் மனம் சற்று நிம்மதி யடைந்தது. வேறு என்ன காரணத்தால் இப்படி இடிந்து போயிருக்கிறான் என்பது புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று போன் மணி அடித்தது. திரிவேணி எழுந்து சென்று பேசிவிட்டு வந்தாள்.


''உங்களை அப்பா கூப்பிடுகிறார்கள். சீக்கிரம் நீங்கள் அச்சாபீசுக்குப் போகவேண்டுமாம்'' என்றாள்.

இதைக் கேட்டதும் ரங்கமணியின் மனம் இன்னும் வெளிறியது. அதில் பயத்தின் சாயல் தோன்றியிருந்தது. பெரிய மனப் போராட்டத்தில் அவன் தத்தளிப்பதை முகம்காட்டி விட்டது.

''மனத்தில் உள்ளதைச் சொன்னால்; என்னால் இயன்றதைச் செய்வேனே...'' என்றாள் திரிவேணி இரக்கத்துடன். ரங்கமணி இலேசாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலும் வேதனைதான் கொப்புளித்தது.

ஒருகணம் அவளை உற்றுப் பார்த்தான். பிறகு சொன்னான்:

''என்னுடைய வேதனைகளை நான் தான் அநுபவித்தாக



வேண்டும். பிறருடைய உதவி இதற்குப் பயன்படாது திரிவேணி... என்னிடம் ஒன்றும் கேட்காதே!''

ரங்கமணி எழுந்து கையைக் கழுவிவிட்டு வேகமாக வீட்டை விட்டு வெளியேறினான். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த திரிவேணி கவலையுடன் நீண்டதொரு பெருமூச்சுவிட்டாள்.


ஃ ஃ ஃ

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் சுயேச்சை அச்சகத்தின் வெளிக் கதவு அடைத்திருந்தது. ரங்கமணி 'காலிங் பெல்' விசையை அழுத்தியதும் சிறிது நேரத்தில்]சன்னல் கதவைத் திறந்து பார்த்தான் சோமு. பிறகு வாசற் கதவைத் திறந்து ரங்கமணியை உள்ளே விட்டு, மீண்டும் கதவைத் தாழிட்டான்.

ரங்கமணி சர்தாரின் அறைக்குள் சென்ற போது அங்கு பாரத மாதா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் குழுமியிருந்தனர். சர்தாருக்குப் பக்கத்தில் காசிலிங்கமும் வடிவேலுவும் இருந்ததைக் கவனித்துக் கொண்டான். சர்தாரின் அறைக்குள் அவன் நுழைந்த போது எல்லாருடைய கண்களும் அவனைத் துளைப்பது போல் இருந்தன. அந்தச் சூழ்நிலையின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் ரங்கமணியின் மனம் தத்தளித்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு சர்தாருக்குப் பக்கத்தில் வந்து நின்றான். எந்தச்சமயத்திலும் கத்தி தன் கழுத்தில் விழலாம் என்று எதிர்பார்த்து நிற்கும் பலி ஆடு மாதிரி சர்தாரின் கேள்வியை எதிர்பார்த்து நின்றான்.

அவனுக்கு யாரைப் பற்றியும் அக்கறை இல்லை. ஆனால் சர்தாருக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே என்றுதான் மலைத்தான். ஒன்றும் பேசாமல் நின்றான்.

''ஏன் இப்படிச் செய்து விட்டாய் ரங்கமணி?'' என்று சர்தார் மெதுவாகக் கேட்டார். ரங்கமணி எதிர்பார்த்த கேள்வி, அவன் பதில் சொல்லியே ஆக வேண்டிய கேள்வி வந்து விட்டது. சர்தாரின் வீட்டிலிருந்து வரும் போதே சர்தாரிடம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதைக் கற்பனை செய்திருந்தான். ஆனால் அவர் கேட்டதும் அவனுடைய தைரியமெல்லாம் கழன்று ஓடி விட்டது. சர்தாரை நிமிர்ந்து பார்க்கக்கூடச் சக்தியற்றுத் தரையைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றான். பிறகு, ''மன்னித்து விடுங்கள். என்னவோ அந்தச் சமயத்தில் அப்படித் தோன்றியது...'' என்றான் மெதுவாக. குரல் நடுங்கியது.



''எவ்வளவு பெரிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்திருந்தேன்! எவ்வளவோ நம்பியல்லவா அந்தப் பொறுப்பை உன்னிடம் கொடுத்தேன்!'' என்றார் சர்தார்.

ரங்கமணி கூனிக் குறுகிவிட்டான். சர்தாரின் சந்தேகத்துக்கு ஆளாகிவிட்டோமே என்ற உணர்வு அவனை அழுத்திக் கொண்டிருந்தது. தலை தூக்க முடியவில்லை.

''என்னை மன்னியுங்கள்!'' என்றுதான் திரும்பவும் அவனால் கூற முடிந்தது. அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. அங்கிருந்தவர்கள் அத்தனை பேர்களின் பார்வையும் அவனை அணு அணுவாகத் துளைத்துக் கொண்டிருந்தது. அந்த இடத்தில் ஒரு குற்றவாளியைப் போல் நிற்கிறோம் என்ற நினைவுதான் அவனைத் தகித்துக் கொண்டிருந்தது.

''பெண்ணைக் கண்டதும் பேடியாகிவிட்டான். வேறென்ன?'' என்றான் காசிலிங்கம், வெறுப்புடன். ரங்கமணி அவனை முறைத்துப் பார்த்தான்.

காசிலிங்கம் மேலும் சொன்னான்:

''இந்த மாதிரி வேலைகளுக்கு இவன் இன்னும் பக்குவப்படவில்லை என்று முன்பே சந்தேகித்தேன். பெண்ணைக் கண்டதும் தைரியம் பறந்துவிட்டது.''

''பெண்ணைக் கண்டு பயப்படும் கோழை இல்லை நான்'' என்றான் ரங்கமணி எரிச்சலுடன்.

''நீ பயப்படுவாயா இல்லையா என்பதைத்தான் பாபநாசத்தில் பார்த்தேனே. இல்லையென்றால் அவ்வளவு அருமையான சந்தர்ப்பத்தை, விட்டிருப்பாயா?'' என்றான் காசிலிங்கம் கோபத்துடன்.

''அது என் சொந்த விஷயம்!'' என்றான் ரங்கமணி.

''எது சொந்த விஷயம்? இது பாரதமாதா சங்கத்தின் விஷயம். உன்னுடைய சொந்த விஷயத்துக்காகவா உன்னை சர்தார் அனுப்பி வைத்தார்கள்? சங்கத்தின் கட்டளையை நிறைவேற்றச் சென்றவன் அதையும் நிறைவேற்றாமல் என்னையும் தடுத்தாயே? உன்னைப் போய் அனுப்பி வைத்தார்களே....'' என்று காசிலிங்கம் கோபத்துடன் இரைந்தான்.

ரங்கமணியின் கண்கள் கோபத்தால் சிவந்து விட்டன. ''நீ நிறைவேற்றியிருப்பது தானே!'' என்று சீறி விழுந்தான்.

''அப்படிச் செய்ய முடியாமல்தான் போய் விட்டதே. உன்னையல்லவா அந்தக் காரியத்துக்குத் தலைவனாக நியமித்துவிட்டார்கள்? நான் மட்டும் தலைவனாக இருந்திருந்தால் உன்னை அந்த இடத்திலேயே கட்டுத் தள்ளிவிட்டு அவளை இங்கு கொண்டு வந்து சேர்த்திருப்பேன். தலைவனின் சொல்லுக்குப் பணிய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிவிட்டேன்'' என்று கூறிக் கோபத்துடன் மேஜை மீது ஓங்கிக் குத்தினான்.

''இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் நீ அப்படி நடந்து கொண்டது பெரிய தப்புதான். உன்னை நம்பி எவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைத்திருந்தார்கள்! அதை நீ உணராமல், விளையாட்டுப் பிள்ளை மாதிரி நடந்து கொண்டாயே !'' என்று குறுக்கிட்டுப் பேசினான் வடிவேலு.

குற்றச்சாட்டுகள் சுரீர் சுரீர் என்று ரங்கமணியைத் தைத்தன.

''டெபுடி சூப்பிரண்டெண்டின் மனைவி நல்ல அழகி. அந்த அழகு இவனைத் தடுத்து விட்டது போலிருக்கிறது'' என்றான் மாணிக்கம் குத்தலாக. இதைக் கேட்டு ரங்கமணி சீறி விழுந்தான்.

''வார்த்தை தவறிப் பேச வேண்டாம்!'' என்றான் கோபத்துடன்.

''பின்னே எதற்காக அவளைத் தப்பவிட்டாய்? எங்களுக்குக் காரணம் தெரிந்தாக வேண்டும்'' என்று இரைந்தான் காசிலிங்கம்.

''அது என் சொந்த விஷயம்.''

''பாரதமாதா சங்கத்தில் உள்ளவனுக்குச் சொந்த விஷயம் என்று எதுவுமே கிடையாது. இந்தச் சங்கம்தான் அவனுடைய விஷயம். இங்கு சுயவிஷயங்களுக்கு இடமில்லை'' என்றான் மாணிக்கம்.

''கோழை, பெண்ணைக் கண்டதும் மனம் இளகிவிட்டது. எனக்கு முன்பே தெரியும். எப்போது திரிவேணியுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தானோ, அப்போதே சந்தேகப்பட்டேன். அவளுடைய அஹிம்சைத் தத்துவம் இவனுடைய புத்தியை மறைத்திருக்கிறது. திரிவேணியோடு சேர்ந்துதான் இவன் இப்படிக் கோழையாகி விட்டான்'' என்றான் காசிலிங்கம் வெறுப்புடன்.

''நிறுத்து காசி.... வார்த்தைகளைச் சிதறவிட வேண்டாம்'' என்று கோபத்தில் இரைந்து கத்தினான் ரங்கமணி. பிறகு சர்தாரைப் பார்த்துச் சொன்னான்:

''அவளைத் தப்ப விட்டதற்குக் காரணம் நான் சொல்லப் போவதில்லை. என்னை நீங்கள் உண்மையிலேயே கோழை என்று நம்பினால், இந்தச் சங்கத்துக்கு லாயக்கற்றவன் என்று தீர்மானித்தால், வெள்ளையர்களைப் பழிவாங்கும் உணர்ச்சி அற்றவன் என்று முடிவு கட்டினால், நீங்கள் கொடுக்கும் எந்தத் தண்டனையையும் ஏற்கத் தயார். என்னைப் பற்றி வாய்க்கு வந்தபடி யாரும் இனி பேச வேண்டியதில்லை. இது பற்றி நீங்களே முடிவு செய்யுங்கள்.''

ரங்கமணி படபடப்புடன் பேசி முடித்ததும், அந்த அறையில் நிசப்தம் நிலவியது. சிறிது நேரத்துக்குப் பிறகு சர்தார் சொன்னார் : ''ரங்கமணி, உன்னை நன்கு அறிவேன். உன்னுடைய துணிச்சலிலும், சாமர்த்தியத்திலும் நம்பிக்கையில்லாமலா உன்னைத் தலைவனாக அனுப்பி வைத்தேன்? ஆனால் ஏன் அவளைத் தப்பவிட்டாய் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.''

அவனைக் கூர்ந்து பார்த்தார் சர்தார். ரங்கமணி தரையைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

''அந்தக் காரணத்தைச் சொல்லக்கூடிய நிலையில் நான் இல்லை. சொல்லவும் தயாரில்லை. அது முழுக்க முழுக்க என்னுடைய சொந்த விஷயம். தயவுசெய்து அதைப் பற்றி என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம். என்னுடைய தவறுக்காகத் தண்டனை கொடுப்பதாக இருந்தால் கொடுங்கள், ஏற்றுக் கொள்கிறேன். இந்தச் சங்கத்துக்கு என்னால் பயனில்லை என்று நினைப்பீர்களானால் என்னை



'' மாப்பிள்ளே முறுக்கைப் பார்த்தேளா ?''
'' ஏன், மாப்பிள்ளே எதற்குக் கோபித்துக் கொண்டிருக்கிருர் ?''
'' அட, நீங்க ஒண்ணு! அவரே ஊர்லேந்து அழகான முறுக்கும் சுற்றி எடுத்துண்டு வந்திருக்கார், பார்த்தேளா என்றேன்.''

விலக்கிவிடுங்கள். என் வழியே நான் போய்க் கொள்கிறேன்.....'' என்றுன்.

அவன் கண்கள் கலங்கி விட்டன. எல்லாரும் வாயடைத்துப் போய் நின்றுர்கள்.

கமலவாசகி அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தாள். திடீரென்று ரங்கமணியைப் பார்த்ததால் பலவித உணர்ச்சிகள் இதயத்தில் பின்னிப் பிணேந்தன. திடுதிப்பென்று காருக்குள் முரட்டுத்தனமாக அவன் நுழைந்ததும், பிறகு காரைப் போகவிட்டதும் ஒரு கனவு போலவே அவளுக்குத் தோன்றியது.

''இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்றுள் வடிவேலுவைப் பார்த்து.

''எஜமானுக்குக்கூடவா?''

''ஆமாம். சமயம் வரும் போது நான் சொல்லிக் கொள்கிறேன். இது இரகசியமாகவே இருக்கட்டும், ஜாக்கிரதை.''

''இதுபற்றி எஜமானிடம் சொல்லி, அவனைப் பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டாமா?''

''வேண்டாம். இப்படி நடந்தது ஒருவருக்குமே தெரிய வேண்டாம்....'' என்றுள் கண்டிப்பாக.

''நல்ல வேளே, பயந்தே போய்விட்டேன். பகலிலேயே வழிபறிக் கொள்ளேயடிக்க முனேந்துவிட்டார்களே!'' என்றுன்வடிவேலு.

'' கொள்ளேயடிக்க வந்தவர்களாகத் தெரியவில்லே. ஏதோ சதி நடக்கிறது. அவரைஉனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் கமலவாசகி.

''தெரியாதே!....'' என்று கூறிவிட்டு மௌனமாஞன் வடிவேலு.

பாபநாசத்தில் பங்கஜாவுக்கு வந்த பிறகும் கமலவாசகியின் அதிர்ச்சி நீங்கிய பாடில்லே. மறு நாள் பாளேயங்கோட்டை வந்தபிறகுகூட அவளுடைய நினைவில் ரங்கமணியைச் சந்தித்த சம்பவம் வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது. அவள் மனத்தில் அமைதி இல்லே.

தன்னைக் கடத்த வந்தவன் கடத்திப் போயிருக்கக் கூடாதா என்றுதான் அவள் மனம் தவித்தது.

கடத்திப் போய் என்ன செய்வார் ? எங்கு கொண்டு செல்வார்....? திரிவேணியின் எதிரில் கொண்டு போய் நிறுத்துவாரா ? அப்படி நிறுத்தினுல் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும்! அடியே, நீ ரங்கமணியைப் பார்க்குமுன்பே அவர் எனக்குச் சொந்தமாகி விட்டார் என்று அவள் முகத்துக்கு எதிரே கூறிச் சிரிப்பேனே! திரிவேணியின் முகம் எப்படி வாடும்!.... ஒரு வேளே அவள் சொல்லித்தான் இவர் இப்படி என்னே மறித்திருப்பாரோ ?

சே.... அவரைக் கண்டதும் கோழை மாதிரி அதிர்ச்சியடைந்து விட்டேனே..... 'என்ன புரட்சி வீரரே, போயும் போயும் ஒரு பெண்ணேக் கடத்தும் தலைவிதிதாஞ உங்களுக்குக் கிடைத்தது? திரிவேணி உங்களே இப்படி ஈனத் தொழிலேயா செய்யச் சொன்ஞள்? 'லட்சியம், லட்சியம்' என்று கூறி அன்று என்னே விட்டு ஓடினீர்களே, இன்று உங்கள் லட்சியமெல்லாம் திரிவேணியிடம் இப்படியா சீரழிய வேண்டும்? கடத்திச் செல்ல ஒரு வெள்ளேக்காரன்கூடவா கிடைக்காமல் போய் விட்டான் ?' என்று கேட்டிருந்திருக்க வேண்டும். அவரைக் கண்டவுடன் ஒன்றும் பேசத் தோன்ருமல் விழித்துக் கொண்டிருந்துவிட்டேனே......

கமலவாசகிக்கு உள்ளூற ஆனந்தம் பொங்கியது. தன்னே ஒரு எதிரியாகக் கருதிக் கடத்தும் வேலேயில் ரங்கமணி முனேந்ததை நினேத்த போது அவளுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. ரங்கமணி எதிரியாக மதிக்கும் அளவுக்குத் தன் முக்கியத்துவம் வளர்ந்துவிட்டதாக எண்ணிப் பெருமையடைந்தாள்.

சென்னேயில் அன்று நள்ளிரவில் நடந்த வாக்குவாதம் நினேவில் பளிச்சிட்டது —

'' .....நான் நினேத்தாலும் உன்னே என் இதயத்திலிருந்து தள்ள முடியாது....''

அன்று அவன் கூறியது அவள் காதில் ரீங்காரம் செய்தது.

இன்று தள்ளிவிட்டுத் திரிவேணியை அதில் இருத்திக் கொண்டீர்களே! இதயத்திலிருந்து தள்ளி விட்டாலும், நினேவிலிருந்து தள்ள முடியாது. இன்று உங்களுக்கு, உங்கள் அருமைக் காதலிக்கு எதிரியாக ஆகிவிட்டேனே. இனி மறக்க முடியுமா உங்களால்?

நான்தான் சூப்பிரண்டெண்டின் மனேவி என்பது தெரிந்தேதான் கடத்த வந்திருப்பாரோ... ஊஹூம், தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் என்னேப் பார்த்ததும் அப்படித் திகைப்பானேன்? என்னேத் தப்பிப் போகும்படி விடுவானேன்....? சூப்பிரண்டெண்டின் மனேவி வேறு யாரோ ஒருத்தி என்று நினேத்துக் கடத்த வந்த இடத்தில் பாவம், இப்படி அவருக்கு ஓர் அதிர்ச்சி....

ரங்கமணி அன்று கூறியது நினேவுக்கு வந்தது — ''அதாவது, உல்லாச மாளிகையில் உன்னுடைய அந்தப்புரத்தில் நீ விளேயாடுவதற்கு ஏற்ற அலங்காரப் பொம்மையாக

இருந்துவிடு என்று என்னைக் கேட்கிறாய். அப்படித்தானே....?''

ரங்கமணி எவ்வளவு வெறுப்புடன் அன்று கமலவாசகியிடம் இப்படிச் சொன்னான்!

இன்று என்ன நடக்கிறதாம்? அதை விடக் கேவலமாக ஒரு பெண்ணின் சொல் லுக்குப் பணிந்து கோழை மாதிரி, ஒரு பெண்ணைக் கடத்த முயன்றாரே.... லட்சிய மாம், லட்சியம். அப்படி என்னதான் திரி வேணியிடம் அபார சக்தி இருக்கிறதோ....? என்னைவிட அழகில் சிறந்தவளா....? 'உலகம் பரந்து கிடக்கிறது; கிணற்றுக்குள் மட்டும் நீந்தினால் போதாது' என்றாரே.... நான் கிணற்றை விட்டு வெளியே வந்துவிட் டேன். உங்களுக்கு எதிராக, உங்கள் நிலைவி லேயே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பகை யாளியாக வந்துவிட்டேன்.....

கமலவாசகிக்குக் கோபமும் வெறுப்பும் உள்ளே குமைந்தன. தனக்குக் கிடைக்காத பொருள், வேறொருத்தியின் கையில் சிக்கி விட்ட ஆற்றாமையால் மனம் வெதும்பினாள். உள்ளத்தில் புயல் வீசியது.

இரண்டு நாட்களாகவே மனம் அமைதி யின்றித் தவித்தது. ஒரு நாள் மாலை சிவானந் தத்தைக் காணக் கிருஷ்ணன் என்ற இரகசிய போலீஸ்காரர் வந்தார்; அப்போது சிவானந் தம் வீட்டில் இல்லை. கிருஷ்ணனிடம் சில தகவல்கள் கேட்டாள் கமலவாசகி:

''சர்தார் சொக்கலிங்கம் பிள்ளையைப் பற்றி ஏதாவது தெரியுமா?''

''சுயேச்சைப் பத்திரிகையின் அதிபர்.... காந்திக்கு எதிர்ப் பிரசாரம் செய்பவர். ஏன்?'' — கிருஷ்ணன் ஒன்றும் புரியாமல் கேட் டார்.

''சுதந்திர இயக்கத்தில் அவரும் இரகசிய மாகத் தலையிடுவார் என்று நினைக்கிறேன்.''

''இதுவரை அப்படித் தகவல் இல்லை.''

''சர்தார் என்ற பட்டம் எப்படி வந்த தாம்?''

''முதலாவது உலக யுத்தத்தில் பட்டாளத் தில் சேர்ந்திருந்தாராம். அதனால் சர்தார் என்ற பட்டப் பெயர் ஏற்பட்டதாகக் கேள்வி.''

''திரிவேணிக்கு சர்தார் பக்கபலமாக இருக்கிறார் என்று நினைக்கிறேன். நீங்கள் ஒன்று செய்யவேண்டும்.''

''என்ன.....?'' ஆவலோடு கேட்டார் கிருஷ்ணன்.

''சுயேச்சை அச்சகத்தின் மீதும் அதில் வேலை பார்க்கும் நிருபர்கள் மீதும் ஒரு கண் இருக்க வேண்டும். இது இரகசியமாக இருக் கட்டும். நீங்கள் கண்காணித்துக் கிடைக்கும் தகவலை உடனுக்குடன் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.''

''எஜமானுக்குத் தெரிவிக்கவேண்டாமா?''

''வேண்டாம். அவசியம் நேரும் போது தெரிவிக்கலாம். முக்கியமாக சுயேச்சைப் பத்திரிகையில் வேலை பார்க்கும் நிருபர்களை நிழல்போல் தொடர வேண்டும். உம்முடைய மற்ற வேலைகளோடு இதையும் கவனித்துக் கொள்ளும்.''

கிருஷ்ணன் ஆகட்டும் என்று தலையை ஆட்டிவிட்டுச் சென்றார்.



பாரதமாதா சங்கத்தார்கள் இரண்டு நாட்களாக இரவில் கயேச்சை அச்சகத்தில் கூடினார்கள். ரங்கமணியின் செயல் பற்றி விவாதித்தார்கள். அதில் ரங்கமணி கலந்து கொள்ளவில்லை. அச்சகத்தின் முன் அறையில் தங்கிவிட்டான். காசிலிங்கம்தான் ரங்கமணியின் செயலை வன்மையாகக் கண்டித்தான். ஆனால் சர்தார் எல்லாரையும் சமாதானப்படுத்தி, "நீங்களெல்லாரும் எவ்வளவு தூரம் அவனைத் தெரிந்து வைத்திருக்கிறீர்களோ, அதைவிட நான் அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். ஒரு வகையில் நீங்கள் அவனைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுகூடச் சொல்லுவேன். காசி சொல்வது மாதிரி இரிவேணி, அவன் மனத்தை மாற்றி விடவில்லை. அது முடியாத காரியமும்கூட. ரங்கமணியைக் குழந்தை முதலே எனக்குத் தெரியும். அவன் அஹிம்சாவாதியாக முடியவே முடியாது. அவனுடைய தந்தை தீவிரவாதி. புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடவில்லை. ரங்கமணியின் துணிச்சலையும் சாமர்த்தியத்தையும் சென்னை நகரில் நான் கண் கூடாகக் கண்ட பிறகே அவனை இந்தச் சங்கத்துக்கு அழைத்து வந்தேன். நம்முடைய கட்சியிலிருந்து அவனை நாம் விலக்கிவிட்டால்கூட அவன் சும்மா இருந்துவிடமாட்டான். தனியாகவே பயங்கரச் செயலில் ஈடுபட்டு விடுவான். வெள்ளையர்களைப் பழி வாங்கும் கடமை அவனுக்கு இருக்கிறது. அவனிடம் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இந்த ஒரு விஷயத்தில் தவறிவிட்டான் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். அதற்கு வேறு ஏதோ ஒரு காரணமிருக்கிறது. இந்த முறை அவனுடைய செயலை மன்னித்துவிடலாம். அவனிடம் நீங்கள் பூரண நம்பிக்கையும் கொள்ளலாம். இதற்கு நான் பொறுப்பு" என்றார்.

சர்தாரின் பேச்சுக்கு யாரும் எதிர்பேசவில்லை. அவருடைய அபிப்பிராயத்தையே சங்கம் ஏற்றுக் கொண்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மத்தியானம், ரங்கமணி அச்சகத்திலிருந்தபோது அவனை அழைத்துக் கொண்டு சிந்துபூந்துறைக்குச் சென்றார் சர்தார். போகும் போது சர்தார் கேட்டார் :

"அத்தை போன பிறகு வீட்டுக்கே வரக் கூடாது என்று நினைத்து விட்டாயா ?"

"அப்படியெல்லாம் இல்லையே!" என்றான் ரங்கமணி சற்று பரபரப்புடன்.

"இரண்டு நாட்களாகச் சாப்பிடக்கூட வரவில்லையாமே...இதோ பார், ரங்கமணி; இது வரை இரிவேணிக்கு அவள் அத்தை ஆதரவாயிருந்தாள். இப்போது அவளுக்குத் துணைக்குக்கூட வீட்டில் ஆள் இல்லை. ஒரு கிழட்டு வேலைக்காரிதான் இருக்கிறாள். நீயாவது அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தால்தான் அவளுக்குச் சற்று மனம் ஆறுதலாக இருக்கும்" என்ற சர்தார், அதைத் தொடர்ந்து, "காசிலிங்கம் சொல்வதையெல்லாம் மனத்தில் போட்டுக் கொள்ளாதே. இரிவேணியால் உன்னை அஹிம்சாவாதியாக்கிவிட முடியாது என்று எனக்கு நன்றாகத் தெரியும்!" என்றார்.

வாஞ்சையோடு அவன் தோளின் மீது கையைப் போட்டுக் கொண்டார். அவன் உடல் சிலிர்த்தது.

சர்தாருடன் ரங்கமணியும் வந்ததைக் கண்டதும் இரிவேணிக்கு உற்சாகமேற்பட்டது. "ஏது, புரட்சிக்காரருக்கு இந்தக் குடிசையின் ஞாபகம் இப்போதாவது வந்ததே !" என்றாள்.

"புரட்சியெல்லாம் குடிசைகளில்தான் தோன்றும். மாளிகையில் அல்ல" என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

இரண்டு நாட்களுக்குமுன் அவன் சோர்ந்து போய்க் களையிழந்து இருந்ததைக் கண்டு மனம் கலங்கியிருந்த இரிவேணி, அவன் சிரித்ததைக் கண்டு மனம் பூரித்தாள். மிகுந்த ஆர்வத்தோடு அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவனும் அவளைக் கண்கொட்டாமல் பார்த்தான். இருவர் பார்வையும் ஒருகணம் மோதி நின்றன.

தண்ணீரில் மூழ்கித் தத்தளிக்கும் இருவர், ஒருவரை யொருவர் ஆதரவாகப் பற்றிக் கொள்வது போலிருந்தது, அந்தப் பார்வைகளின் மயக்கம்.

மத்தியானம் சாப்பாட்டுக்குப் பிறகு சர்தார் தம்முடைய அறைக்குள் சற்று நேரம் தூங்கப் போய்விட்டார். ரங்கமணி, சுயேச்சை அச்சகத்தை நோக்கி நடந்தான். ஜங்ஷன் லெவல் கிராஸிங் பக்கம் வந்தபோது அவனுக்கு எதிரே வந்த கார் ஒன்று அவனை இடிப்பது போல் உரசிக் கொண்டு வந்து அவன் முன்னால் நின்றது. திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான் ரங்கமணி. எதிரே சிவானந்தம் காருக்குள்ளிருந்தது தெரிந்தது. காருக்குள் சிவானந்தம் மட்டுந்தான் இருந்தான்.

அவனைக் கண்டதும் ரங்கமணி திடுக்கிட்டான். பாபநாசத்தில் நடந்த விஷயத்தைக் கமலவாசகி சொல்லியிருப்பாளோ என்ற சந்தேகம் தோன்றியது. ஆனால் சிவானந்தம் சிரித்துக் கொண்டே வழக்கம் போல் கலகலப்பாகப் பேசிக் கொண்டு வந்ததைக் கண்டதும் ரங்கமணி தைரியமடைந்தான்.

"என்ன நிருபர் சார், மத்தியான வேளையில் நடுத் தெருவில் அப்படி என்ன சிந்தனை, எதிரே கார் வருவதுகூடத் தெரியாமல்?" என்று கேட்டுச் சிரித்துக் கொண்டே ரங்கமணியின் எதிரே வந்து நின்றான் சிவானந்தம்.

அவனை உற்றுப் பார்த்தான் ரங்கமணி. உச்சி முதல் உள்ளங்கால் வரை மனத்தாலே அளந்தான் —

'ராணி ! உனக்கேற்றவர்தான் சிவானந்தம். எந்த விதத்திலும் எனக்குச் சளைத்தவர் இல்லை. என்னைவிட அழகு வாய்ந்தவர். நீ விரும்பும் பகட்டுக்கும், படாடோபத்துக்கும் ஏற்றவர்தாம். போலீஸ் அதிகாரியின் மனைவி என்ற மதிப்பை நான் கொடுத்திருக்க முடியுமா.....? உன்னுடைய முடிவு சரியானதுதான். பொய்யாக நூறு வருஷம் வாழ்வதைவிட உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் என்பாயே.... நிஜமாகவே உன் வாழ்க்கையில் உண்மைதான் மின்னுகிறது. உன் மனப்படியே கணவனைத் தேடிக் கொண்டாய்.... ஆனால்... ஆனால் நான்....?' ரங்கமணி சிந்தனையில் ஆழ்ந்தான்.

(தொடரும்)

சாரணியம் — அறுபது ஆண்டுகள்

போரின் விளைவுகள் பயங்கரமானவை; எனினும், அதன் விளைவாகச் சில நன்மைகளும் அபூர்வமாக ஏற்படுவதுண்டு. பாரதப் போரிலே பிறந்ததுதானே பகவத் கீதை? இவ்வண்ணமே 1899-ல் தென் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்த போயர் யுத்தம், சாரண இயக்கம் தோன்ற வழி வகுத்தனவாம். மாஃப்கிங் எனுமிடத்தில் நிகழ்ந்த முற்றுகையின் போது, ராபர்ட் பேடன் பவெல் எனும் ஆங்கிலேயர் வேவு பார்த்தல் முதலிய வேலைகளுக்குச் சிறுவர்களைப் பயன்படுத்திக் கொண்டார். அவ்வமயந்தான் அவர் உள்ளத்தில் சாரண இயக்கத்தின் வித்து முளைவிட்டது. போரில் சிறுவர்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடுமானால், அமைதிக் காலங்களிலும் நாட்டு நலனுக்கும் மக்கள் சேவைக்கும் அவர்கள் பயனுறச் சேவை புரியும் வகையில் பயிற்சி அளிக்கலாமே என்று எண்ணினார். 1907ல் சில சிறுவர்களை அழைத்துக்கொண்டு இங்கிலாந்தின் தெற்கேயுள்ள ப்ரௌன்ஸீ தீவு (Brownsea Island)க்குச் சென்றார். ஒன்றரை மைல் நீளமும், முக்கால் மைல் அகலமும் உள்ள அத்தீவில் தங்கியிருந்த பத்துநாட்களும் சிறுவர்கள் சூழ்நிலைக்கேற்ப சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு வாழ்வது, தோழமை, கட்டுப்பாடு— இவைகளில் பயிற்சி பெற்றனர். அடுத்த ஆண்டு சிறுவர் சாரணியம் எனும் நூலை எழுதினார். அதன் பயனாக இங்கிலாந்தில் சாரணர் இயக்கம் முதன் முதலாகத் தோன்றியது. நாளடைவில் உலகெங்கும் பரவி, இன்று எண்பத்தெட்டு நாடுகளில் 10,350,540 பேர்கள் சாரணர் இயக்கத்தில் ஈடுபடும் அளவுக்கு வளர்ந்துள்ளது.



பேடன் பவெல்

1910-ல் சாரண இயக்கம் இந்தியாவில் தொடங்கிய போது, ஐரோப்பிய, ஆங்கிலோ—இந்தியச் சிறுவர்கள் மட்டுமே அதில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டனர். எனவே, 1916ல் இந்தியச் சிறார்களுக்கெனத் தென்னிந்தியாவில் சாரண இயக்கத்தைத் தொடங்கினார், டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையார். அடுத்த ஆண்டு வட இந்தியாவில் பண்டித மாளவியா, பண்டித இருதயநாத் குன்ஸ்ரு ஆகிய இருவரும் 'சேவா சமிதி' என்ற பெயரில் சாரண இயக்கத்தைத் தோற்றுவித்தனர். 1938ல் தேசப் பற்று மிக்க சிலர் ஆங்கில சாரண சங்கத்தினின்றும் விலகி 'இந்துஸ்தான்சாரண சங்கம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவினர். பாரதம் சுதந்திரம் பெற்றதும் நாளடைவில் பல்வேறு சாரணச் சங்கங்களும் ஒன்றாக இணைந்து, அகில உலக சாரண சம்மேளனத்துடன் சேர்ந்து பணியாற்றத் தலைப்பட்டது. தேசப் பற்று, தெய்வ பக்தி, தொண்டு ஆகிய உயர்ந்த குறிக்கோள்களுடன் அரசியல் கலப்பின்றிச் சிறப்பாகப் பணியாற்றி வரும் சாரண — சாரணியரின் நற்பணிகள் எண்ணிறந்தவை. இவ்வியக்கத்தின் அறுபதாண்டு நிறைவு விழா சமீபத்தில் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 'எனக்கு ஒரு டஜன் பிள்ளைகள் இருந்தால் அவர்கள் அனைவரையும் சாரண இயக்கத்துக்கே அனுப்புவேன். தவிர, என் பெண்களையும் சாரணியர் (வழிகாட்டி) இயக்கத்துக்கே அனுப்புவேன்' என்று பெஸண்ட் அம்மையார் கூறியது போல் பெற்றோர்கள் அனைவருமே தங்கள் குழந்தைகளை இவ்வியக்கத்தில் ஈடுபடுத்தினால், அடுத்து வரும் தலைமுறைகளில் நாட்டில் வேலை நிறுத்தங்களும் கேரோக்களும் மறைந்து அமைதி தவழும்; கண்ணியமும் கட்டுப்பாடும் மேலோங்கும் என்பதில் ஐயமில்லை.

— ரா. பா.

அன்னிபெஸண்ட் அம்மையார்
சாரணர் உடையில்





துணை

கோமளா

"அம்மா! அம்மா!"

'டக... டக... டக...' சொன சத்தம் வருமாறு, கால்கள் மிதிக்கக் கைகள் துணியைத் தள்ள தையல் மிஷின் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. அந்த வேகமும் போதாமல் மேலும் வேகமாகத் தைப்பதில் ஈடுபட்ட சீதாவின் காதில் பிள்ளையின் குரல் விழவில்லை.

"அம்மா, அம்மா! என்ன பண்ணிண்டிருக்கே?"

கோபாலனின் குரல் சமையல் அறையில் இருந்த பாட்டியை வெளியே இழுத்து வந்தது.

"என்ன பண்ணிண்டிருக்கே என்று கேட்கும்படியா கோவில் கட்டி உசரக்கவா வைச்சிருக்கு அவளே? அதான் ஒழைக்க ஒழைக்க ஓடாப் போயிண்டிருக்காளே. எல்லாம் அந்த மெஷின் கிட்டத்தான் இருப்பாள்" என அலுத்துக்கொண்டாள் பாட்டி.

"எல்லாம் நாங்க கோவில்லே வைச்சுத்தான் கும்பிடறோம் எங்கம்மாவை. ஆனா... ஆனா... கோவில் சிலையைத் தன் காலாலே உதைச்சுட்டுப் போயிட்டார் அந்த மகா புருஷன்" என்று தொடர்பின்றி குமைந்து கூறினான் அவன்.

"அப்பா கோபு! அவன் பண்ணினது நாத்துக்கு நூறு தப்புத்தான். ஆனால் எனக்கு அவன் பிள்ளே, உனக்கு அவன் அப்பன். எத்தனே சொன்னாலும் உறவு அறுந்து போயிடுமா?"

"உறவாம் உறவு! யாருக்கு யார் உறவு? கணவன் என்ற உறவையும், தந்தை என்ற உறவையும், தாய் என்ற பந்தத்தையும் என்றைக்கு அவர் அறுத்தெறிந்துவிட்டு ஓடினாரோ, அன்றைக்கே எல்லா உறவும் விட்டுப் போச்சு. அன்னிக்கு நான் சிறு பிள்ளே. ஒன்றும் தெரியாதவன். ஆனால் இன்று நாலும் தெரிந்தவன், பாட்டி! நான் இப்பச் சொல்றேன் கேட்டுக்க... அவர், உனக்கு மகனுமில்லே; எனக்குத் தகப்பனுமில்லே; எங்கம்மாவுக்கு அவர்.... அவர்...."

"கோபு!"


உள்ளே நடந்த ரகளையைக் கேட்டு உரக்க மொழிந்தவாறு வெளியே வந்தாள் சீதா.

"இதெல்லாம் என்னடா பேச்சு? தள்ளாத வயதில் உடல் நைந்து உள்ளம் நொந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் பாட்டியிடம் பேசும் பேச்சா இது? பிள்ளைகள் வளர்ந்து, பெரியவர்களாகி, பெரியவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டியது போக நீ இப்படி வெந்த புண்ணில் வேல் செருகலாமா?"

"அம்மா! நான்... நான்..."

"கோபு! உனக்குக் கடைசி முறையாகக் கூறுகிறேன். நீ யாரைப் பற்றி வேணுமானாலும், எப்படி வேணுமானாலும் பேசு. ஆனா, நீ அவரைப் பற்றி மட்டும் எங்கேயும் எதுவும் பேச வேண்டாம். உன்னே நான் கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

"அம்மா! அம்மா.... நானுகப் பேசலேம்மா. என்னுள்ளிருக்கும் ஒரு வேகம்,



ஒரு வெறி, என்னை அப்படிப் பேசும்படி செய்யறதம்மா. நான் என்னம்மா செய்வேன்....'' என்றவன் சிறிது நேரம் பேசாதிருந்தான். அங்கு அமைதி நிலவியது. அதைக் கலைத்து மீண்டும் கோபுவே பேசினான்.

''இதைப் படிச்சதிலேந்து என் ஆத்திரத்தை அடக்க முடியலேம்மா. அந்த ஆத்திரம் என் அறிவையும் மறைச்சிடுத்து'' மன்னிப்புக் கேட்கும் பாணியில் அவன் குரல் மாறிவிட்டிருந்தது.

வாரப் பத்திரிகை ஒன்றின் இதழ் இருந்தது அவன் கையில். அவன் எதைப் பற்றிக் கூறுகிறான் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. முன் தின இரவே அவள் அதைப் படித்துவிட்டிருந்தாள். குழந்தைகள் பார்த்து விடப்போகிறார்களே என்று அதைப் பரண் மேல் தூக்கியும் போட்டு விட்டாள். பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருளடைந்து விட்டது என்று எண்ணிக் கொள்ளுமாம். வீட்டுக்கு வந்த இதழை வேண்டுமானால் மறைக்கலாம். ஒளிக்கலாம். ஆனால் ஆயிரமாயிரம் கடைகளில் வரிசையாகத் தொங்கும் எல்லா இதழ்களையும் அவளால் மறைக்க இயலுமா?

''... என்ன சொன்னே?'' தன்னைச் சுதாரித்துக்கொள்ள அவனுக்கு இத்தனை நேரம் பிடித்தது.

''நாலு சுவருக்குள் நடப்பதை யெல்லாம் இந்த ஆசிரியர் நாற்சந்திக்கு இழுத்து விட்டிருக்கிறார். ஏம்மா, நம் குடும்ப விஷயம் இவருக்கு எப்படித் தெரியும்? நான் ஒரு கடிதம் எழுதப் போகிறேன் இவருக்கு...''

அவள் இதழ்க்கடையில் ஒரு சோகச் சிரிப்பு இழைந்தோடியது.

''காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக அந்த எழுத்தாளர் ஏதோ கற்பனையாக எழுதப்போய் அது உன் கண்ணில் பட்டு, 'ஆ! அது நம் குடும்பக் கதை. எப்படி எழுதலாம்?' என்று நீ குதிப்பது சரியா? ம்.... போ! போய்க் காரியத்தைக் கவனி'' என்றாள் சீதா.

''போறதுக்கு முன்னாலே ஒன்னே ஒன்று சொல்லிட்டுப் போயிடறேன். இந்தக் கதையிலே ஓடிப்போன அப்பன் கோடீசுவரனாத் திரும்பறானாம். மகனும் மகளும் அதிலே

மயங்கி அப்பாவுக்காக உருகுகிறீர்களாம். ஆனா அதுதான் இங்கே நடக்காது. அன்றிலிருந்து இன்றுவரை எங்களுக்காகவும் குடும்ப மானத்தைக் கரையேற்றவும் நீ பட்ட கஷ்டமும் வேதனையும் — மாடா உழைக்கிற உழைப்பும் பிறர் அறியாமல் நீ நெஞ்சுக்குள் உருகித் தவிக்கிற தவிப்பும் எங்கள் உள்ளங்களில் மாறாத வடுவை ஏற்படுத்தி விட்டன. அம்மா அஷ்ட ஐசுவரியங்களோடு அந்த மனிதர் இங்கே வந்தாலும் சரி, ஆண்டவனே வந்து சிபாரிசு செய்தாலும் சரி, ஏன், நீயே முறையிட்டாலும் சரி. எங்களுடையது ஒரே பதில்தான். அவரை இந்த வீட்டுப் படி ஏற விடமாட்டோம்..''

அடிபட்ட வேங்கை உருமிவிட்டுப் போவதுபோல் வேகமாகச் சென்றான் அவன்.

நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள் சீதா.

* * *

புடவைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதம் நெருடிய கைக்குத் தட்டுப்பட்டு, நெஞ்சில் முள்ளாய்க் குத்தியது. 'கதையைப் படித்தே இப்படிக் குதித்தானே. இந்தக் கடிதத்தைக் காட்டினால்?'

''அம்மா, அம்மா! ஸ்கூலுக்கு நாழியாகல்லே? பாட்டி சாப்பிடக் கூப்பிடறா?'' என்றவாறு லலிதா உள்ளே நுழைந்தாள்.

''லலி! நான் லீவ் லெட்டர் எழுதித் தரேன். அதை ஹெட்மிஸ்ட்ரஸ் கிட்டே கொடுத்துடு. எத்தனை மணிக்கு உனக்கு 'இண்டர்வ்யூ'?''

''பதினொரு மணிக்கு அம்மா. நீ சாப்பிட வரலையா?''

''இப்பப் பசியில்லே. நீ கிளம்பு. உனக்கு நாழியாச்சு. கோபு என்ன செய்யறான்? சாப்பிட்டானா, இல்லையா?''

''சாப்பிடாமலே போயிட்டான்.'' லலிதா சென்றுவிட்டாள்.

கொண்ட கணவன் வீட்டை விட்டே போனபோது கலங்காத உள்ளம் பெற்ற பிள்ளை சாப்பிடாமல் போய்விட்டதற்காகக் கலங்கிக் கசந்தது.

தையல் மிஷினை இரு கைகளாலும் அணைத்தவாறு பலகையின் மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். நீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாய் நிலத்தின் மீது விழுந்து உருண்டன. தன் வாழ்வோடு ஒன்றிவிட்ட அந்த இயந்திரத்தோடு தன் வாழ்வின் சுக துக்கங்களை எத்தனையோ முறை பகிர்ந்து கொண்டிருக்கிறாள் சீதா. இன்றும் அதனிடமே தன் கதையைச் சொல்லி அழுதாள் சீதா.

அழகன் ராஜாராமன் சீதாவுக்கு ஒன்றுவிட்ட அத்தையின் மகன். நல்ல இடத்தில் பெண்ணைக் கொடுத்த திருப்தியில் சீதாவின் தந்தை கண்ணை மூடினார்.

சீதா புக்ககம் வந்த பின்தான் பசுஞ்சோலை என்று நம்பியது வெறும் பாழ் மண்டபமே என்று தெரிந்து கொண்டாள். ஒரே பிள்ளை என்று அளவுக்கு மீறிய செல்வத்தில் வளர்ந்து விட்டதால் மனத்தைக் கட்டுப்படுத்தப் பழகாமல் வாழ்ந்துவந்தான் ராஜாராமன். அவனைச் சீர்திருத்தப் பல வழிகளில் முயன்று தோற்றார் அவன் தந்தை. இறுதியில் அவனைத் திருத்தும் பொறுப்பை மனைவியிடமும் மருமகளிடமும் விட்டு விட்டு அவரும் மறைந்து மண்ணானார். ராஜாராமனின் போக்கு நாளுக்கு நாள் விபரீதமாகிக் கொண்டிருந்தது.

உள்ளக் கோயிலின் உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருக்க வேண்டியவன் உற்றாராலும் ஊராராலும் சாக்கடைப் புழுவாக மதிக்கப்படுவதை எண்ணி எண்ணிக் கலங்கினாள் சீதா. அவனைத் திருத்த எவ்வளவோ முயன்றாள். எல்லாம் விழலுக்கு இரைத்த நீராயின. தன் விதியை எண்ணிப் பொறுப்பை ஆண்டவனிடம் ஒப்புவித்து விட்டு, கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று வழி வழியாக வருகின்ற இந்து தர்மப்படி இருக்கப் பழகிக் கொண்டாள்.

அவனை அப்படியாவது இருக்க விட்டதா தெய்வம்! வேறு ஏதும் உருப்படியாகச் செய்யாவிட்டாலும் ராஜாராமன் வேலைக்காவது ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு நாள் அதையும் தீர்த்து முழுகிவிட்டு வந்து சேர்ந்தான். சொந்தத் தொழில் என்று சொல்லிச் சினிமா எடுக்கப் புகுந்தான். புதை சேற்றில் புதைந்தான். ஓட்டாண்டியானான். கடைசியில் ஒரு நாள் ஆளே மறைந்து மாயமாய்ப்போனான். 'வெளியூர் போயிருக்கிறான், வந்துவிடுவான். வந்துவிடுவான்' என்று நம்பிக் கொண்டிருந்த குடும்பத்தை நட்டாற்றில் தவிக்க விட்டு ஒரு வழியாகப் போய் விட்டான்.

சீதா இதயத்தை இரும்பாக்கிக் கொண்டாள். இருந்த ஒன்றிரண்டு நகைகளை விற்றுத் தையல் மிஷின் ஒன்றை வாங்கிப் போட்டுக் கொண்டாள்.

மூன்று குழந்தைகளையும் அத்தையையும் காப்பாற்றத் தையல் வருமானம் போதவில்லை. கஷ்டத்தோடு கஷ்டமாக அரைகுறையாய் விட்டிருந்த இந்தியைப் படித்துப் பூர்த்தி செய்தாள். அதன் பின் உழைப்புத்தான். வீட்டில் இயந்திரத்தோடு இயந்திரமாகக் காலையும் மாலையும் உழைப்பு. பகல் நேரத்தில் பள்ளியில் குழந்தைகளோடு குழந்தையாக உழைப்பு.

அதன் பின் அவள் எதைப் பற்றியும் எண்ணிக் கவலைப்படவில்லை. குழந்தைகளின் முன்னேற்றம் ஒன்றுதான் அவள் குறிக்கோளாக இருந்தது. அவள் விரும்பியது வீணாகவில்லை. பாடுபட்டது பாழாகவில்லை.

மூத்த மகன் கோபாலன் பட்டப் படிப்பை முடித்து விட்டு இன்று நல்ல வேலையில் இருக்கிறான். 'இனி நீ உழைத்தது போதும்' என்று தன் தாயைக் கடிந்து கொண்டிருக்கிறான். அடுத்தவள் லலிதா இந்த வருடந்தான் கல்லூரிப் படிப்பைப் பூர்த்தி செய்தாள். வேலைக்குப் போகத் தயாராயிருக்கிறாள். கடைக்குட்டி ரவி இனி கல்லூரிக்குள் நுழைய வேண்டும்.

குடும்பத் தலைவனைப் பற்றி அவளாக இதுவரை தன் குழந்தைகளுக்கு ஏதும் கூறினதில்லை. ஆனால் ஊரும் உலகமும் ஒருமுகமாக நின்று அந்தக் காரியத்தைச் செய்துவிட்டது. தங்கள் தந்தையைப் பற்றியும் அவரால் குடும்பத்துக்கு விளைந்த

தீமைகளைப் பற்றியும் சீர்தூக்கி எடை போட்டனர் குழந்தைகள். அவர்களை அது தந்தையின்மேல் தீராப் பகை கொண்டவர்களாக மாற்றி விட்டது.

அவரைப் பற்றிப் பேசவே சீதா கூசும் நிலை ஏற்பட்டது. இச்சமயத்தில்தான் பத்திரிகையில் அந்தக் கதை வந்திருந்தது. அது போதாதென அந்தக் கடிதமும் வந்திருந்தது. சீதாவின் கை அவளறியாமலே மறுமுறை கடிதத்தை எடுத்துப் பிரித்தது.

"சீதாவுக்கு,

அன்று முதல் இன்றுவரை நீ சீதாவாகவே இருந்து வருகிறாய். வந்திருக்கிறாய். ஆனால் நான் ராமனாக இருக்கத் தவறிவிட்டேன். அன்று உன்னை விட்டும் குடும்பத்தை விட்டும் ஓடியவன்தான். ஓடிக்கொண்டே இருந்தேன். என்னோடு வந்தவர் எல்லாம் இறுதி வரை வருவார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தேன். என் ஆட்டத்திலும் ஓட்டத்திலும் பங்கு கொண்டவர்கள் எல்லோரும் அவரவர் ஆட்டம் முடிந்ததும் பிரிந்து ஒதுங்கிவிட்டனர், என்னைத் தனியனாக்கி விட்டு. இப்பொழுதுதான் நான் என்னை உணர்கிறேன். இந்த உலகத்தின் தன்மையை உணர்கிறேன். இந்த உண்மை புரிய எனக்கு இந்தப் பதினைந்து ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. கட்டிய மனைவியைத் தவிர கடைசிவரை யாரும் துணையிருக்க மாட்டார்கள் என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன்.

நான் உனக்குச் செய்துவிட்ட மன்னிக்க முடியாத பாவத்துக்காக ஆண்டவன் எனக்கு மரண தண்டனை அளித்திருந்தாலும் மன மகிழ்வோடு ஏற்றிருப்பேன். ஆனால் கடவுள் கருணையுள்ளவர். எனக்குத் தீராத நோயைத் தந்ததோடு திருப்தி யடைந்துவிட்டார். ஆடிய ஆட்டமும் ஓடிய ஓட்டமும் ஒடுங்கி விட்டன. வாழ்வுப் பாதையின் கடைசிக் கல்லில் நான் நின்று கொண்டிருக்கிறேன். இறுதி மூச்சு வெளியேறுவதற்கு முன் நான் உன்னிடமிருந்து பெற விரும்புவது ஒன்றே ஒன்றுதான். உன் மனப்பூர்வமான மன்னிப்புத்தான் அது. அதோடு நம் செல்வங்களின் புகைப்படம் ஒன்றை எனக்கு அனுப்பிவை. கடவுளின் ஆசி உனக்கும் குழந்தைகளுக்கும் என்றும் உண்டு."

மேற்கொண்டு என்ன செய்வது என்ற பிரச்னைதான் அவள் முன் மலையெனத் தோன்றியது. நீண்ட நேரச் சிந்தனைக்குப் பின் முடிவான ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய் அவள் எழுந்தபோது உள்ளே நுழைந்தாள் அத்தை.

"ஏண்டியம்மா! மணி பன்னிரண்டு அடிக்கப் போறது. இன்னும் குளிக்கல்லே, சாப்பிடலே. என்ன வந்துடுத்து இன்னிக்கு உனக்கு?" — அங்கலாய்த்தாள் அத்தை.

'இன்னிக்குத்தான் எனக்கு எல்லாம் வந்துடுத்து!' என்று மனத்துக்குள்ளேயே கூறிக்கொண்ட சீதா, "இதோ ஒரு நொடியிலே குளிச்சுட்டு வந்துடறேன் அத்தை" என்று குளியலறைக்குக் கிளம்பினாள்.

வழக்கத்துக்கு விரோதமாக அன்று அவள் நன்கு ருசித்துச் சாப்பிடுவதையும் ஒரு பிடி அதிகமாகவே சாப்பிடுவதையும் பார்த்து விழித்தாள் அத்தை.

இரவு சுமார் எட்டரை மணி இருக்கும். பூனைபோல் மெதுவாக வீட்டினுள் நுழைந்தான் கோபாலன். காலையில் போனவன் இப்பொழுதுதான் வீடு திரும்புகிறான். 'டகட' என்று கேட்கும் மெஷின் ஓசை இல்லை. மெல்லிய குரலில் இழைந்து வரும் லலிதாவின் பாட்டுக்கூட இன்று கேட்கவில்லை. ஏனிந்த அமைதி! மெதுவாகச் சமையல் அறையை எட்டிப் பார்த்தான். கட்டாந்தரையில் ஒரு துண்டைச் சுற்றித் தலைக் கடியில் வைத்துக் கொண்டு பாட்டி படுத்திருந்தாள்.

"பாட்டி! பாட்டி!"

"வந்தியாடாப்பா! வா!"

"ஆத்திலே ஒருத்தரையும் காணுமே, எங்கே?"

"அதென்னமோ டிராமாவாம். அக்காவும் தம்பியும் போயிருக்கா. உங்கம்மா அந்த மெஷின் கிட்டத்தான் இருப்பா!"

"அங்கே காணுமே!"

"காணுமா? இந்த நேரத்தில் எங்கே போயிருப்பா? தைச்சதெல்லாம் கொடுத்துட்டு வரப் போனாளோ என்னவோ? சொல்லாமப் போக மாட்டாளே!" பாட்டி சொல்லிக்கொண்டே போனாள்.

அதைக் கேட்க அங்கு கோபாலன் இல்லை. அவன் மனம் ஏனோ ஆடியது. 'மட மட'வென்று படியேறியவன், மெஷின் இருந்த அறைக்குப் போனான். தைத்த துணிகள் எல்லாம் ஒரு புறமாகச் சீராக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. மூடாமல் மெஷின் திறந்தே கிடந்தது. அதனருகில் போனவன், ஊசிக்கடியில் பிரஸ்ஸர் புட்டின் அழுத்தத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு கவரைக் கண்டான். கையில் எடுத்துப் பிரித்தான்.



ஊசி இல்லாமல் இஞ்செக்ஷன் போடும் முறையை பிரிட்டனில் உள்ள மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறது.

ஒரு அடி நீள டார்ச் லைட் போன்ற ஒரு கருவியிலிருந்து மிக வேகமாக இஞ்செக்ஷன் மருந்து நல்ல அழுத்தத்துடன் செலுத்தப் படுகிறது. இந்த முறையில் வலி இன்றி மருந்து தோலுக்குள் புகுந்து விடுகிறது. தோலில் அடையாளமாக வடுக்கள் ஏதும் இருப்பதில்லை.

இந்த முறையில் சமீபத்தில் 117 போர் வீரர்களுக்கு இருபதே நிமிஷத்தில் இஞ்செக்ஷன் அளித்திருக்கிறார்கள்!

'ஸன்' (லண்டன்)
(எல். எல். எஸ்.)

முதலில் தந்தையின் கடிதம் கையில் வந்தது. அதைப் படித்து முடித்ததும் அவனுக்கு ஏற்பட்ட உணர்ச்சி இன்னதென்று அவனுக்கே புரியவில்லை. மற்றொரு கடிதத்தை எடுத்தான். பெற்ற தாயின் கையெழுத்து!

''அன்புள்ள கோபாலனுக்கு ஆசீர்வாதம்!

வீட்டுக்கு மூத்த மகன் என்ற காரணத்தால் உன் பெயருக்கு இதை எழுதுகிறேன். இதனுடன் உன் தந்தையின் கடிதமும் இருக்கிறது. இதுவரை படிக்காவிட்டால் அதை முதலில் படித்துவிடு. உன் தந்தை எப்படி இருந்தாலும் அவர்தான் எனக்குச் சகலமும்.

வாழ்க்கைப் பயணத்தில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டும் என்பது வழக்கு. என் வாழ்க்கையில் அவரது நேரடித் துணை இல்லாவிட்டாலும் அவர் தந்த மங்களச் சரடும் மங்களக் குங்குமமும் எனக்குப் பக்கபலமாய் இருந்தன. அவற்றின் துணை கொண்டே இந்த உலகத்தின் ஒவ்வொரு எதிர்ப்புச் சக்தியையும் எதிர்த்துப் போராடி உங்களை ஒரு நிலைக்குக் கொண்டு வந்தேன். நல்ல வழியைப் பின்பற்றி நடந்து செல்லும் மனத் திண்மையும் உரமும் நீங்கள் பெற்று விட்டீர்கள். உங்களுக்கு என் உதவி இனி அதிகம் தேவை இருக்காது. ஆனால் உன் தந்தைக்கு இன்றுதான் என் துணை அதிகம் தேவைப்படுகிறது. எந்தப் பக்க பலத்தைக் கொண்டு இத்தனை காலமும் வாழ்க்கையுடன் போராடி வந்தேனோ, அந்த மங்கலப் பொருள்களை அழியாமல் காப்பாற்ற மற்றொரு முறை போராடத் துணிந்து விட்டேன். எனது தீராத இந்தப் போராட்டத்தின் முடிவு இனிதாகவே இருக்கும் என்று நம்புகிறேன்.

உன் அனுமதியின்றி வெளியேறும் நான் உன் அனுமதி பெறாமல் மறுமுறை இந்த வீட்டில் நுழைய மாட்டேன். துணைவருக்குத் துணையாக இருக்கச் சென்றுவிட்ட உன் தாய்க்குத் துணையாக, அவள் வாழ்வோடு ஒன்றி விட்ட அந்தத் தையல் இயந்திரத்தையேனும் அனுப்பிவை. என்னை மன்னித்து என் மங்கள வாழ்வுக்கு ஆசி வழங்கும்படி பாட்டியிடம் கேட்டுக்கொள்ளவும். இப்படிக்கு,

அன்பு அம்மா''

'தான் இதமாக இருக்க முடியுமா என்று தன் அன்னை சந்தேகித்த போதிலும் அந்தத் தையல் இயந்திரத்தைப் பற்றி மட்டும் அப்படிச் சந்தேகித்து விடவில்லை' என்ற எண்ணம் எழுந்தவுடன் மெஷினை நேசக் கண்ணால் பார்த்தான் கோபு. ''அப்பா அம்மாவுடன் நீதான் ஒரு நாளும் சண்டை போட மாட்டாய்; உன்னையே அவர்களுக்குத் துணையாக அனுப்பி வைக்கிறேன்'' என்று வாய் விட்டுக் கூறுவது போலிருந்தது.

நாடகம்

சுகமாய்ப் போய் வா!

அன்றாட வாழ்க்கையில் நடக்கும் மிகச் சாதாரண நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு ஒரு சுவையான நாடகம் தீட்டுவது மிகவும் பெரிய சாதனைதான். அதைவிட அரிய சாதனை வெற்றிகரமாக அரங்கேற்றுவது.

இந்தச் சாதனைக்குக் காரணமாக இருந்தவர்கள் அம்பத்தூர் இளைஞர் கலாசாரக் கழகத்தின் அங்கத்தினர்கள். சென்ற மாதம் சென்னை வாணி மகலில் அவர்கள் நடத்திய ''சுகமாய்ப் போய் வா!'' என்ற சமூக நாடகத்துக்கு ரசிகப் பெருமக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். பரீட்சையில் படுதோல்வியடைந்த ஒருவன் 'போ' என்ற புனை பெயரில் எழுத்தாளனாகிறான். அவனுடைய வாழ்க்கையின் ஹாஸ்ய நிகழ்ச்சிகள்தாம் நாடகமாக்கப்பட்டிருக்கின்றன.

நாடகத்தின் முதல் காட்சியில், நடிகர்களை அறிமுகப்படுத்திய முறை முற்றிலும் புதுமையானது. எல்லாப் பாத்திரங்களும் சித்திரம் போல் அசைவற்றிருந்தனர். ஒருவர் வந்து ஒவ்வொருவரின் பெயரையும் சொல்லி அறிமுகப் படுத்தினதும் எல்லாரும் உயிர்பெற்று எழுந்து நாடகத்துக்கும் உயிர் கொடுத்தனர். ஆரம்பக் காட்சியே மிகவும் விறுவிறுப்பாயிருந்தது. அது ஒன்றே போதும்.



எழுத்தாளர் 'போ'வும் அவன் நண்பனும் மேடையில் தோன்றும்போதெல்லாம் கொட்டகையே சிரிப்பினால் அதிர்ந்தது. குமாரி விஜயா ஒருத்திதான் இந்நாடகத்தின் பெண் பாத்திரம். அதுவும் வெறும் மண்பாத்திரமாயிருந்துவிடவில்லை. நன்றாக நடித்தார்.

இந்நாடகத்தை எழுதியவர் இளைஞர் ஸ்ரீ சந்திரமௌலி. அவரே கதாநாயகனாக நடித்தார். அவருக்கு இருக்கும் கலையார்வமும், மேடைத் துணிச்சலும் பாராட்டப்பட வேண்டும்.

நாடகத்தின் டைரக்டர் எம். ஆர். ராஜாமணி நாடகத்தை நல்ல உத்திகளுடன் மிகவும் திறமையாக டைரக்ட் செய்திருக்கிறார். நாடகத்தில் பங்கு பற்றிய ஆர். கணேஷ், எம். ஆர். விசுவநாதன், ஆனந்தன், ராமமூர்த்தி ஆகியவர்கள் சிறப்பாகத் தங்கள் பொறுப்பை நிறைவேற்றினர். எனவே, இந்த நாடகத்தைப் பார்க்கச் சுகமாய்ப் போய் வரலாம்.


ஆஷா
மங்கையர்களின் அழகை
வெளிக் கொண்டு வருகிறது
ஆஷா ஸ்நோவும், பவுடரும் உங்
களுடைய சருமத்தை மிருதுவா
கவும் லாவண்ய மிக்கதாகவும்
ஆகச் செய்கின்றன.
கருமை நிறைந்த ஆஷா கண்
மை கண்களுக்கு குளுமையை
யும் இதத்தையும் தருகிறது.
மேலும், ஆஷா குங்குமத்தை
இட்டுக் கொள்ளுங்கள். இது
மூன்று வண்ணங்களில் கிடைக்
கிறது. அதாவன—ஃப்ளேம் ரெட்
(தீச்சிவப்பு), ப்ரைட் ரெட்
(பளிச்சென்று துலங்கும்
சிவப்பு), மற்றும் கருப்பு.
முகப் பவுடர் • ஸ்நோ • கண் மை • குங்குமம்
Asha
आशा कुंकुम
V-10 (A) Tam

மூன்றாவது பரிசு நாவல்



மணக் கோலம்

ஏ.வி.ஆர்

அத்தியாயம் 5

மறு நாள் தபாலாபீசுக்குப் போனதும் போகாததுமாய் ஜானு சிதம்பரத்திடம் சென்றான்.

''குட்மார்னிங் ஸார்....!''

''குட்மார்னிங்....'' பட்டுவாடா செய்ய வேண்டிய மணியார்டர்களை அவர் பரிசீலித்துக் கொண்டிருந்தார்.

அவர் அதை முடிக்கும் வரை மௌனமாக உட்கார்ந்திருந்த அவன், அவருடைய தலை நிமிர்ந்தபோது, ''நேத்திக்கு ஒரு ஆக்ஸிடெண்ட், ஸார்....!'' என்றான்.

''யாருக்கு? உனக்கில்லையே!''

''எனக்கு இல்லாட்டா நான் ஏன் வந்ததும் வராததுமா உங்ககிட்டே சொல்ல வரேன்!'' ஆனால் அவனுடைய அந்தராத்மா அவனை நையாண்டி செய்தது. 'நீ இந்தச் சின்னஞ்சிறு விபத்தைப் பற்றிச் சொல்ல ஓடி வரவில்லை' என்று.

''என்ன ஆக்ஸிடெண்டு? பஸ்ஸிலேயிருந்து விழுந்துட்டியா?''

''அதெல்லாம் இல்லே சார், ஒரு பயல் சைக்கிளை மோதி விட்டான்.... கீழே விழுந்துட்டேன்.....''

''எங்கே ?''

''நேத்துப் புறப்பட்டுப் போனேனா? மெயின் ரோடை க்ராஸ் பண்ணினேன்..... திடீர்னு ஒரு சைக்கிள்....''

அவன் விபத்துக்குக் கையும் காலும் வைத்து விவரித்து, அவரிடமிருந்து ஓர் இரக்க மூட்டையைச் சம்பாதித்துக் கொண்ட பிறகு, ''ஏன் உங்களுக்கு ராஜாங்கம் என்கிறவரைத் தெரியுமா ? அவருக்கு உங்களை நன்றாகத் தெரியுமாமே.... அவர்தான் விழுந்து கிடந்த சைக்கிளை நிறுத்தி வைச்சு, என் செருப்பையும் தேடிக் கொடுத்தார்..'' என்றான்.

''யாரு ராஜாங்கமா.... ஆமாம்.... ஆமாம்....' ராஜா.... கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளை. திருவாரூரிலே தான் இருக்கான். நான்தானே வீடு பார்த்துக் கொடுத்தேன்.''

''உங்களைத் தெரியும்னார்...!''

''பயல் கெட்டிக்காரன்.... பி.காம். பாஸ் பண்ணியிருக்கான். வெட்டிண்டுவான்னா கட்டிண்டு வந்து நிப்பன்.... பாரு, என் பொண்ணு கலியாணத்துக்குச் சர்க்கரையும் அரிசியும் கெடைக்காதோன்னு பயந்துண்டிருந்தேன். ராஜா நீதான் 'ஹெல்ப்' பண்ணணும்னேன். அவன் என்ன செய்தான் தெரியுமோ...அன்னிக்கு ராத்திரியே ஒரு மூட்டை நெல்லூர் கிச்சிலிச்சம்பாவும், ஐம்பது கிலோ சர்க்கரையும் கொண்டு வந்து இறக்கினான். 'போதுமா சிதம்பரம்?' என்று கேட்ட போது எனக்கு மூர்ச்சை வந்துடுத்து.....''

''ஐஸீ...!'' என்றான் ஜானு.

'' அந்த 'ஃபெலோ' வைப் பார்த்துக் கொஞ்ச நாளாறது.. அவனுக்கும் ஒழியறதில்லே....பெரிய லட்சாதிபதி கிட்டே பிரைவேட் செக்ரடரி. எனக்கும் இந்த போஸ்டாபீசை விட்டுட்டுப் போக முடியறதில்லே..''

''அதுவுமல்லாம அவருக்கும் குடும்பம் குழந்தைன்னு இருக்குமே...''

''சேச்சே! அவனுக்கு இன்னும் கலியாணமே ஆகலே.... ஏன், பண்ணிக்கோயேன்னேன். 'எனக்கேத்த பெண் இன்னும் என் கண்ணிலே படல்லே ஸார்' என்றான்.'' நிறுத்தி விட்டுச் சிதம்பரம், ''ஆனா இப்போ எப்படியோ! யாராவது கண்ணிலே பட்டிருக்காளோ, என்னமோ ?'' என்றார்.

ராஜா 'பாக்கிய நிலைய'த்தைஅடையும்போது மணி ஆறரை. ஜானு பஸ் ஏறிச் சென்றபிறகு, அந்தப் பெயரை இரண்டு மூன்று தடவைகள் உச்சரித்துப் பார்த்த அவன், பெயர் அழகான பெயர் என்ற திருப்தியுடன் தனக்கு வேண்டிய பஸ்ஸை எதிர்நோக்கி இருந்தான். அந்தப் பெண்ணுக்காகவே தான் மயிலாப்பூர் போகிறேன். டாக்ஸியில்

போய் விடலாம்' என்று அவன் சொல்லி யிருந்தான். அவள் மறுத்தது அவனுக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை... அதற்கு மாறாக ஒருவிதத் திருப்தியும் சந்தோஷமுமே உண்டாயின. ஒரு வேளை, அவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு அவன் டாக்ஸியில் ஏறி யிருந்தாளானால், அவள் மீது நல்லெண்ணமே தோன்றாமல் போயிருக்கும்! அவன் இருக்கிற இடத்தில் யார் இருந்திருந்தாலும், அவள் அம்மாதிரியான அழைப்பை ஏற்றிருப்பாள் என்ற எண்ணம் எழுந்து, அந்த எண்ணமே அவள் மீது அதிருப்தியையும், ஏன் எரிச்சலையும் உண்டாக்கி யிருக்கும்.

சில பொருள்களுக்கு அழகு மட்டும் இருக்கும். சிலருக்கு இல்லாத அழகை ஈடுகட்ட ஒரு கவர்ச்சி இருக்கும். அழகும் முகக் கவர்ச்சியும் ஒருங்கே அமைந்திருந்தாலும் எத்தனையோ — பெண்கள் சதைப் பற்று இல்லாமலோ அல்லது அதிக உயரமாகவோ, குள்ளமாகவோ இருந்துவிடுகிறார்கள். ஆனால் ஜானுவிடம் எல்லாம் இருந்தன. நிறம், அழகு, கவர்ச்சி, ஆரோக்கியம், இளமையின் பூரிப்பு எல்லாம் அவளிடம் சோபித்தன. இந்த ஜானு என்கிற பெண் யார்? மயிலாப்பூரில் எங்கிருக்கிறாள்? கழுத்தில் தங்க நிறத்தில் (அது தங்கம்தானோ என்னவோ?) ஒரு நெக்லெஸ் மட்டும் இருக்கிறது. காலில் மெட்டி இல்லை. (இப்போது கலியாணமான பெண்கள், மண வாழ்க்கையின் புனிதத்துக்காகவும், — தான் மணமானவள் என்பதை அறிவிக்கவும் மெட்டி அணியாமற் போனாலும், வெள்ளி மணிகள் கட்டிய மெட்டிகளை ஃபாஷனுக்காக மாட்டிக் கொள்ளுகிறார்கள்!) கண்டிப்பாக அவளுக்குக் கல்யாணமாகவில்லை!

பஸ்ஸில் அவனுடைய சிந்தனை ஜானுவைச் சுற்றியே வளர்ந்தது. அவள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்?



இல்லா விட்டால் ஏன் வேலைக்குச் செல்கிறாள்? அல்லது, எத்தனையோ பணக்கார வீட்டுப் பெண்கள் கலியாண மாகாததால், பொழுது போகாமல் வேலைக்குச் செல்கிறார்களே, அவர்களைப் போல ஒருத்தியா? ராஜாவின் மனத்தில் அடுத்தடுத்து எழுந்தகேள்விகளுக்கு அவனால் விடை சொல்லிக் கொள்ள முடியவில்லை.

எல்லாம் சிதம்பரத்திடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று அவன் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து, அவளைப் பற்றிய சிந்தனைகளை மறந்தான். அவளுடைய உருவம் மட்டும் மனத்தில் பதிந்து நின்றது.

ராஜா உள் கேட்டை நோக்கி நடக்கையில், வெளி கேட்டு வழியாக ஒரு சிறு கார் தெருவுக்கு வந்து, இடது பக்கமாகத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தது. இது வரையில் அம்மாதிரியான பழைய காரை அவன் 'பாக்கிய நிலைய'த்தில் கண்டதில்லை.

அவன் உள் கேட்டில் நுழையாமல் பிளாட்பாரத்திலேயே நிற்பதைக்கண்ட கூர்க்கா ராஜாவின் அருகே வந்தான்.

"பகதூர்.... யார் வந்து, போறாங்க, அந்தச் சிவப்புக் காரிலே?" கார் சென்ற திசையைச் சுட்டிக்காட்டினான் ராஜா. ஆனால் கார் கண்ணை விட்டு மறைந்ததையும் அப்போதே உணர்ந்தான்.

பகதூர் அவன் கைகாட்டியஇடத்தை ஒரு கணம் பார்த்துவிட்டு, "ஒரு கார் வந்தாங்க.... ஒரு மணி நேரமிருக்கும்.... சந்தானம் ஸாப்பும், இன்னொரு வயசான ஆளும் இருந்தாங்க. சந்தானம்தானேன்னு நான் நிறுத்தாம அனுப்பிச்சுட்டேன்..." என்றான்.

'தேவி கம்பெனி ப்ரொப்ரைட்டர்' என்று தன்னுள் முணு முணுத்துக் கொண்ட ராஜா, "ஆல் ரைட்!" என்று கூர்க்காவிடம் சொல்லி விட்டு மேலே நடந்தான்.

ஹாலை அடைந்து ஒரு விநாடி நின்ற அவன், மெதுவாகக் கோதண்டராமனின் அறையின் மேல் நின்ற இடத்திலிருந்தே கண்ணோட்டமாகப் பார்த்தான். அங்கிருந்து பேச்சொலி ஏதும் வராமற் போகவே, மெதுவாக நடந்து அந்த அறையை அடைந்தான்.

கோதண்டராமன் கண்களை மூடியவராய், கால்களை நீட்டி, சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். ராஜாவின் காலோசையைக் கேட்டதும், அரைக்கண் திறந்த அவர், "ராஜாவா?" என்றார்.

"ஆமாம்.... ஸார்.....!" என்ற அவன், "ஆறு மணிக்கு மருந்து சாப்பிடணுமே. சாப்பிட்டீர்களா?" — என்று கேட்டான்.

"இன்னும் இல்லே...."

"ஆறரை ஆறது.... டாக்டர் எத்தனை அடிச்சுண்டாலும் அந்தந்த டயத்துக்குச் சாப்பிடணும்னு உங்களுக்கும் தோணமாட்டேன் என்கிறது. போதாதற்கு, கண்ட கண்டவர்களுடைய டிஸ்டர்பன்ஸ் வேறே.... எதுக்குத் தேவிக் கம்பெனிக்காரர் வந்திருந்தார்....?" ஒரு சிறு குப்பியிலிருந்து எடுத்த இரண்டு மஞ்சள் நிற மாத்திரைகளையும், ஒரு கண்ணாடித் தம்ளரில் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு அவன் அவர் முன் நின்றான்.

அவற்றைக் கையில் வாங்கிக் கொண்ட கோதண்டராமன், "நீ எழுதின லெட்டரை எடுத்துக்கொண்டு வந்தார்கள்....." என்று சொல்லி விட்டு ஒரு மாத்திரையைத் தம் வாயில் போட்டு ஒரு வாய் நீரும் பருகினார்.

அவர் இரண்டாவது மாத்திரையைப் போட இருக்கையில், "சந்தானமும் வந்தானா?" என்று கேட்டான் ராஜா.

"ஆமாம்....." இப்போது இரண்டாவது மாத்திரையும் தண்ணீருடன் கலந்து உள்ளே இறங்கியது.

"என்ன சொல்லுகிறார்கள்?"

"நீ எனக்குத் தெரியாம எழுதியிருக்கக் கூடாது....."

"நூத்துப் பன்னிரண்டு ரூபாய்னா, நூத்துப் பன்னிரண்டு ரூபாய். அதை ஏன் விடணும்?"

"ரகுபதி சமாசாரத்தைத்தான் நாம் ஒரு வழியாகத் தீர்த்தாகி விட்டதே!"

"அதனாலே.....?"

"இந்தப் பணமும் அது சம்பந்தமானதுதானே?" என்று மெதுவாகத் தாழ்ந்த குரலில் கூறிய கோதண்டராமன், "பார்க்கப் போனா, நாம் தான் தேவி கம்பெனிக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கு.... நீ அந்த ரிகார்ட்ஸை யெல்லாம் பார்க்காம அவசரப்பட்டு எழுதிவிட்டாய்" என்று முடித்தார்.

ராஜா பதில் சொல்லவில்லை. உண்மையிலேயே அவன் அவர் சொல்லும் பழைய 'ரிகார்ட்ஸை'ப் பார்க்கவில்லை.

மெதுவாக, "ஸாரி!" என்றான்.


"போனாப் போறது!" என்ற கோதண்டராமன், "நாளைக்கு ஆடிட்டரை வரச் சொல்லியிருக்கேன்....." என்றார்.

தோடகற்றிய பருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும்

உங்கள் கால்நடைகளினின்று **பெருகிய** வருவாய் பெற உறுதியான வழி!

உங்கள் கால்நடைகளின் பால் வளத்தைப் பெருக்குங்கள்—தோட கற்றிய பருத்திப் பிண்ணாக்கையும் பிழி சத்துக்களையும் தீனியோடு சேர்த்துக் கொடுத்திடுங்கள். உடல்வளர்ச்சி, அளவிலும் தரத்திலும் ஓங்கிய பால்வளப்பம் ஆகியவற்றுக்கு உதவியான புரதப் பொருள்களையும் ஊட்ட நிறைவுப் பண்டங்களையும் வழங்குபவை தோடகற்றிய பருத்திப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களுமே. கால்நடைகள் பால்வளம் குன்றுவதற்கு முக்கிய காரணம், தின்னும் தீனியிலே புரதப பொருள்களும் தெம்புச் சத்துக்களும் குறைவாயிருத்தலே. குறைவுபட்ட அந்த ஊட்டப் பொருள்களை சிக்கனமான விலையிலே உன்னதமாக நிறைவுசெய்கின்றன தோடகற்றிய பருத்திப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும். எந்த இனத்துக் கால்நடையாக இருப்பினும் சரி, புரதப் பொருள்களின் அன்றாடத் தேவை பூரணமாகக் கிடைப்பதற்கு பிராணி ஒன்றுக்கு ஒரு கிலோகிராம் அளவே போதும். உங்கள் கால்நடைகளினின்று உரிய வருவாய் பெறுங்கள்—தோடகற்றிய பருத்திப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும் தீனியாகக் கொடுத்திடுங்கள்.

தோட்கற்றிய பருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும் கால்நடைகளின் உடல்வளர்ச்சி, பால்வளம் இரண்டையும் பெருகச் செய்கின்றன!



ஆல் இந்தியா காட்டன்ஸீட் கிரஷர்ஸ் அஸோஸியேஷன்,
அலவி சேம்பர்ஸ், டாமரிண்ட் லேன், பம்பாய்-1.

''தெரியும்.... ஆனா அவசரப்பட்டுப் பிஸினஸை க்ளோஸ் பண்ணுவானேன்? உங்களுக்கு உங்க மேலேயே நம்பிக்கையில்லே....'' என்றான் ராஜா.

''நான் ஆரம்பிச்ச பிஸினஸை நானே என் கையால் நிறுத்தினால் தாண்டா என் மனசுக்குச் சமாதானமாக இருக்கும். இந்த ரவிகிட்டே எத்தனையோ அடிச்சுண்டேன். எனக்குப் பிஸினஸும் வேண்டாம், புண்ணாக்கும் வேண்டாம் என்கிறான். அப்புறம் எனக்கு என்னடா அக்கறை?''

''இதிலே நான் சொல்றதுக்கு என்ன இருக்கு.....? எஸ்டாப்லிஷ் ஆன கம்பெனி.... மூட வேண்டாம்னு தோணறது.....''

''இன்கம்டாக்ஸ்காரன் நோட்டீஸ் விட்டிருக்கானே, பழைய பாக்கிக்கு'' என்று பேச்சைத்திருப்பினார் கோதண்டராமன்.

''ஆமாம், ஒன்றரை லட்சம்.''

''அதைக் கட்டி விடணும்....''

''எதிர்த்து வாதாடவில்லையா ?''

கோதண்டராமன் சிரித்தார்.

''டேய், இன்கம்டாக்ஸ்காரன் கண்ணிலே மண்ணைத் தூவினதே ஏழெட்டு லட்சம் இருக்கும், இந்தப் பத்து வருஷத்திலே.... அவன் இப்போ கேட்கிறது ஒண்ணரை லட்சம்தானே..... கொடுத்துத் தலைமுழுகிட்டா நாளைக்கு ரவியையும் அகிலாவையும் கஷ்டப்படுத்த மாட்டான்....''

ராஜாவின் யோசனை கோதண்டராமனைவிட்டு வருமானவரி இலாகாவை விட்டுச் சஞ்சாரம் செய்தது. அதே அறையில், கட்டிலுக்குக் கீழே — 'மொஸாய்க்' தள வரிசைக்கு அடியில் ரகசியமாகப் புதைத்து வைத்திருக்கும் கள்ளப் பணம் எவ்வளவு என்று அவனுடைய மனம் கேட்டுக் கொண்டிருந்தது! இன்கம்டாக்ஸ்காரனை ஏமாற்றிய பல லட்சங்களில் சில லட்சமாவது ஐந்து பத்து கரென்ஸி நோட்டுக்களில் இருக்குமே ?

அவனையும் அறியாமல் அவனுடைய எதிர்காலம் கண் முன் நின்றது. பெரிய வீடு. கார், போன், ஏர்கண்டிஷன் அறை.... அம்மா பட்டுப் புடவையில், காதில் வைரத்தோடு மின்ன உட்கார்ந்திருக்கிறாள்.... அப்பா தங்க ப்ரேம் மூக்குக் கண்ணாடியில் புன்னகை பூக்கிறார். ஆமாம், அவனுடைய மனைவி முகமெல்லாம் சிரிப்பாக அவனுக்கு அருகே நிற்கிறாள். மனைவி... மனைவி.. யார் அவள்.... அவளுடைய முகம் எப்படி இருக்கும்... அழகும் கவர்ச்சியும் ஆரோக்கியமும் இளமையின் பூரிப்

தண்ணீர் ஏன் நெருப்பை அணைக்கிறது?



இந்தியாவைப் போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் அடிக்கடி தீவிபத்து ஏற்படுவது மிகவும் சாதாரண விஷயமாகி விட்டது. தீ என்றதும் அதை அணைக்க நமக்கு முதலில் தண்ணீரின் நினைவுதான் எழுகிறது. ஆனால் அந்தத் தண்ணீர் எப்படி நெருப்பை அணைக்கிறது என்பது நம்மில் பலருக்குச் சரியாகத் தெரிந்திருக்காது. தண்ணீரை நெருப்பின் மீது கொட்டியதும் நீர் நெருப்புடன் சேர்ந்து நீராவியை உண்டாக்குகிறது. இதனால் தீயின் வெப்பம் குறைக்கப்படுவதுடன் மற்றொரு அதிசயமும் நடக்கிறது. நீரினால் ஏற்படும் நீராவி நெருப்பை அப்படியே மூடிக்கொண்டு மேலும் சுத்தக் காற்று உள்ளே புகாதவாறு தடுத்து நெருப்பை அணைத்து விடுகிறது.

ஆதாரம்: பொழுதுபோக்கு பௌதிகம்

தகவல்: குமாரி எஸ். பாலா

பும்.... மனைவியின் உருவம் தெரிகிறது! ஆனால் அங்க அவயவங்கள்.... லட்சணங்கள்.... குவிந்த உதடுகள்.... செம்மை படிந்த கன்னங்கள். நீண்ட புருவங்களின் கீழே விளையாடும் கருமணிகள்......

ராஜாவின் மனத்தில் ஏற்பட்ட சிலிர்ப்பில் அவன் ஒருகணம் கண்ணை மூடிக் கொண்டான்.

அவனுடைய மனத்தில் உருவாகியிருந்த பெண்ணுருவம் ஜானுவாகத் தோன்றிச் சிரித்தது.

''என்ன ராஜா.... அப்படியே நின்னுட்டே.... உடம்பு கிடம்பு சரியில்லையா.....?''

''ஒன்றும் இல்லே....'' அவன் இந்த உலகத்துக்குத் தன்னைத் தானே இழுத்துக் கொண்டு வந்தான்.

''நீ வேணும்னா போய் ரெஸ்டு எடுத்துக் கொள்.... இரண்டு நாளா உனக்கும் ஒரே அலைச்சல்....''

''பரவாயில்லே....'' ஒரு நாற்காலியில் உட்கார்ந்த அவன் மெதுவாக, ''தலை சுத்தறது....'' என்றான்.

அடுத்த வினாடி கோதண்டராமன் ஒரு பொத்தானை அமுக்க, சீமாச்சு மறு நிமிஷமே அங்கே வந்து நின்றான்.

''சிமாச்சு.... ஒரு தம்ளர்லே கொஞ்சம் மோர் கொண்டு வா... ராஜாவுக்குத் தலை சுத்தறதாம்....!''

சிமாச்சு தனக்கே உரித்தான குறும்புடன், ''யாருக்கு... ராஜாவுக்கா... தலை சுத்தறதா... அஞ்சாறு வடையை இன்னிக்குத் தயிர்ப் பச்சடியிலே தோய்ச்சுத் தோய்ச்சுத் தின்னபோதே நினைச்சேன்... இன்னிக்கு இந்த ஆளுக்கு ஏதாவது வரும்னு... குழந்தை மாதிரி வயிறு தெரியாம தின்னா?'' என்றான்.

''நீ போய் மொதல்லே மோர் கொண்டு வா!'' என்று சற்று உரக்கவே கூறினார் கோதண்டராமன்.

அடுத்த கணம், 'ஐயோ' என்ற அலறல் அந்த அறையை மட்டுமல்லாமல், 'பாக்கிய நிலைய'த்தையே பிளந்தது.

ஃ ஃ ஃ

எத்தனையோ நாட்களுக்குப் பின் அகிலாவைச் சந்தித்த சந்தானத்துக்கு அவளுடன் நந்தவனத்துச் சிமிண்டுப் பெஞ்சியில் உட்கார்ந்து சிறிது நேரமாவது பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆசைதான். ஆனால் கம்பெனி முதலாளி அவசரப்படுத்தினார். அவருக்கு இன்னும் ஒரு வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

''நான் வருகிறேன் அகிலா!'' என்று கிளம்பினான்.

''உம்...... இப்போ போனால் இன்னும் நாலைஞ்சு மாசமாவது ஆகும் உங்களைக் காண!'' என்றாள் அகிலா. அவளுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது.

அப்போதுதான் அங்கே வந்த பாக்கியம், ''என்ன சந்தானம், நான் ஒருத்தி இருக்கிறதுகூட உனக்கு மறந்து போச்சு இல்லியா..... உம்... உன்னைச் சொல்லி என்ன பிரயோசனம்... வேலை ஒசந்து போயிடுத்து!'' என்றாள்.

''அதெல்லாம் இல்லை, மாமி.... வாஸ்தவமாகவே ஒழியமாட்டேன் என்கிறது..... இன்னமே அவசியம் வருகிறேன்.....''

''அந்த ராஜா என்னவோ உன்கிட்ட சரியா நடந்துக்கலைன்னு கேள்விப்பட்டேன். நீ அதுக்கோசரம் வராம இருந்துக்க வேண்டாம். பழையபடி வந்து போயிண்டிரு... நான் அவனைக் கண்டிச்சு வைக்கிறேன்....''

அவளுடைய அன்பு தோய்ந்த வார்த்தைகளுக்கு எப்படி நன்றி செலுத்துவது என்று அறியாமல் அவன் நிற்க, ''போவோமா?'' என்ற குரல் திண்ணையில் கேட்டது.

முதலாளியைக் காக்கும்படி செய்து விட்டோம் என்று அவன் மனம் உறுத்தவே, ''நான் இன்னொரு நாள் வந்து விவரமாப் பேசறேன், மாமி! வரேன் அகிலா....!'' என்று கூறிவிட்டு நகர்ந்து விரைந்தான்.

அவன் காரில் ஏறும் வரை அவனையே பார்த்துக் கொண்டு நின்ற அகிலாவின் மனத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் ஓடி மறைந்தன. தன்னுடைய உணர்ச்சியை அம்மா புரிந்து கொண்டாலும், அதில் தவறு இல்லை எனக் கருதியவளாய் அகிலா, ''சந்தானம் நல்லவன் அம்மா!'' என்றாள்.

''நீ என்ன புதுசா என்கிட்டே சொல்றியா? அம்மாவையும் அப்பாவையும் சின்ன வயசிலேயே தோத்துப் புட்டு உழைச்சு முன்னுக்கு வந்தவன். பொய்யும் பித்தலாட்டமும் தெரியாதவன்..... அதனாலேதான் உங்கப்பா கம்பெனியிலே அந்தக் காலத்திலே அவனாலே இருக்க முடியல்லே...''

'அதனாலேதான் அந்த இடத்திலே இந்த ராஜா இருக்கான்!' என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்ட அகிலா, தாயார் பின்கட்டை நோக்கிச் செல்லுவதைப் பார்த்து, பின் தொடர்ந்தாள்.

சுமார் ஒன்பது மணிக்குச் சந்தானம் வீட்டை அடைந்த போது, சீதா மட்டும் சாப்பிடாமல் ஆபீஸ் வேலையைச் செய்து கொண்டிருப்பது தெரிந்தது. கமலா அவனைக் கண்டதும், ஓடோடி வந்து ஜானுவுக்கு நேர்ந்த விபத்தை விவரித்தாள். பிறகு, ''அவளுக்கு ரோட்டிலே நடக்கவே தெரியாது!'' என்று தனது அபிப்பிராயத்தையும் வெளியிட்டாள்.

''இப்போ எங்கே ஜானு?''

''படுத்துண்டாச்சு. கால் பொண வலி வலிக்கிறதுன்னு! ஆனா பொணத்துக்கு எப்படி வலிக்கும்.... வலிச்சாலும் எப்படித் தெரியும்னுதான் எனக்கு விளங்கல்லே.....!''


சந்தானம் ஏதோ சிரித்து மழுப்ப, சீதா பேனாவை மூடி வைத்துவிட்டு எழுந்தாள்.

''சாப்பிடுவோமா?''

''உம்.....!''

சாப்பாடு ஆனபிறகு சீதா தன்னுடைய வேலையில் தொடர்ந்து ஈடுபட, கமலா படுக்கையை உதறிப் போட, சந்தானம் தன்னுடைய அறைக்குச் சென்று, கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டு, முந்தின இரவு பாதியில் நிறுத்தியிருந்த நாவலைப் படிக்கலானான்.

இந்த ப்ரிஸில் முனைகளை பூதக் கண்ணாடியின் கீழ் ஒப்பிட்டுப் பாருங்கள்



பினகா


டூத் பிரஷ்

'வட்டவடிவுள்ள நுனிகளை' உடையதால்
REG. PAT. NO.
ஈறுகளைக் கிழிக்காது

சுத்தமாக பல் துலக்குங்கள்
அபாயமின்றி பல் துலக்குங்கள்
பினகா கொண்டு பல் துலக்குங்கள்

CIBA

காலை—நடுப்பகல்—அல்லது இரவு



எச்சமயத்திலும், பகட்டான **கடாவ்** வாயில்களில்

ஃபாஷனின் சின்னமாகத் திகழ்வீர்கள்



தி கடாவ் மாகன்ஜீ ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கோ. லிட்., [illegible] மில்கள்: ஹெய்ன்ஸ் ரோடு, பைகுல்லா, பம்பாய்-27. மொத்த வியாபார ஜவுளிக்கடை: கோவிந்த் சௌக், மூல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய்-2. சில்லறை விற்பனைக் கடைகள்: 216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1 கடாவ் வாயில்ஸ், 2/133, மவுண்ட் ரோடு, சென்னை 2

SISTA'S-KMS-389 A Tam

பத்து அடித்தது. பத்தரையும் ஆகி எங்கும் நிசப்தம் நிலவியது. சுவாரஸ்ய மாகச் சென்ற கதையில் மூழ்கிக் கிடந்த சந்தானம், திடீரென்று தெரு வில் ஒரு காரின் 'ஹார்ன்' அலறுவ தைக் கேட்டுத் திடுக்கிட்டான். அடுத்த நிமிஷம் அந்தக் கார் அவன் வீட்டு வாச லில் நின்று விட்டதையும் உணர்ந்தான். அவசரமாக எழுந்து, கதவைத்திறந்து திண்ணைக்கு வந்தவன், கம்பி அழி களைப் பிடித்துக் கொண்டு அகிலா நிற்ப தைப் பார்த்தான்.

திண்ணைக் கதவின் தாளைத் திறக்கை யில், "அகிலா.... என்ன விஷயம்?" என்று பதற்றத்துடன் கேட்டான். மனத்தில் சந்தேகமும் பயமும் தோன்றின.

அவன் நன்றாக இரண்டு கதவுகளை யும் திறக்கும் வரை காத்திருந்த அகிலா திண்ணை ஏறி வந்தாள். பிறகு, நிதான மாக, தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவனுடைய பயம் பிரதிபலிக்கும் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்:

"அப்பாவை ஆஸ்பத்திரியில் அட் மிட் பண்ணியிருக்கோம்.... இப்போ நேரே அங்கேயிருந்துதான் வரேன்."

"ஏன், என்னாச்சு? நான்கூட ஆறே கால் வரைக்கும் இருந்தேனே....".

"ஆமாம்.... நானும் அம்மாவும் கோவிலுக்குப் போகலாம்னு இருந் தோம்...... அப்பத்தான் ராஜாவும் வந்திருக்கான். திடீர்னு அப்பா, அலறினார்......"

"ஆஸ்பத்திரியிலே எப்படி இருக் கார்.....? ரவிக்குத் தந்தி கொடுத் துட்டியா ?"

"ஆக்ஸிஜன் கொடுக்கிறா.... இது ஸெகண்ட் அட்டாக்.... இப்போ என் னோடு நீங்க வரணும்..... ரவிக்கு ராஜா தந்தி கொடுத்திருக்கிறான். வீட்டுக்குப் போய் பம்பாய்க்கு ஒரு 'டிரங்க் காலும்' புக் பண்ணணும். கிளம்புங்கள்....."

"இதோ, வரேன்......!"

"ஒரு ஷர்ட்டைப் போட்டுக்கொண்டு வாருங்கள்.....!"

அவன் ஒரு ஷர்ட்டைக் கையில் எடுத்துக் கொண்டே பாகீரதி அம்மா ளைக் கூப்பிட்டான். அவளும் உட னேயே விழித்துக் கொண்டாள்.

"மாமி.... நான் அவசரமாப் போக வேண்டியிருக்கு..... கோதண்டராம னுக்கு உடம்பு அதிகமாயிருக்காம்."

"அப்படியா.... சரி, போயிட்டு வா. இது யாரு பொண்ணு?"

"அவருடைய பெண்தான் மாமி, நான்....."

நரகத்தில் விசாரிக்கவும்!



ஒரு நாள் காலை பெருமாள் கோவில் வாசலில் அதன் தர்மகர்த்தா வைகுண்டத் துக்கு ஏகிவிட்டதாக ஓர் அறிவிப்பு அட்டை தொங்கவிடப்பட்டது. அன்று மாலை அதன் கீழ் இப்படி யாரோ எழுதியிருந்தார்கள்:

'இன்னும் வந்து சேரவில்லை. நரகத்தில் விசாரித்துப் பார்க்கவும்.'

"பெயர் அகிலா.... சரி வா, அகிலா போவோம்....."

இருவரும் சென்றபின் பாகீரதி கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு திரும்பினாள். அவளுடைய கணவருக்கு யமனாக வந்தவரை இப்போ அந்த யமனே அழைக்கிறான் போலிருக்கிறது என்று அவள் நா முணுமுணுத்தது.

காரில் ஏறினதும் அகிலா, 'எனக்கு இந்தத் தடவை நம்பிக்கையில்லை...!" என்று சொல்லியவளாய் 'ஸ்டார்ட்' செய்தாள்.

"நோ.... நோ.... அப்படியெல் லாம் சொல்லக் கூடாது....!"

தெருவைக் கடந்து சென்றபின், "எனக்கு என்கரேஜிங்கா நீங்க.... சொல்லி என்ன பிரயோசனம்? நிச்சய மாக அப்பா உயிரோடு திரும்பப் போற தில்லை.... ஏழெட்டு நாளாகவே அவர் அலைஞ்சிருக்கார்....." என்றாள் அகிலா.

கொஞ்ச நேரத்துக்கு மௌனம் சாதித்த சந்தானம், "இப்போ நான் வந்து என்ன செய்யணும்னு நினைக் கிறே, அகிலா !" என்றான்.

"இந்த ராஜாகிட்டே இந்தச் சம யத்திலே எதையும் ஒப்புவிக்கப்படாது. அப்பாவுக்குத் 'திடீர்'னு ஏதாவது ஆகி விட்டால் உங்களை உடனே வரவழைக்க ணும்னு ரவி சொல்லிவிட்டுப்போயிருக் கான்.... ஆஸ்பத்திரியிலே அம்மாவும் உங்களை அழைச்சுண்டு வீட்டுக்குப் போகச் சொன்னா."

"இது அவனுக்கு, அந்த ராஜா வுக்குத் தெரியுமா?"

"இன்னும் தெரியாது... தெரிஞ் சாத்தான் எனக்கு என்ன?" என்று கூறினாள் அகிலா. (தொடரும்)



ஸ்வாமிகள் தந்த வரம்

ரா. கணபதி

வாசுதேவன் ஆபீஸிலிருந்து வீட்டுக்குள் நுழையும்போதே ''மீனு மீனு'' என்று உற்சாகமாகக் கூப்பிட்டான்.

அவள் உடனே எழுந்து சென்று அந்த உற்சாகத்தை எதிர்கொள்ளும் நிலையில் அன்று இல்லை. சுரமும், சளியுமாகக் குழந்தை மல்லிகா பகலிலிருந்தே கையில் நிற்காமல் அழுது கொண்டிருந்தது. இப்போதுதான் கால்களை நீட்டி அதில் குழந்தையைக் குப்புறப் படுக்க வைத்துக் கொண்டு அதன் இளம் மண்டையில் இலேசாகத் தட்டியதில் சற்றுக் கண் சொருகுவதும் மீண்டும் விழிப்பதுமாய் இருந்தது. இச்சமயத்தில் அதன் தூக்கத்தைக் கலைக்க அவள் விரும்பவில்லை.

வாசு கூப்பிடுகிற குரலிலே ஒரு

மகிழ்ச்சி ததும்பியிருந்தபடியால் ஏதும் ஆபத்தான விஷயமில்லை என்பதை அவனால் தெளிய முடிந்தது. எனவே அவன் அவசரப் படவில்லை.

வாசுதான் அவளிடம் வந்தான்.

''ஏன், குழந்தைக்கு என்ன?'' என்று பதறிக் கேட்டான் அவன்.

குழந்தை விஷயமாகப் பதறுவது அவனுடைய குண விசேஷம்.


''ஒண்ணுமில்லே. வழக்கம்போலத்தான் முட்டு ஜலதோஷம் — இருமல். குங்குமப் பத்துப் போட்டிருக்கேன். ஏனோ இப்படி அரிஷ்டம் பிடுங்கி எடுக்கிறது.... அது சரி, நீங்க என்ன அதிசயமா வாசல்லேந்தே பெரிய சமாசாரம் சொல்ல வந்தேன்?'' என்று மெல்லிய குரலில் வினவினுள் மீனு.

''உன்னைப் பொறுத்த மட்டில் அதைவிடப் பெரிய சமாசாரமே இருக்க முடியாது. உன் ஸ்வாமிகள் இந்த ஊருக்கு நாலஞ்சு நாளிலே வராராம். நவராத்திரி பூஜை எல்லாம் இங்கேயேதானும். அதுவும் எங்கே தங்கரூர்னு நெனக்கிறே! உனக்குப் பரம சௌகரியமாக இந்த 'சத்தியப் பிரகாஷ்' கலியாண மண்டபத்தில்தான் முகாமாம்'' என்றுன் வாசு.

''அப்படியா? ஸ்வாமிகளா? ''ரா? இங்கேயா ''வ்வளவு கிட்டக்கவா? அதுவும் நவராத்திரி பூஜைக்கா? இத்தனை நாழி அவாளையேதான் நெனச்சுண்டு மனசை உழப்பிண்டிருந்தேன். குழந்தை கையிலே நிக்காம அழுதது? அவாளைத் தியானம் பண்ணிண்டு அவாளுடைய தாலாட்டைத்தான் பாடினேன். நிம்மதியாத் தூங்கிடுத்து. 'இதோ வரேன்'னு அவாளும் தேடிண்டு வரா'' என்று மீனு ஆர்ப்பரித்தாள்.

''அது சரி, இப்போ நீ அவர் பெருமையை அளக்கிற சத்தத்திலேயே குழந்தை முழிச்சுண்டும் ஆச்சு பார்'' என்று கேலியாகச் சொல்லிக் கொண்டே, தலை தூக்கும் குழந்தையை நெருங்கினுன் வாசு. அவனுக்கு 'அவளுடைய' ஸ்வாமிகளிடத்தில் விசேஷமான ஈடுபாடு கிடையாது. மீனுவும் இன்னும் பல பக்தர்களும் அவரிடம் பைத்தியமாக ஈடுபட்டிருப்பதற்குக் காரணமும் அவனுக்குப் புரிந்ததில்லை. அவர் அவர்களுக்கு என்ன வரம் தந்துவிட்டார் என்பது அவனுக்குத் தெரியவில்லை. பணம், பதவி, குடும்ப சௌக்கியம் இவற்றையெல்லாம் அவர் பக்தர்களுக்கு அளிக்கவேண்டும் என்று எண்ணுமளவுக்கு அவன் அறிவிலியல்ல. எனினும் அவர் மீனுவுக்கும் அவளைப் போன்ற பலருக்கும் விசேஷமான ஞானம், ஆன்மிக சம்பத்து இவற்றை யாவது தந்தாரா எனில், அப்படியும் தெரியவில்லை. மீனுவும் எல்லா சாமானியப் பெண்களைப் போலவேதான் இருந்தாள்—ஆனாலும் இந்த ஸ்வாமிகளிடம் மட்டும் அசாமானியமாக உருகினுள்! இது ஏன்?

வாடிப்போன முகமும், நீர் கரந்த ரணை குண்டுக் கண்களும், அவற்றைப் பிசையும் பொறுமையற்ற புறங்கைகளும், நெற்றி முழுதும் காய்ந்து பொடிப் பொடியான குங்குமப் பற்றும், ஜல ஜல என்கிற மூக்கும், மூக்கடைப்பால் சுவாசத்துக்காகத் திறந்த வாயும், வேதனை முனகலுமாகக்



குழந்தை படும் அவதியைக் காண வாசுவுக்குத் தாள முடியாத கஷ்டமாயிருந்தது.

''மல்லிக் கண்ணு! ஒடம்புக்கு என்னடா தங்கம்?'' என்று கேட்டுக் கொண்டே அதை வாங்கிக் கொண்டான். அது ஒரேயடியாய்ச் சோர்ந்து போய் அவன் தோளில் தலையைப் போட்டுக் கொண்டது. மூக்குக்குள் அரிப்போ என்னவோ, மண்டையை அவன் தோள் மீதே உருட்டியது. அதன் வாயிலிருந்து வெளியான உஷ்ணமான காற்று குழந்தைக்கு 'டெம்பரேசர்' ஏறியிருப்பதை வாசுவுக்கு உணர்த்தியது.

''ஜுரமே வந்துவிட்டது போலிருக்கே!'' என்று மிகவும் கலக்கத்துடன் கூறினுன்.

''டாக்டர்கிட்டே காட்டிட வேண்டியது தான்'' என்றாள் மீனு.

'' சரி, டிபன் பண்ணிட்டு வரேன். டாக்டரிடம் போகலாம்'' என்றபடி நகர்ந்தான்.

சமையலறையில் புகுந்து அவனே டிபன் எடுத்துக் கொள்ளும் சந்தடி வந்தது.

'மானைய பட்சத்தில் சாயங்காலம் டிபன், அப்புறம் ராத்திரியும் சாப்பாடு என்று சாப்பிடா விட்டால்தான் என்ன? ஒரு சந்தியாவந்தனம், மாத்யான்னிகம் கிடையாது. அகர சந்தியா காலத்தில் சாப்பிடறது. இதெல்லாம்தான் குழந்தையை அறுபது நாழியும் படுத்தி எடுக்கறது. ஸ்வாமிகள் வந்தா விக்ஞாபனம் பண்ணிக்கணும்' — என்று அகமுடையானைப் பற்றி அந்த ஆசாரக்காரி குறைப்பட்டுக் கொண்டாள்.

''என்ன, மல்லிகான்னு பேர் சொன்னீங்க! புருஷப் பிள்ளையான்னு இருக்கான்'' என்ற கேள்வியை டாக்டர் ராவ் இதுவரை அவர்கள் குழந்தையைக் காட்டிய ஒவ்வொரு தடவையும் கேட்பதுண்டு. இம்முறையும் தப்பாமல் கேட்டார்.

''மல்லிகார்ஜுனன்னு முழுப் பேரு'' என்று வழக்கம் போலவே மீனு சொல்ல, அந்தப் பேர் வைத்த காரணத்தை அவள் விளக்கத் தொடங்கி விடப் போகிறாளே என்று வாசு வேண்டாவெறுப்பாக அவளை வழக்கம் போலவே பார்க்க, அவளும் அதைப் புரிந்து கொண்டு பேசாமல்தான் இருந்தாள். ஆனால் இன்று டாக்டர் ராவ் விடவில்லை.

''உங்களவங்க இந்தப் பேரு ரொம்ப வெக்கிறதில்லையே! எங்க ஆந்திராப் பேருன்னு இது?'' என்றார் அவர்.

ஸ்வாமிகளைப் பற்றிப் பேசுவதற்குப் பிடிவாதமாக ஒரு வாய்ப்புக் கிடைத்தது பற்றி மீனு சந்தோஷப்பட்டாள். '' இவன் பிறந்தப்ப பரம மங்கள ஸ்வாமிகள் ஸ்ரீ சைலத்திலே இருந்தார். அங்கே ஸ்வாமி பேர் மல்லிகார்ஜுன மகாலிங்கமாமே! ஸ்வாமிகளேதான் இந்த ஊருக்கு வந்தவா யாரிடமோ ஞாபகமாக, 'மீனுவுக்குப் பிறக்கிறது பிள்ளையானு மல்லிகார்ஜுனன்னும், பெண்ணானு பிரமராம்பான்னும் பேர் வைக்கட்டும்'னு சொல்லி அனுப்பினார்'' என்று கட்டுக்கடங்காத பெருமையுடன் கூறினாள் மீனு. 'பிள்ளையா, பெண்ணா என்பது அவருக்கா தெரியாது? லீலை, லீலை, அத்தனையும் லீலை' என்றும் எண்ணிக் கொண்டாள்.

குழந்தையைப் பரிசோதித்துக் கொண்டே டாக்டர், ''ரொம்பப் பெரியவர்தான் பையனுக்குப் பேர் வெச்சிருக்கார். ஆனாலும் டாக்டர்கிட்டே ஓயாமல் வந்தபடி இருக்கானே! ஸீம்ஸ் டு ஹேவ் டேகன் எ ஃபான்ஸி ஃபார் மீ'' என்றார்.

'டைனி டாட்'டுக்குக் கபம் ரொம்ப அதிகமாக இருந்ததாம். ஒரு 'ப்ரிக்' தேவை என்று சிரித்தபடியே இன்செக்ஷன் குழாயை எடுத்தார் டாக்டர்.

மீனுவைக் குழந்தையுடன் வீட்டுக்கு நேராக அனுப்பி விட்டு, மருந்துக் கடைக்குச் சென்று வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு வாசு வீடு திரும்பினான். அப்போது அவள் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். பரம மங்கள ஸ்வாமிகள் இயற்றிய அந்தத் தாலாட்டை அவள் எப்போதுமே நெகிழ்ச்சியுடன் பாடுவாள் எனினும், இன்று குழந்தையின் உடல்நலம் சரியில்லாததாலும், ஸ்வாமிகள் சமீபத்தில் அங்கு வரப்போகிறார் என்பதாலும் நெகிழ்ச்சி பரிபூரணமாயிருந்தது.

ஆராரோ ஆரிவரோ
ஆறுமுகா ஆராரோ

நீங்கரும்பு தாங்கும் ஐங்கரத்து ஆரமுகன்
ஆனைமுகத்தொடு உந்தன் ஆசை முகம்ஒற்ற—
அவன்
மதநீரைமொய்க்கின்றமதுகரங்கள் மதுரமாய்
ஐங்காரம் செய்திடும் சங்கீத கனத்தினிலே

சொக்கித் துயின்றாயோ
சொக்கன் தரு செல்வா (ஆராரோ)

மேகநிறப் பெருமான் ஆகமுறத் தழுவி
குழலூதும் விரலால் உன் குழலை அளைய—
அவன்
அலங்கல் துழாய் தரும் ஆழ்ந்த சுகந்த கமை
செண்பக நாசிகையில் தண்சுகமாய்த்
தங்கிடவே

கண்கள் குவிந்தாயோ
கண்ணிமையார் காவலனே (ஆராரோ)

அடிசாரும் அன்பர்க்கு அமுது தரும் அன்னையவள்
மடி சார்ந்த மைந்த, உன்தொடி தோளினை
தடவ,
தஞ்சம் எனுதவர்க்கும் அஞ்சல் அருளுமவள்
கஞ்ச மலர்க் கரத்தின் பஞ்சினிய பரிசத்தில்

கெஞ்சினவோ கருவிழிகள்
துஞ்சினவோ இருவிழிகள் (ஆராரோ)

ஆலநிழலில் இணைந்த சீலப்'பரமமுனி
பாத நளினத்திலுந்தன் சீதநயனம் பொருந்த,
ஞானகுரு சிரம்தங்கு மோன மதியம்
நெகிழ்ந்து
கான நதியாய் இழிந்துன் தேனிசைச் செவி
யினை—சின்

முத்திரையில் அணைத்ததுவோ
நித்திரையில் நனைத்ததுவோ (ஆராரோ)

பாட்டு நின்றது. அந்தப் பாட்டின் பொருள் நிறைந்த மௌனம் சூழ்ந்தது. அப்போது பாத்ரூமில் கைகால் கழுவிக் கொண்டிருந்த வாசுவுக்குத் தான் செய்கிற அந்தச் சிறிதளவு சத்தமும் பெரிய பிழையாகத் தோன்றிக் கொண்டிருந்தது.

நெற்றி நிறையத் திவலையுடன் தொட்டிலறையிலிருந்து வெளி வந்த மீனு, ''நன்னாத் தூங்கிடுத்து. ஆனால் தூக்கத்திலேயே அனத்தறது. ஒடம்பா செங்கல் சூளையா கொதிக்கிறது'' என்றாள்.

வாசுவின் வாட்டம் மிகுந்தது. பிரிஸ்கிருப்ஷனையும் மருந்துகளையும் அவள் கையில் போட்டான்.

''வேளை தப்பாமல் மருந்து கொடு. அப்புறம் ஆண்டவன் இருக்கான்'' என்றான்.

அவன் அப்படிச் சொன்னது அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது: 'ஸ்வாமிகள் கருணை' என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் சோதனை தொடர்ந்தது.

இன்றைக்குப் பரம மங்கள ஸ்வாமிகள் அவள் வீட்டுக்குப் பக்கத்திலேயே சத்தியப் பிரகாஷுக்கு வருகிறார். ஆனாலும் அவள் அவரைப் போய்ப் பார்க்க முடியாதபடி குழந்தை தாப ஜுரத்தில் தவிக்கிறது.

'ஸ்வாமிகள் எனக்காகவே வருகிறார்' என்று நான் அகம்பாவமாக நினைத்ததற்காகவா, அவரைத் தரிசிக்கக் கூட முடியாமல் இப்படித் தண்டனை விதித்து விட்டார்?. சீ, கருணையே உருவான ஸ்வாமிகளாவது தண்டிக்கவாவது, அதுவும் குழந்தையை? இத்தனையும் லீலை, வெறும் லீலை.'

லீலையென்றால் என்னவென்று மீனுவுக்குத் தெரியாது. ஆனாலும் ஸ்வாமிகளின் லீலை அது என்று புரிந்துகொண்டாள். அந்தக் கணத்துக்கு நிம்மதி பிறந்தது.

அன்றிரவு சத்தியப் பிரகாஷின் பரபரப்பு அவள் வீடு வரை பரவி விட்டது. ஸ்வாமிகள் நெருங்கி விட்டார் என்று தெரிகிறது. இதோ மேளமும் நாயனமும் ஒலிக்கின்றன. உறங்கும் குழந்தையின் புருவங்கள் அந்தச் சத்தத்தில் நெளிவதைக்கண்ட மீனு எழுந்து சென்று ஜன்னல் கதவுகளைச் சாத்தினாள். ஸ்வாமிகளிடமிருந்து தன்னை இப்படிப் பிடிவாதமாக அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதை அவளால் சகிக்கவே முடியவில்லை.

இதோ அவர் வந்தேவிட்டிருக்க வேண்டும்!

மூடிய கதவுகளையும் கடந்து வேத நாதம் மீனுவின் செவியில் தெளிவாகப் புகுந்தது.

வேதாந்த விஞ்ஞான ஸுநிச்சிதார்த்தா:
ஸந்ந்யாஸயோகாத் யதய: சுத்த ஸத்வா:
தே ப்ரஹ்ம லோகே து பராந்தகாலே
பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே


அந்த மறை மந்திரத்தின் மூர்த்தியை, வாயினால் மட்டும் வேதாந்தம் பேசாமல் அநுபவத்தினால் வேதாந்தத்தில் வாழும் சந்நியாசியை, யோகியை, 'அவளுடைய' ஸ்வாமிகளை இங்கிருந்தே தரிசனம் செய்தாள். அவர் பராமிருதத்தில் திளைத்து அவள் மீதும் அதன் துளிகளைத் தெளிப்பதையும் உணர்ந்தாள். வேத கோஷம் உச்சத்தை அடைந்தது:

யோ வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ
வேதாந்தே ச ப்ரதிஷ்டித:
தஸ்ய ப்ரக்ருதி லீனஸ்ய
ய: பர: ஸ மஹேச்வர:

தன் இரு கரங்களையும் சிரங்களுக்கு மேல் குவித்துக் கொண்டாள் மீனு. தலைக்குமேல் கைவளைத்த தன் உடலே கண்ணீர் வெள்ளம் நிரம்பிய பூரண கும்பமாக, அதன் உச்சியை ஸ்வாமிகள் தமது அபய—வரத ஹஸ்தங்களால் தீண்டுவதாக உணர்ந்தாள். அப்படியே நமஸ்கரித்தாள்.

தேனினைச் சொரிந்த ஸ்வாமிகளை நினைத்தபடியே மருந்தைத் தேனில் குழைத்துக் கொண்டு வந்து குழந்தையின் நாக்கில் தடவியபோது, அதன் நாக்கு வெப்பம் வீசாதது கண்டு நிம்மதி உற்றாள். குழந்தையின் உடலைத் தொட்டுப் பார்த்தாள். நன்றாக வேர்த்து விட்டிருந்தது.

முட்டாள்களும் முட்களும்



ரோஜாச் செடியில் முட்கள் இருக்கின்றனவே என்று வருந்துபவன் அறிவீனன்—முட்டாள். முள் செடியில் ஆண்டவன் ரோஜாவை மலரச் செய்திருக்கிறானே என்று மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துபவனே புத்திசாலி. — இக்பால்

எடுத்து எழுதியவர்: க. ரா.

'கருணை, கருணை!' என்று சொல்லிக் கொண்டாள். பளிச்சென்று நல்லது நடக்கும் போது 'கருணை' என்பாள். ஏன் இப்படி என்று புரியாத சமயங்களில் 'லீலை' என்பாள்.

வாசலில் ஈஸி சேரில் நிம்மதியற்றுப் படுத்திருந்த கணவனிடம் ஆர்வத்துடன் சென்றாள். ''குழந்தைக்கு ஜுரம் நன்னா விட்டிருக்குன்னா! கொஞ்சம் பார்த்துக்கோங்கோ. நான் ஓடிப்போய் ஸ்வாமிகளை எட்ட நின்னாவது தரிசனம் பண்ணிட்டு வந்துடறேன்'' என்றாள் படபடப்புடன்.

சூக்ஷ்மத்தில் எவ்வளவு அடர்த்தியாக அநுபவிக்க முடிந்தாலும் ஸ்தூலம் அவளுக்கு வேண்டித்தானிருந்தது.

குழந்தைக்கு ஜுரம் இறங்கியிருக்கிறது என்ற சந்தோஷத்தில் வாசு அவளுக்கு உடனே அநுமதி அளித்தான். அதுமட்டுமல்ல. ''நீ சட்டென்று திரும்பி வா; நானும் போய் ஒரு நமஸ்காரம் பண்ணிவிட்டு வந்துவிடுகிறேன்'' என்றான்.

அப்போது போல் மீனு எப்போதுமே ஆனந்தமடைந்ததில்லை. 'கருணை கருணை!'

ஒரு வாரத்துக்கு முன் ஸ்வாமிகள் வரப் போவதாகக் கணவன் சொன்னபோதே அவர் தெருக் கோடிக்கு வந்துவிட்டாற்போல் பறந்த மீனு இப்போது மனோ வேகத்தில் 'மடிசார்' உடுத்திக் கொண்டு வந்தாள்.

''வேஷம் போட்டுண்டாச்சா?'' என்றான் வாசு.

''இது ஒண்ணும் வேஷமில்லே. ஆறு கெஜம்தான் வேஷம்'' என்றாள் மீனு.

இந்தக் காலத்து யுவர்களுக்கு — ஏன் யுவதிகளுக்குமே — புரியாத விஷயம்; கௌரவமான விஷயம்.

மின்னலாக 'சத்யப் பிரகாஷை'ச் சென்றடைந்தாள் மீனு. அங்கு கூடியிருந்த கூட்டத்தில் கரைந்தாள். அவளுடைய பிரயாசை இல்லாமல், கூட்டத்தின் நெரிசலிலேயே....

ஆஹா, ஸ்வாமிகளுக்கு அருகிலேயே வந்து விட்டாள் மீனு!

அம்...மா! அதென்ன ஸ்வாமிகள்! சந்தனக் குழம்பாக, சந்திரச் சாறாக இப்படியும் ஒரு ஸ்வாமிகளா? அவருடைய கண்களில் சுரக்கும் அருளைப் பற்றி எவ்வளவோ பேர் எழுதியிருக்கிறார்கள். கண்கள் மட்டுமென்ன? அவருடைய மேனியின் ஒவ்வோர் அணுவும்தான் அருள் சுரக்கிறது. அவர் கால் பட்ட பாதுகையும், உடம்பைச் சுற்றியும் சுற்றாமல் நழுவும் காஷாயமும், தோளில் சார்த்திய தண்டமும், உடலில் சரிந்த ஸ்படிக ருத்திராக்ஷங்களும், தலை நிறையக் குவிந்த மலர் மாலைகளும்கூட அவரோடு அவராகி அருள் சுரக்கின்றன. அதோடு மட்டுமில்லை. சத்யப் பிரகாஷின் ஜாஜ்வல்யம் இருந்தபோதும் அதை மீறி ஏதோ ஒரு வயல்காடும், குளத்தங்கரையும், ஆல மரமும், ஏகாந்தமும்கூட ஸ்வாமிகளின் அங்கங்களோடு அங்கமாகித் துலங்கின.

''கடலூர் வக்கீல் யக்ஞேசுவர சர்மா பெண் மீனா'' என்று ஸ்வாமிகளிடம் மீனாவைப்பற்றிக் கூறினான் அவர் பக்கத்திலிருந்த பிரம்மசாரி சீடன்.

அவசரத்தில் கையுறை ஏதும் வாங்கி வராத மீனா தானே புஷ்ப சரமாக வணங்கினாள்.

ஸ்வாமிகள் தமது நிறைந்த பெரிய விழிகளால் நிச்சலனமாக அவளைப் பார்த்தார். 'அநுக்கிரகிக்கிறேன்; நீ போய் வரலாம்' இரண்டும் பொருள் படும்படித் தமக்கே உரிய சந்தனக் குழம்பின் குழைவுடன் திருமுகத்தை ஆட்டினார்.

அவளுக்கோ இப்போது ஸ்தூலம் ரொம்பத் தேவைப்பட்டது. 'அவர் பேச வேண்டும்; குழந்தைக்குப் பிரசாதம் வர வேண்டும்' என்ற ஆசை மிகுந்தது.

''கொழந்தைக்கு ரொம்ப ஒடம்பு சேவலை'' என்று அவள் சொல்லும்போதே தாய்மை கண்களில் முட்டிக் கசிந்தது.

''மல்லிகார்ஜுனனுக்கா?'' என்று ஸ்வாமிகள் அந்தப் பெயரைத் தமக்கே உரிய தட்டுத் தடுமாற்றத்துடனும், கீழேயிருந்து த்வனியை மேலே தூக்கிக் குழந்தைப் பிராசத்துடனும் கேட்டார். அவள் மீது மல்லிகை அரும்புகளை வாரி இறைத்தாற்போல் மணந்தது. அவரது பேச்சில் எத்தனை திக்கலும், தடுமாற்றமும் இருந்தாலும் அதன் ஸ்பஷ்டத்தை ஸ்படிகத்தில் கூடக் காண முடியாது என்று பைத்திய பக்தர்கள் சத்தியம் செய்வார்கள்.

''ஆமாம். 'லங்ஸ்' ரொம்ப 'வீக்'கா இருக்காம். 'இன்ஃபெக்ஷன்'கூட இருக்கும்னு தோணறாப்பலே இருக்கு. ஸ்வாமிகள்தான் பிரசாதம் அநுக்கிரகிச்சு ரக்ஷிக்கணும்'' அவள் தொண்டை அடைத்தது.

ஸ்வாமிகளுக்கு எதிரிலிருந்த முக்காலியில் பிரம்மசாரி சீடன், குங்குமம், விபூதி, அட்சதை கொண்ட மரத் தட்டொன்றை வைத்தான். பன்னீர் இலையில் பனித் துளி விழுவதுபோலத் தமது தெள்ளிய விரல்களைத் தட்டில் வைத்து எடுத்தார் ஸ்வாமிகள்.

பிரசாதத்தை அதி விநயமாக எடுத்துக் கொண்ட மீனா, ''நவராத்திரிக்குள்ளே கொழந்தை எழுந்திருக்கணும்; நவராத்திரி பூஜைக்கு ஸ்வாமிகள் கைங்கரியத்தில் என்னை நன்னா ஈடுபடுத்திக்கணும்'' என்றாள்.

நுட்ப நகை ஸ்வாமிகளின் இதழில் பரவியது. தட்டுத் தடுமாறிப் பச்சைக் குழந்தைப் பிராசத்தில் பேசினார்: ''போன தடவை நான் இங்கே வந்திருக்கச்சே நவராத்திரி பூஜைக்கு நீதான் ரொம்ப செஞ்சே. சுமங்கலிகள் எட்டலாம் வருஷம் பண்ணி இரண்டு நாள் பிக்ஷைக்கு ஏற்பாடு பண்ணினே. அப்போதானே சங்கிலி, ஒரு ஜோடி வளை எல்லாத்தையும் கழட்டி என் காலிலே போட்டே?'' என்று வினவியவர், ஒரு கோடி மொட்டுக்கள் ஒரே சமயத்தில் மலர்ந்தாற்போல் நன்றாகவே சிரித்துக் கொண்டு பக்கத்திலிருந்த பிரம்மசாரி சீடனைப் பார்த்தார். ''ஏண்டா, வளையலைக் கையிலேயும் சங்கிலியைக் கழுத்திலேயும்தானே போட்டுப்பா, இவ ஏன் அதெல்லாத்தையும் என் காலிலே போட்டா?'' என்று கேட்டார்.

மீனா நீர் நிரம்பிய இரு கண்களையும் அப்படியே மூடிக் கொண்டாள். இந்த நகையெல்லாம் தந்தது போதுமா? தாயாகிய அவருடைய திருப்பாத விரலைப் பிடித்து மெட்டி போட்டால் எவ்வளவு அழகாக இருக்கும்?

ஸ்வாமிகள் பேசிக்கொண்டே இருந்தார். ''பாகவதத்திலே கோபிகா ஸ்திரீகள் கிருஷ்ண பரமாத்மாவோட வேணுகானத்தைக் கேட்டதும் நகையையெல்லாம் தாறுமாறாப் போட்டுண்டு ஓடினான்னு வரும். நீ படிச்சிருக்கியோ?'' என்று யாரையோ வினவினார்.

வினவப்பட்டவர் தழுதழுத்த குரலில் ''ஆனால் கிருஷ்ண பரமாத்மாவும் அப்படி ஆபரணத்தைத் தாறுமாறாப் போட்டுப்பான்னு இப்பத்தான் தெரிஞ்சுது'' என்றார்.

ஸ்வாமிகள் அந்த உன்னதத்தை அப்படியே அலாக்காகத் தியாகம் செய்துவிட்டு மீனாவைப் பார்த்தார். ''இந்தத் தடவைக்கும் சேத்துப் போன நவராத்திரியிலேயே கைங்கரியம் பண்ணிவிட்டே! இந்த நவராத்திரி பூரா கண் முழுச்சு மல்லிகார்ஜுனனைப் பாத்துக்கோ'' என்று மதுரமாகவே, ஆனால் கண்டிப்பாகக் கூறினார். தொடர்ந்து ''நீ இங்கே ரொம்ப வரக்கூடவேண்டாம்'' என்றார் அவர். அவ்வளவுதான் கூறினாலும், அதனுள்ளேயே 'ஏனென்றால், நானே உன்னிடம் இருப்பேன்' என்றும் அவர் சொல்வதாகப் பைத்திய பக்தை உட்பொருள் கொண்டாள்.

வீட்டுக்குச் சென்றவள், வாசல் கதவைத் திறந்து வைத்துவிட்டே குழந்தைக்குப் பக்கத்தில் உறங்கும் கணவனையும் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையையும் கண்டு காரணம் தெரியாமல் கசிவு கொண்டாள். ஸ்வாமிகளைப் பார்ப்பதற்காகக் கூடக் கணவனை எழுப்ப அவள் விரும்பவில்லை.

குழந்தையின் நெற்றியில் பிரசாதத்தை இட்டு, அதன் தலையில் அட்சதையைத் தூவிவிட்டுத் தானும் படுத்து உறங்கினாள்—நன்றாக ஆழ்ந்து உறங்கினாள்.

ஸ்வாமிகள் நவராத்திரிபூஜையை 'சத்யப் பிரகாஷ்'ல் வைத்துக் கொள்ளாமல் எங்கோ



உங்கள் கனவை நனவாக்க பின்னியின் தூய பட்டுப் புடவை

மென்மை சுகமும்,
அழகும் மிக்க புடவை உடுத்தி
கனவுலக இன்பம் காண விரும்பும்
எழில் மங்கையருக்கு பின்னியின்
தூய பட்டுப் புடவை
அவ்வனுபவத்தை அளிக்கிறது.
என்ன கவர்ச்சி!...என்ன பள
பளப்பு!...பின்னியின் தூய பட்டுப்
புடவை, நினைவாக்கும் கனவிதுவே.
பின்னியின் தூய பட்டுப் புடவை,
தூய ஜார்ஜெட், மென் பட்டு,
ஷாட் ஸில்க்.

bm-4268

இருபது மைல் தள்ளி ஒரு குக்கிராமத்துக்குப் போகிறார் என்றறிந்தபோது நகரத்து பக்தர் யாவரும் ஏமாற்றமும், வருத்தமும் அடைந்த போதிலும் மீனு மட்டிலும் பரம திருப்தி யடைந்தாள். குழந்தைக்கும் குருவுக்குமிடையே அவன் யாருடைய கடமையிலும் பிசகக் கூடாது என்றே ஸ்வாமிகள் ஊரை விட்டுப் போய் விட்டார் என்பது அவளுடைய நம்பிக்கை.

எப்படியும் அந்தக் கிராமத்துக்கு ஒரு நாளேனும் செல்ல முடியுமா என்ற ஆசையும் அவளுக்கு உள்ளூற இருக்கத்தான் செய்தது. குழந்தைக்குப் படிப்படியாக உடம்பு குணமாகி வருவதிலிருந்து ஸ்வாமிகளிடம் சற்றே மனம் திரும்பியிருந்த வாசு தீபாவளிக்கு முதல் நாள் காலை ஒரு கார் ஏற்பாடு செய்தான். ஸ்வாமிகளின் முகாமுக்குச் சென்றார்கள்.

எளிமையழகு மிகுந்த கிராமத்தில், மரம் செடி, கொடி சூழ்ந்த தோப்பில் ஸ்வாமிகளின் பூஜா மண்டபத்தை வைத்துப் பந்தல் போட்டிருந்தது. கூடியிருந்த பக்தர்கள் நூறு பேருக்கு மேல் இராது.

ஆசிரமத்துச் சிப்பந்திகள்தான் அங்குமிங்கும் போனபடியிருந்தனர். அவர்கள் சில பேரிடம் காட்டிய அக்கறையும், வேறு சிலரிடம் காட்டிய அலட்சியமும் வாசுவுக்கு எரிச்சலூட்டியது. அவனையும் மீறி அவனது மனத்தின் அடித்தளத்தில் ஸ்வாமிகளின் ஆன்ம சக்தி பற்றி வினா எழும்பத்தான் செய்தது.

பக்தர்களில் பலர் மீனுவை விசாரித்தார்கள். 'குழந்தைக்கு உடம்பு வந்ததால் இவளால் நவராத்திரி கைங்கரியத்தில் ஈடுபட முடியவில்லையே' என்று சிலர் அநுதாபப் பட்டார்கள். வேறு சிலர் அதற்காகவே சந்தோஷப்பட்டார்கள். "ஏதோ தீட்டுக்காரியை ஒதுக்கி வைக்கிற மாதிரி 'நீ நவராத்திரிக்கு ஒண்ணும் செய்யவேண்டாம்'னு ஸ்வாமிகளே நிர்த்தாட்சிண்யமாச் சொல்லிட்டாளாம்" என்று சொல்லிக் கூடச் சிலர் அகமகிழ்ந்தார்கள். ஸ்வாமிகளின் அந்தரங்க சிஷ்யர்களிடையே இத்தனை துவேஷங்கள் இருக்கும்போது....?' வாசுவின் உள்ளத்தில் கேள்வி மீண்டும் தோன்றிவிட்டது.

வாசுவுக்குப் பின்னாலிருந்த ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரி — ஸ்வாமிகளின் அத்யந்த பக்தர்— பக்கத்திலிருந்தவரிடம் பேசிக் கொண்டிருந்தார்: "ஸ்வாமிகளைப் பத்தியும் அவாளோட ஆத்ம சக்தி, அநுக்கிரக சக்தி பத்தியும் எல்லாரும் பேசிக்கிறா. ஆனா அதனுடைய முழு அர்த்தத்தையும் யார் கண்டோம்? பகவானுக்கு அநுக்கிரக சக்தியும் ஆத்ம சக்தியும் நிச்சயமா இருக்கு. இருந்தாலும் உலகத்திலே எத்தனையோ அபஸ்மாரங்களும் உத்பாதங்களும் கஷ்டமும் அபமிருத்யுவும் இருந்துண்டுதானே இருக்கு?"

அவர் அப்படிச் சொன்னது வாசுவுக்கு அச்சானியமாகப் பட்டது. அவர் பேசிக் கொண்டே போனார்.

"ஸ்வாமிகளை நாம் என்னன்னு கண்டோம்? அவாளை எடைபோட நம் புத்திக்கு ஏது சக்தி? அவா ஒரு தனிப் பிரபஞ்சம். ஸ்வாமிகளோட ஆசிரமம் இதோ இந்தக் காம்பவுண்டோட முடிஞ்சுடலே. லோகம் முழுக்க அவா ஆசிரமம்தான். அவா அனவரதமும் இருந்திண்டிருக்கிற இந்த ஆசிரமமே அவா பார்வையிலே கூடப் படாமே ஓடிப் போயிடறதும் உண்டு. அவாளை என்னங்கறது? அவாளை என்னங்கறது?" என்று திரும்பத் திரும்பக் கூறிய அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அவர் பேசிக் கொண்டேயிருக்கையில் அந்தப் 'பிரபஞ்சம்' மிக எளிமையாக உள்ளேயிருந்து வந்தது. 'பரம மங்கள ஸ்வாமிகள்' என்று பெயர் வைத்துக் கொண்டே அவர் பிறந்தாரோ என்று எண்ணும்படி மங்களம் அங்கு கமகமத்தது. இன்னமும் அவர் ஸ்நானம் செய்யவில்லை. இருந்தாலும் அவரிடம் அப்போது திகழ்ந்த தூய்மையைப் பூரணமாக இலையுதிர்ந்த மரங்களின்மீது நல்ல வெயில் படும்போதுதான் வாசு கண்டிருக்கிறான். தாமரை இலையின் மீதும், சில காய்கனிகளின்மீதும் இயற்கையாகவே உள்ள விபூதிப் பூச்சுப் போல் அவருடைய உடம்பிலும் ஒரு பரிசுத்தப் பூச்சு இருந்தது.

எல்லோரும் விழுந்து வணங்கினார்கள். சிலரை அவர் விசாரித்தார். சிலரைப் பார்த்ததாகக்கூடக் காட்டிக் கொள்ளாமலிருந்தார். பரம பக்தை மீனு இந்த இரண்டாவது கோஷ்டியில் இருக்க, அவரைச் சந்தேகித்து வந்த வாசுவோ முதல் கோஷ்டியில் இருந்தான்!

மீனு குழந்தையை அவரது காலடியில் போட்டாள். "பிறந்த நாளாப் படுத்தி எடுக்கிறது. ஸ்வாமிகள்தான் பேர் வெச்சு அநுக்கிரஹிச்சா; அவாதான் காப்பாத்தணும்" என்று அடக்கமாகக் கேட்டுக் கொண்டாள்.

"ஸ்வாமிகள் ஏன் மல்லிகார்ஜுனன்னு பேர் வெச்சாளாம்? வெறும் மல்லிகைன்னா வாடிவிடுமே! வாடா மல்லிகார்ஜுனன்னு வெச்சிருக்கப்படாதோ?" என்று ஸ்வாமிகள் குழந்தையாகக் கூறினார்.

மீனு 'ஹோ' வென்று கதறிவிட்டாள். "ஸ்வாமிகள் இந்த மல்லிகையை வாட விடப்படாது" என்று ஆவேசம் வந்தவள் போல் கூவினாள்.

ஆஹா! இதென்ன! ஸ்வாமிகளுடைய தலையைச் சுற்றியிருந்த சின்னஞ் சிறு ஸ்படிகங்களாலான மாலை அறுந்து அந்த மணிகள் அவர் முகத்தில் வழிகின்றனவா? இல்லை,

அகத்துக் காரி!



■ ''என் மனைவி ஜெர்மனியில் இருந்திருந்தால் அங்கு 'பெர்லின் சுவர்' என்ற ஒன்று இருக்கவே முடியாது. அவ்வளவு மோசமாகக் கார் ஓட்டுகிறான் அவள்.''

'ஸ்க்ரீனி'ல் ஒரு ஹாலிவுட் நடிகர்
தகவல்: 'நாயக்'

இல்லவே இல்லை. நிறைந்த அவரது பெரிய கண்களிலிருந்துதான் கண்ணீர் முத்துக்கள் வழிகின்றன! பிரபஞ்சம் கண்ணீர் விடுகிறது!

மழை விட்ட பின்னுள்ள செடி போல் பச்சென்ற தெளிவுடன் 'பிரபஞ்சம்' பேசிற்று; உறுதிப்பாட்டுடன் பேசிற்று:

''மீனலோசனி!'' என்று வழக்கம் போல முழுப் பெயரையும் பிராசத்துடன் நீட்டி அழைத்தார். ''உன்னைப் புத்திர சோகம் தீண்டாது. நான் வாக்குத் தத்தம் தரு கிறேன். போய்ட்டுவாம்மா!''

கூடியிருந்தவர்கள் விதிர் விதிர்த்துவிட்டனர். இவ்வளவு நேரடியாக அவர் இது வரை வரம் தந்து யாரும் கேட்டதில்லை. ஐ. ஏ. எஸ். அதிகாரி தேம்பியேவிட்டார். மீனுவோ தன் மீது தாரை தாரையாக, தங்கு தடையின்றி, இண்டு இடுக்கின்றி அமிருதம் கொட்டிக் கொண்டே இருப்பது போல் மயிர்க் கூச்செறிந்து நின்றாள். வாசு ஒன்றும் புரியாத ஒரு நிலையில் பிரமித்து நின்றான். தலைமீது வைத்திருந்த ஒரு மல்லிகைப் பூ ஹாரத்தை எடுத்து அவனிடம் வீசினார் ஸ்வாமிகள்.

நிம்மதியாக வீடு திரும்பிய மீனு அன்று மாலையில் ஸ்வாமிகள் படத்துக்கு அவரே தந்த மல்லிகைப் பூமாலையைச் சாத்தினாள். என்ன தோன்றிற்றோ வழக்கமில்லாத வழக்கமாக கர்ப்பூர ஹாரத்தி எடுத்தான். ஆரத்தித் தட்டைக் குழந்தையிடம் கொண்டுவந்து, ஒளியைக் கையால் சுற்றி அதன் கண்களில் ஒற்றினாள். குழந்தை கண்ணைக் கொட்டை கொட்டையாக விழித்துக் கர்ப்பூர தீபத்தையே பார்த்தது. அந்தப் பெரிய சுடரில்லை நீண்ட நாழிகை எரிந்தபோதும் இமை கொட்டாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தது. வாசுவுக்கு உடம்பு நடுங்கிற்று.

அவன் எண்ணியது தவறில்லை...

கர்ப்பூர ஜோதி மெல்ல மெல்ல அணைந்த போது ஜீவ ஜோதியும் அணைந்துவிட்டது.

ஊரெல்லாம் ஜோதி பரவிப் பட்டாசு ஒலி நிறையும் அந்தத் தீபாவளி முன்னிரவில் மனத்தில் ஒரே இருளும், மௌனமான அழுகைப் புலம்பலுமாக வெளி மாடியிலேயே ஒவ்வொரு யாமமாகக் கழித்தான் வாசு. பண்டிகையை முன்னிட்டு, உள்ளூரிலிருந்த பந்து மித்திரர்களிடம் அவன் துயர சமாசாரத்தைத் தெரிவிக்கவில்லை. ஊருக்கு மட்டும் தந்தி கொடுத்திருந்தான். கிராமத்திலிருந்த அவனுடைய விதவைத் தாயும், கடலூரிலிருந்த மீனுவின் பெற்றோர்களும் காலை ரயிலில்தான் வருவார்கள்.

மீனு! அவள் அந்தக் கடைசி நிமிஷத்தில் ஸ்வாமிகள் படத்துக்கு முன் நமஸ்கரித்தது தான்! அப்படியேதுவண்டுவிட்டாள். அவளது மயக்கத்தைத் தெளிவிக்க வாசு விரும்பவில்லை. இது அவளைப் பொறுத்தமட்டில் இரட்டைப் பெரும் சோதனை. அவனுக்குக் குழந்தையிடம் எவ்வளவு பிரியம் இருப்பினும், அதற்கு நோவு நொடி வந்தால் அவள் எவ்வளவோ கலங்கி யிருப்பினும் அவனுடைய தாயன்புக்கு அதை ஈடு சொல்லி முடியுமா? அதோடு ஸ்வாமிகள் என்ற அவளுடைய பெரிய பற்றுக்கோலும் அல்லவா முறிந்து விழுந்து விட்டது? காலையில் அவர் அவ்வளவு வியக்தமாகத் தந்த வரம் மாலையே பொய்த்துவிட்டதே! அவளை மயக்கம் தெளிவித்து இந்த இரட்டை அதிர்ச்சிக்கு ஆளாக்குவானேன் என்றே வாசு கருதினான். ஆயினும் அப்போதைக்கப் போது அந்த அறையை எட்டிப் பார்த்து வந்தான்.

இப்போதும் அப்படியே அவன் எட்டிப் பார்த்தபோது,

அது என்ன ஆச்சரியமான காட்சி!

ஸ்வாமிகளின் படத்தின் கீழ்ப் பாகத்தில் இன்னென்று உப்பியிருந்த மல்லிகை மாலையின் குஞ்சத்தை மீனு தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான் — தூங்கும் மல்லிகார்ஜுனனைத் தட்டுவது போல.

அவள் முகத்தில்தான் என்ன சாந்தம்! அவளும் ஒரு பிரபஞ்சமோ? இல்லை, பிரபஞ்சமில்லை, ஆகாயத் துணுக்கு. விரிந்த ஆகாயம் அங்கே ஆசிரமத்திலிருந்தது. அவள் வாயைத் திறந்து பாடினாளோ இல்லையோ, அவளைப் பாட்டு சூழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தான் வாசு.

ஆலநிழலில் இணைந்த சிலப் பரமமுனி
பாத நளினத்திலுந்தன் சிதநயனம்பொருத்த,
ஞானகுரு சிரம் தங்கு மோன மதியம்
நெகிழ்ந்து
கான நதியாய் இழிந்துன் தேனிசைச்
செவியினை—சின்
முத்திரையில் அணைத்ததுவோ ?
நித்திரையில் நனைத்ததுவோ?

வாசுவுக்குப் புரிந்தே விட்டது! ஸ்வாமிகள் தந்த வரம் என்ன என்பது அவனுக்குப் புரிந்தது. அவள் கேட்ட வரம் எதுவாயினும் அவர் தந்த வரம் மெய்த்து விட்டது என்பது புரிந்தது.

குழந்தையை இழந்த ஒரு தாயின் முகத்தையே தீபாவளியாக ஒளி மணக்கச் செய்த 'பிரபஞ்ச'த்தையும், இங்கு வர வேண்டிய கண்ணீரை அந்தப் 'பிரபஞ்சமே' சொரிந்து ஈடுகட்டியதையும் எண்ணிய போது அவனது சூனிய உள்ளத்திலும் ஏதோ ஒன்று நிறைய ஆரம்பித்தது.

தீபாவளிப் பண்டிகை விடிவதையொட்டி 'சத்தியப் பிரகாஷி'லிருந்து இசைத் தட்டுக் கானம் திருவாசகத்தை ஒலித்தது :

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ




லா போந்தேன் குட்டிக் கதைகள்

தொகுப்பு :

கு. அழகிரிசாமி

□□□ லா போந்தேன் (1621—1695) என்ற பிரஞ்சுக் கவிஞர் செய்யுள் வடிவில் குட்டிக் கதைகள் எழுதினார். பன்னிரண்டு பாகங்கள் கொண்ட அந்தக் கதைகள் மூன்று புத்தகங்களாக வெளி வந்தன. முதல் புத்தகத்தைத் தமது நாற்பத்தேழாவது வயதில் வெளியிட்டார். பெரும்பாலும் ஈசாப் கதைகள், இந்தியக் கதைகள் முதலியவற்றையே தம் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அவர் தழுவி எழுதினார். அவர் காலத்தில் பிரஞ்சு சமூகத்தில் காணப்பட்ட குறைபாடுகள், பதவி ஆசைகள், அற்பத்தனங்கள், சட்டத்தின் பேரால் நடைபெற்ற கேலிக் கூத்துக்கள், நயவஞ்சகங்கள் ஏமாற்று வித்தைகள் ஆகியவற்றையெல்லாம் எள்ளி நகையாடியும், தாக்கியும் கதைகள் எழுதிய அவரை, தாம் வாழ்ந்த காலத்தையே படம் பிடித்துக் காட்டுகிறவர் என்று கூறுவார்கள். அவரைப் பின்பற்றிக் குட்டிக் கதைகள் எழுதியவர்கள் பலர்!



குரங்கின் தீர்ப்பு □□□

அப்போது நீதிபதியாக இருந்த ஒரு குரங்கினிடம் ஓர் ஓநாய் வந்து, "இந்த நரியைத் தண்டிக்க வேண்டும். இது திருட்டு நரி. இப்படி நான் மட்டுமல்ல, ஊரே சொல் கிறது. இதை வெளியே விட்டு வைத்தால் எந்தப் பொருளுமே பாதுகாப்பாக இராது" என்றது. அதோடு பல சட்டங்களையும் மேற் கோள் காட்டித் தன் கட்சியைவற்புறுத்தியது.

நரியும், தான் நிரபராதி என்று வாதம் புரிந்து, தனக்குச் சாதகமாகப் பல சட்டங் களை மேற்கோள் காட்டியது.

ஆவேசமாக வெகு நேரம் வரை வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. எல்லாவற் றையும் பொறுமையோடு கேட்ட குரங்கு பின்வருமாறு தீர்ப்புக் கூறியது :

"நீங்கள் இருவரும் எப்படிப்பட்டவர்கள் என்று எனக்குத் தெரியும். ஓநாயே! நீ ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டியதற்காக உனக்கு அபராதம் விதிக்கிறேன். நரியே! அந்தக் குற்றச்சாட்டின்படி நீ திருடனாக இருப்பதால் உனக்கும் அபராதம் விதிக் கிறேன்."

கிழட்டுச் சிங்கம் □□□

ஒரு காலத்தில் காட்டில் உள்ள அத்தனை மிருகங்களையும் நடுநடுங்க வைத்துக் கொண் டிருந்தது ஒரு சிங்கம். அதற்கு வயதாகித் தள்ளாமை வந்து விட்டது. நடக்கவும் சக்தி யில்லாமல் அது படுத்துக் கிடந்த போது, அதற்குப் பயந்து கொண்டிருந்த மிரு கங்களெல்லாம் வந்து அதைத் தாக்க ஆரம் பித்து விட்டன. ஒரு குதிரை வந்தது. சிங்கத்தை ஓர் உதை உதைத்துவிட்டுப் போனது. ஒரு மாடு வந்தது ; ஒரு முட்டு முட்டிவிட்டுப் போனது.

சிங்கத்துக்கு ஒரே ஆத்திரம். ஆனால் எதுவும் செய்வதற்குச் சக்தியில்லாமல் உள் ளுக்குள் குமுறிக் கொண்டு கிடந்தது. கடைசி யில் ஒரு கழுதை வந்தது. அதுவும் சிங்கத் தைக் காலால் உதைத்தது.

ஆத்திரமும் மனவேதனையும் தாங்காமல், "கழுதையே! நான் சாவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், இருந்திருந்து உன்னிடமும் உதை வாங்குகிறேனே, இது எனக்கு இரட்டைச் சாவாக இருக்கிறது" என்று சொன்னது சிங்கம்.



சுய ரூபம் □□□



ஓர் ஓநாய்க்குச் சில நாட்களாக ஆகாரத்திற்கு ஆடுகள் கிடைக்கவில்லை. அதனால் ஓர் ஆட்டுக் கிடைக்குப் போய்த் தந்திரமாக அத்தனை ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு வந்துவிடத் தீர்மானித்தது. அந்தக் கிடைக்குச் சொந்தக்காரனைப் போல் கால்சட்டை போட்டு, தொப்பி வைத்து வேஷம் போட்டுக் கொண்டது ஓநாய். ஆட்டுக்கிடைக்குள் சென்றது. அப்போது ஆடுகளுக்குச் சொந்தக்காரன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய நாயும் தூங்கிக் கொண்டிருந்தது. ஆடுகளும் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தன. தூங்குகின்ற ஆடுகளைத் தட்டி எழுப்பி ஓட்டுவதற்கு ஆட்டுக்காரன் எப்படிக் குரல் கொடுப்பானோ, அப்படிக் குரல் கொடுக்க முயன்றது ஓநாய். ஆனால் அது மனிதக் குரல் மாதிரி ஒலிக்காமல் பயங்கரக் குரலாகக் காடெல்லாம் எதிரொலிக்கவே ஆடுகள் உடனே விழித்துக் கொண்டன ; அவை மட்டும் விழிக்காமல் எதிர்பாராத விதமாக நாயும் விழித்துக் கொண்டது; ஆடுகளுக்குச் சொந்தக்காரனும் விழித்துக் கொண்டான். ஓநாய்க்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தப்பி ஓடவும் முடியவில்லை. ஏனென்றால் அது போட்டிருந்த கால் சட்டையே விலங்கு மாதிரி அதை ஓடவிடாமல் செய்து விட்டது.

எவ்வளவு சாமர்த்தியமாக ஏமாற்றினாலும் ஏதாவது ஒன்று காட்டிக் கொடுத்து விடும் என்பதை ஓநாய் உணர்ந்தது.

செருப்புத் தைப்பவனும் பணக்காரனும் □□□

செருப்புத் தைக்கும் ஒருவன் தினந்தோறும் அதிகாலையிலிருந்து இரவு வரை எவ்விதக் கவலையும் இல்லாமல் சந்தோஷமாகப் பாடிக் கொண்டேயிருப்பான். பக்கத்தில் ஒரு பெரிய மாளிகையில் ஒரு பணக்காரன் வசித்து வந்தான். அவனுக்கு இரவில் சரியாகத் தூக்கம் வராது. அதிகாலையில்தான் சிறிது கண்ணயர்வான். அந்தச் சமயம் பார்த்துச் செருப்புத் தைப்பவன் பாட ஆரம்பித்து விடுவான். பணக்காரனின் தூக்கம் கலைந்து விடும். இப்படியே பல நாட்கள் நடந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவன் செருப்புத் தைப்பவனைத் தன் மாளிகைக்கு வரவழைத்து, "உனது வருஷ வருமானம் எவ்வளவு?" என்று கேட்டான்.

"நான் வருஷக் கணக்கெல்லாம் பார்ப்பது கிடையாது. அன்றாட வருமானம்தான் எனக்கு. அதுவும் ஒரு நாள் கிடைக்கும் ; ஒரு நாள் கிடைக்காது" என்றான் செருப்புத் தைப்பவன்.

"உன்னை நான் ஒரு பணக்காரனாக்க விரும்புகிறேன். இதோ நூறு தங்க நாணயங்கள் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு போய்ப் பத்திரமாக வைத்துக் கொண்டு அவசியம் நேரும் போது செலவு பண்ணிக் கொள்" என்று சொல்லிப் பணக்காரன் தங்க நாணயங்களைக் கொடுத்தான்.

செருப்புத் தைப்பவன் கரை காணாத சந்தோஷத்துடன் தங்க நாணயங்களைக் கொண்டு வந்தான். வீட்டில் பத்திரமான ஓரிடத்தில் அவற்றைப் புதைத்து வைத்தான். அன்று முதல் அவன் பாடுவதை நிறுத்தி விட்டான். அவனுக்கு எப்போதும் தங்க நாணயங்களைப் பற்றியே ஞாபகம். அவற்றைக் காவல் செய்வதைத் தவிர வேறு வேலை எதுவும் செய்ய முடியவில்லை. எவனும் வந்து திருடிவிடக் கூடாதே என்று இரவிலும் அவன் கண் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பான். ஒரு சிறு சலசலப்புக் கேட்டாலும் ஓடிப் போய்



நாணயங்கள் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு வருவான்.

இப்படி மன நிம்மதியிழந்து கவலையிலும் பயத்திலுமே காலம் தள்ள அவனால் முடியவில்லை. ஒரு நாள் தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டு பணக்காரனுடைய மாளிகைக்குப் போனான். "ஐயா! நீங்கள் கொடுத்த இந்த நூறு தங்க நாணயங்களையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய பாட்டையும் என்னுடைய நித்திரையையும் எனக்குத் திருப்பிக் கொடுங்கள்" என்றான்.

சேவலும் பூனையும் □□□

ஒரு சிறு எலிக் குட்டி ஒரு நாள் தன் தாயிடம் பின்வருமாறு சொன்னது :

"இன்று நான் இரண்டு மிருகங்களைப் பார்த்தேன். ஒரு மிருகம் பயங்கரமாக இருந்தது ; மற்றொன்று மிகவும் சாது. பயங்கரமான மிருகத்துக்குத் தலையில் கொண்டை இருக்கிறது. கத்தி மாதிரி வாய் இருக்கிறது. அது சிறகை அடிக்கிறது. அப்போது கூவுகிறது. அதைக் கேட்டதும் நான் பயந்து ஓடி



வந்து விட்டேன். அந்தப் பயங்கர மிருகம் அங்கே இல்லாமல் இருந்திருந்தால் நான் சாது மிருகத்தினிடம் போயிருப்பேன்; சிநேகம் பண்ணியிருப்பேன். அதன் உடம்பு நம் உடம்பைப் போல் மிருதுவாக இருக்கிறது. உடம்பில் கோடுகள் இருக்கின்றன. அதற்கு நீளமான வால் இருக்கிறது. முகத்தைப் பார்த்தால் சாந்தமாக இருக்கிறது. அதன் பக்கத்தில் போய்க் கொண்டிருக்கும் போதுதான் அந்தப் பயங்கர மிருகம் கூவியது. நானும் பயந்து ஓடிவந்து விட்டேன்.''

குட்டி சொன்னதை நன்றாகக் கேட்டுக் கொண்ட எலி சொன்னது: ''நல்ல வேளையாக நீ ஓடி வந்தாய். குழந்தாய்! நீ சாது மிருகம் என்று சொன்னாயே, அது உண்மையில் சாதுவல்ல; மகா கபடமான பிராணி. அது நம் கூட்டத்துக்குப் பரம விரோதியான பூனையாகும். மற்றொரு மிருகத்தைப் பற்றிச் சொன்னாய். ஆனால் அது மிருகமல்ல; சேவல். அது நமக்கு ஒரு தீங்கும் செய்யாது. இனிமேல் நீ வெளித் தோற்றத்தை வைத்து யாரைப் பற்றியும் முடிவு கட்டிவிடாதே.''

போருக்குப் புறப்பட்ட சிங்கம் □□□

ஒரு சிங்கம் போருக்குப் புறப்பட்டது. அப்போது ஒவ்வொரு மிருகத்துக்கும் அது கட்டளையிட்டது:


''யானையே! நீ உன் முதுகில் யுத்த தளவாடங்களைச் சுமந்து வரவேண்டும்; எதிரிகளையும் நீ தாக்க வேண்டும்.''

''கரடியே! நீ எதிரிகளைச் சூறையாடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.''

''நரியே! நீ போர்த் தந்திரங்களையெல்லாம் கற்றுத் தர வேண்டும்.''

''குரங்கே! நீ எதிரிகளுக்கு விளையாட்டுக் காட்டி அவர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்ப வேண்டும்.''

சிங்கம் இப்படி உத்தரவு போட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு மிருகம் அதைப் பார்த்து, ''நமது படையில் கழுதைகளையும்



முயல்களையும் சேர்க்க வேண்டாம். கழுதைகளுக்கு மூளை கிடையாது; முயல்களோ மகா கோழைகள்'' என்று சொன்னது.

அதைக் கேட்ட சிங்கம், ''இல்லை, இல்லை. நான் எல்லாப் பிராணிகளையுமே பயன்படுத்துவேன். கழுதை எதிரிகள் நடுங்கும்படி எக்காள நாதம் செய்யட்டும். அதி வேகமாக ஓடக்கூடிய முயல், போர்க்களத்திலேயிருந்து நான் அனுப்பும் உத்தரவுகளைச் சுமந்து வரட்டும்'' என்று கூறியது.

புத்திசாலிக்கு எதுவும் பயனற்றதல்ல.

ஐயப்பனின் யோசனை

ஸ்ரீமான் அப்பைய தீட்சிதர் சின்ன பொம்மராஜாவுடன் தஞ்சைக் கோயிலுக்குச் சென்றார். அவ்வமயம் ஸ்ரீ தாதாசாரியாரும் நரசிம்ம பூபால மகாராஜாவும் அங்கு வந்திருந்தனர். அங்கு ஐயப்பன் எனப்படும் ஸ்ரீ சாஸ்தாவின் பிம்பம் ஆள்காட்டி விரலை மூக்கின் மேல் வைத்துக் கொண்டு விளங்கும்.

'ஒரு மகான் இங்கு வந்து இந்த பிம்பத்தின் ரகஸ்யத்தை வெளிப்படுத்துவார். அப்பொழுது இந்தப் பிம்பம் தன் ஆள்காட்டி விரலை எடுக்கும்' என்று மக்கள் மன்னனிடம் கூறினார்கள். இதைக் கேட்ட நரசிம்ம பூபதி, ஸ்ரீ தாதாசாரியாரிடம் அதன் ரகஸ்யத்தைச் சொல்லத் தூண்டினார். அவர் '' 'நான் மோகினியாக வந்த விஷ்ணுவுக்கு மகன். எனவே பிரம்மனுக்குச் சமம். அப்படியிருந்தும் என் தந்தை பரமசிவனாக இருப்பதால் பூதகணங்களுடன் இருக்க வேண்டியிருக்கிறதே. இதிலிருந்து எப்படி விடுபடுவது' என்று சாஸ்தா யோசனை செய்கிறார்'' என்றார். சாஸ்தா விரலை எடுக்கவில்லை.



சின்ன பொம்மு மகாராஜா, ஸ்ரீ அப்பைய தீட்சிதரைப் பார்க்க, அவர் சொன்னார்:

'' 'அப்பாவின் மனைவி அம்மா. எனக்குத் தந்தை பரமசிவன். அவர் மனைவி பார்வதி தேவி. எனவே பார்வதி என் தாய். ஆனால் நான் இலட்சுமி தேவியை எப்படி அழைப்பது? நானோ மோகினி உருவம் கொண்ட விஷ்ணுவின் மகன். ஆகவே எனக்கு அம்மா விஷ்ணு. விஷ்ணுவின் மனைவி லட்சுமி. அம்மாவின் மனைவியை எப்படி அழைப்பது?' என்றுதான் சாஸ்தா யோசிக்கிறார்.'' இவ்வாறு தீட்சிதர் கூறியவுடன் சாஸ்தா பிம்பம் மூக்கின் மேலிருந்த விரலை எடுத்து விட்டது.

இவர் அப்போது சொன்ன சுலோகம், 'அம்பேதி கௌரி' எனத் தொடங்கும். ஸ்ரீகாஞ்சி ஆசாரியர்கள் இந்நிகழ்ச்சியை அடிக்கடி சொல்லி மகிழ்வதுண்டு.

-அநுஷம்

இதய மாற்றம்!



பெர்லினிலுள்ள ஆராய்ச்சிக் கழகம் ஒன்றில் ஒரு கோழிக்குஞ்சின் இருதய உயிரணு, குளிர் பதன சாதனத்தில் வைத்து உறையும்படி செய்யப்பட்டது. சுமார் மூன்று மாதம் இப்படியே வைத்திருந்தபின் அதைச் சூடேற்றியதில் அந்த உயிரணுக்கள் மீண்டும் வேலை செய்தன. இருதயத்தையே மாற்றி வைத்து சஸ்திர சிகிச்சை செய்வதற்கான வழியை இக் கண்டுபிடிப்பு ஏற்படுத்தி யிருக்கிறது.

- யூ.பி.எஸ்.

"ஆட்சி முழுவதும் தூங்கிய அமெரிக்கப் பிரஸிடெண்ட்!"

1849ம் வருடம் மார்ச் நாலாம் தேதி அமெரிக்கப் பிரஸிடெண்டாக 'டெய்லர்' தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்றே 'போல்க்' என்பவரது பிரஸிடெண்ட் பதவி முடிவடைகிறது. இருந்த போதிலும் மார்ச் நாலாம் தேதி ஞாயிற்றுக் கிழமை ஆதலால் 'டெய்லர்' திங்களன்று தான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதாகக் கூறினார்.



இந்த இடைக்காலமாகிய ஞாயிற்றுக் கிழமை மட்டும் 'டேவிட் ரைஸ் அட்சிசன்' இடைக்கால பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் செனட் முடிந்து களைத்திருந்த செனட்டர் அட்சிசனுக்குச் சிறிது தாமதமாக அறிவிக்கப்பட்டது. அன்று களைப்புடன் தூங்கிய அட்சிசன் தன் பதவிக்காலம் முழுதும் தூங்கியே கழித்தேன் எனக் கூறிக் கொள்வாராம்.

அனுப்பியவர் : பம்பாய் வேணு

பல்சுவைப் பக்கம் 1



மாஸ்கோவில் மாபெரும் வாசகசாலை

மாஸ்கோ நகரின் மிகப் பெரிய வாசக சாலை (லைப்ரரி) ராசின் தெருவில் இருக்கிறது. அந்நிய நாட்டு இலக்கியங்களும் இங்கு இடம் பெற்றிருக்கின்றன. எப்போதுமே இங்கு ஜன நெரிசல்தான். போதுமான இடமில்லாததால் மக்கள் மாடிப் படிகளில் க்யூ வரிசையில் நின்று கொண்டிருப்பதைக் காணலாம்.

இன்னும் கொஞ்ச காலத்தில் இந்தக் கஷ்டம் நீங்கி விடும். 'இந்த வாசக சாலையை விரிவுபடுத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. உலக மொழிகளில் உள்ள எல்லா இலக்கியங்களையும் கொண்டு வந்து நிரப்புவதற்கான அலமாரிகள் அதிகப்படியாகத் தயாரிக்கப்படுகின்றன. 50,00,000 வால்யூம்களுக்கு இடமளிக்கும் வகையில், இந்த அலமாரிகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கினால் அதன் நீளம் 100 கிலோ மீட்டர் இருக்குமாம்!

இந்த லைப்ரரியின் நாற்பத்தைந்தாவது ஆண்டு விழாவும் புதிய பகுதியின் திறப்பு விழாவும் ஒன்றாக நடக்கவிருக்கின்றன. புதிய கட்டிடங்களும் புத்தகங்களைத் தானாகவே தாங்கி வந்து விநியோகிக்கும் சாதனங்களும் அமைக்கப் பட்டுள்ளன. வாசகர்களுக்கு அவர்கள் விரும்பிய புத்தகங்கள் சில நிமிஷங்களில் கை மேல் வந்து விழுமாம்!



ஆதாரம்: மாஸ்கோ நியூஸ்

விளம்பரம்!



"அருமை மகனுக்கு, நீ செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்து விடுகிறேன். தயவு செய்து நீ வீட்டுக்குத் திரும்பி வராதே."

இப்படிக்கு,
உன் தந்தை

ஆதாரம்: பேஜண்ட்
தகவல்: கே. கோபாலன்

அதற்கும் சுதந்திரம்!

அகதிகள் முகாம் ஒன்றை நேரு பார்வையிட்டுக் கொண்டு வந்த போது மேற்கு பாக்கிஸ்தானிலிருந்து வந்த அகதிப் பெண் நேருவைத் திட்டிவிட்டு அவரிடமே, "இந்தக் கொடுமையைத்தான் நீங்கள் சுதந்திரம் என்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"இப்பொழுது நீங்கள் இந்தியாவின் பிரதமரை அவர் எதிரிலேயே திட்டினீர்கள். அப்படி இருந்தும் உங்களுக்கு எந்த இடைஞ்சலும் ஏற்படவில்லை. இது சுதந்திரம் இல்லையா தாயே?" என்று கேட்டு விட்டுக் கண்ணீர் விட்டாராம் நேரு!

ஆதாரம்: "ஃபெமினா" தகவல்: 'ஆவாரா'



ஃப்ரிஜ் ஒழிக!

— எஸ். ரங்கநாயகி —

பத்து வயது பாலு குதித்துச் சுற்றி வர, காலேஜ் பெண் பத்மா தன்னை அந்த நிமிடமே ஆகாயத்தில் பறக்கும் பறவையாக எண்ணிக் கொள்ள, வேலை தேடும் படலத்தில் இருக்கும் பையன் கணேஷ் சார்லென்ஸ் விளம்பரம் செய்யும் 'மாஜிக் கார்பெட்' மன்னனாக நினைத்து மகிழ வீட்டில் ஒரே அமர்க்களம்.

''சும்மா ஒரு ரூபாய் டிக்கெட் வாங்கினதுக்கு அப்படிப் பாடாகப் படுத்தினயே, இப்போ பார்த்தியா?'' குடும்பத் தலைவர் அருணாசலம் வெற்றி எக்களிப்புடன் மனைவி பாகீரதியை நோக்கிக் கேட்டார்.

''அதெல்லாம் உங்கள் டிக்கெட் அதிர்ஷ்டமில்லை. பானை பிடித்தவள் பாக்கியமாக்கும்.'' பாகீரதி மகிழ்ச்சியில் கூறினாள்.

''ஏண்டாப்பா, ஒரே ரகளையா இருக்கே, என்ன சமாசாரம்?'' கோவிலிலிருந்து அப்போதுதான் திரும்பி வந்த அருணாசலத்தின் தாய் மங்களம் பாட்டி கேட்டாள்.

பாலு தரதரவெனப் பாட்டியை இழுத்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றான். பாட்டி கண்களைப் பத்து முறை துடைத்துக் கொண்டு நோக்கினாள். விழிகளை உயர்த்திப் பார்த்தாள். பிறகு மீண்டும் அருணாசலத்திடமே வந்தாள்.

''ஏண்டா அருணா, இந்த எழவு பசிடரும் கசிடரும் வாங்க உங்கிட்டே பணமிருக்கும். கோயிலுக்குப் போகப் பணம் கொடுக்காவிட்டாலும் போறது. 'காசி விசாலாக்ஷி' சினிமாவாவது பார்க்கணும்னேனே அதுக்கும் பணமில்லேன்னியே.......!'' மங்களம் பாட்டி கோபத்துடன் ஆரம்பித்துக் குரல் அடைக்க நிறுத்தினாள்.

''பசிடர்னு சொல்லாதே! 'ஃப்ரிஜிடர்'னு சொல்லு பாட்டி! இன்னும் சொல்லப்போனா ஸ்டைலா 'ஃப்ரிஜ்'னு சொல்லு.'' பாலு திருத்திக் கொடுத்தான்.

''எதுவா இருந்தா எனக்கென்னடா? இதுலே கொட்டப் பணம் எங்கேயிருந்து வந்ததாம்?''

''இதுலே பணத்தைக் கொட்டமாட்டா, பண்டத்தைத்தான் கொட்டுவாளாக்கும்!''— மீண்டும் பாலுதான் பதிலுரைத்தான்.

''நீ சும்மா இருடா, அதிகப்பிரசங்கி!'' மகனை அதட்டிவிட்டு அருணாசலம் தாயை நோக்கினார். ''நான் பணம் கொடுத்துவாங்கலேம்மா. ஒரு லாட்டரிச் சீட்டு ஒரு ரூபாய்க்கு எடுத்தேன். இது பரிசு வந்திருக்கு. நம்பர் 72க்கு இத்தனை அதிர்ஷ்டம்!''

''என்ன சொன்னே, எழுபத்திரண்டா? எனக்கு எழுபத்திரண்டிலே நல்ல யோகம்னு எங்கப்பா இருந்த நாளிலே சொல்லுவா. இப்ப என் எழுபத்திரண்டாம் வயசுலே....'' முப்பத்திரண்டில் விழுந்தது போக மிச்சமிருந்த நான்கு பற்களைக் காட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள் பாட்டி.

''சரியாப் போச்சு! நான் லாட்டரிச் சீட்டு வாங்கின போது சந்நியாசம் வாங்க நினைக்கும் அளவு நீங்கள்ளாம் திட்டினேள். இப்போ என்னடான்னா பானை பிடித்தவள் பாக்கியம்னு பாகீரதி கூவ, எழுபத்திரண்டாம் நம்பர் உன் வயசு யோகம்னு நீ குதிக்கிறே!'' அருணாசலம் கூறினார்.

மறு நாள் கூடை நிறைய கறிகாய்களாக நிரப்பிக் கொண்டு பாகீரதி ஒரு கூலியாள் பின்தொடர உள்ளே நுழைந்தபோது அருணாசலம் திடுக்கிட்டு விட்டார்.

''என்ன பாகீ, யாருக்கு விருந்து? குறைந்தது பத்துப் பேர்களையாவது கூப்பிட்டிருப்பாய் போலிருக்கே!''

''சும்மா இருங்கோ! வீட்டிலே ப்ரிஜிடர் இருக்கறப்போ தினமும் கடைக்குப் போவானேன்? இத்தனையும் அதுக்குள்ளே வச்சிருந்தால்...வாரக் கணக்குலே வருமே!''

''நன்னா சொன்னே போ! அடுத்த தெருவிலே மார்க்கெட் இருக்கு. புதுசு

புதுசா வாங்கறதை விட்டுட்டு.... கூலிக்கு வேறு பைசா....!''

''தினமும் மார்க்கெட்டுக்குப் போகணும்னு அப்புறம் ஃபிரிஜிடர் எதுக்காம்?''

அருணாசலம் வாயே திறக்கவில்லை. ஆனால் வாங்கி வந்த கறிகாய் ஒரு வாரத்துக்கு வந்தா என்பது சந்தேகம்தான்.

அன்று கணேஷ் தந்தையோடு சண்டை யிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குக் குறைந்தது பதினைந்து ரூபாயாவது வேண்டு மாம்.

''இப்போ எதுக்குடா பணம் ?''

''பத்து தடவை சொல்லியாச்சு. ஆரஞ்சு, லெமன், மாங்கோ, ஆப்பிள் ஸ்குவாஷ் மட்டுமாவது வாங்கணும்.''

''இத்தனை நாளாக இல்லாத வழக்கம் இப்போ என்னவாம்?''

''இதென்னப்பா அசட்டுக் கேள்வி ? இத்தனை நாளாக நம் வீட்டில் ஃப்ரிஜ் இருந் ததா? ஃப்ரிஜ் வந்தா சும்மா பூட்டி வெச்சு அழகு மட்டும் பார்க்கணுமா?'' அவன் கூவ ஆரம்பித்தான்.

''உங்கப்பாவுக்கு இனமா வந்த பண் டத்தை அநுபவிக்கக்கூட மனசு வராதுடா! இரண்டு பாட்டில் வாங்கி வெச்சா மசியா போயிடும்? சொத்து பறிபோனாப்பலே கூச்சல் போடுவா!'' என்று கட்சி பேசலானாள் பாகீரதி.

அருணாசலம் பதில் கூறாமல் எழுந்துவிட் டார். பேசியும் பயனில்லை எனத் தெரியும் போது வீணாகத் தொண்டைத் தண்ணிக்குக் கேடு விளைவிப்பானேன்! மறு நாள் ஃப்ரிஜிட ரில் விதம் விதமான நிறத் தண்ணீர் ஏறிய பாட்டில்கள் இடம் பெற்றன.

அன்று பத்மா காலேஜிலிருந்து வீடு திரும்பிய போது அவளுடன் ஏழெட்டு சிநேகிதிகள் வந்தனர். பாகீரதி திகைத்து விட்டாள். சிநேகிதிகளை அழைத்து வரும் வழக்கம் பத்மாவுக்குக் கிடையாதே !

''இவள்தான் சாந்தா சேஷாத்ரி. அவள் பிரியம்வதா.... அதோ அவள் மிஸ் சம்பத் தம். அவளுக்குப் பின்னாடி ஹேமலதா.''

பத்மா பாகீரதிக்கு அறிமுகம் செய்து வைத்த போது பாகீரதிக்கு என்ன செய்வ தென்று புரியவில்லை. அவள் காலேஜ் கட்ட டத்தைக்கூடச் சரியாகப் பார்த்ததில்லை.

பத்மா தாயின் சங்கடத்தைப் புரிந்து கொண்டவள் போல் சிநேகிதிகளை வேறு பேச் சில் திருப்பி விட்டாள். பாகீரதி சந்தடி செய் யாமல் உள்ளே நகர்ந்து விட்டாள். சமைய லறையிலேயே ஒட்டி இருந்தவள் அவர்கள் சென்ற பிறகுதான் வெளியே வந்தாள்.

மறு நாள் தன் கூட்டாளிகளுடன் உள்ளே வந்த கணேஷ் ஃப்ரிஜிடரைத் திறக்கும் சப் தத்தை மட்டும் உணர்ந்தாள் பாகீரதி.

''அவமானம்! அவமானம்!'' என்று அம்மாவிடம் வந்து ரகசியமாகவே ஆத்திரக் குரல் எழுப்பினான் கணேஷ்.

''என்னடா அவமானம் வந்துவிட்டது?''

கணேஷ் பதில் கூறாமல், தாயின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று ஃப்ரிஜிடரைத் **திறந்து ஸ்குவாஷ் பாட்டில்களைக் காட்டினான்.**

''ஐயையோ! அதுக்குள்ளேயும் எப்படிடா காலியாச்சு ?''

''உன் பெண்ணைக் கேள். அத்தனை சிநேகிதிகளுக்கும் அவள் கொட்டிக் கொடுத் திருக்கிறாள். என் பிரண்ட்ஸுக்குக் கொடுக்க லாம் என்று கூட்டி வந்தால் எல்லாம் காலி. ஃப்ரிஜிடரில் ஏதோ கோளாறு என்று சமா ளித்துக் கொள்ள வேண்டியதுதான்.''

பாகீரதி கேட்ட போது பத்மாவுக்கு மானாத கோபம் வந்துவிட்டது.

''ஃப்ரிஜ் இவனுக்குத்தான் சொந்தமா? என் தோழிகளிடம் ஃபிரிஜ் பேச்சை எடுத் துட்டு சும்மா இருக்க முடியுமா?.... அதுக் காகக் கிரஷ் கொடுத்தால் அதுக்கு இத்தனை ஆட்சேபணையா?''

இருவரையும் சமாதானம் செய்வதற்குள் பெரும்பாடாகி விட்டது. பிறகு அப்போதே பாகீரதி கடைக்குச் சென்று ஸ்குவாஷ் பாட்டில்கள், வாங்கி வந்து ஃப்ரிஜிடேரில் வைத்த பிறகுதான் கணேஷ் வாயை மூடிக் கொண்டான்.

வந்த விருந்தாளிகளுக்கு மட்டுமின்றி வீட்டிலுள்ளோருக்கும் 'கிரஷ்' பழக்கம் பிடித்துக் கொண்டது.

''பாட்டி, உனக்கும் வேணுமா? சும்மா மோரைத் தெளித்துக் குடித்துவிடு. ஆசார மாக இருக்கும்!'' கணேஷ் கிண்டலாக ஆரம் பித்தான்.

''போறது. உனக்காவது கேக்கணும்னு தோணித்தே. மோர் தெளிக்கணும்னு அவ சியம் இல்லேடா. பழரஸம்தானே. பழத் துக்குத் தோஷமில்லே. உன் கையாலே எடுத்துக் கொடு. மகராஜனா இருப்பே !'' என்றாள் பாட்டி.

அத்தனை பேருக்கும் சில்லிப்புத் தாங்காமல் பல் கூசிய போது பாட்டி மட்டும் மடக் மடக் கெனக் குடித்துவிட்டது அவர்களுக்கு ஆச்சரிய



மாக இருந்தது. எல்லாருக்கும் கிரேஸ் குளிர்ச்சி யாகத்தான் இருந்தது. அதற்குப் பணம் தருகிற அருணாசலத்துக்கு மட்டும் வயிற்றில் கொதிப்பு ஏற்படத்தான் செய்தது.

அன்றைக்குப் பாலு 'ஓ'வென்று அழுது கொண்டிருந்தான். அவனுக்கு ஐஸ்க்ரீம் வேண்டுமாம். வாசலில் போனதை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற பிடிவாதம்.

''வாசலில் போவதெல்லாம் வாங்கித் தின்னக் கூடாதுடா. உடம்புக்கு நல்ல தில்லேடா !'' பாகீரதி சமாதானம் செய்து கொண்டிருந்தாள். அப்போது அவள் கையில் சில்லறை இல்லை என்பது அவளுக்குத்தான் தெரியும்.

''பொய் சொல்றே. நாணு, கோபு, சீனு எல்லாரும் வாங்கித் தின்னலியா? எனக்கு உடம்புக்கு வந்தாலும் மருந்து சாப்பிட்டுக் கிறேன்.'' பாலு தன் உச்சஸ்தாயியில், அழுகையை திரவல் செய்தான்.

செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்த அருணாசலம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டார். ''ஏலே, பாலு ! கம்மா என்னடா கூச்சல் இது ?'' என்று அதட்டிக் கொண்டிருந்த நேரத்தில் பக்கத்துத் தெரு லீலா உள்ளே வந்தாள்.

அருணாசலம், ''நீயே சொல்லு. வாசல்லே போற ஐஸ்கிரீமை வாங்கித் தின்றால் கெடுதல்தானே ?'' எனத் தன் சொல்லுக்கு ஆதரவு தேடினார்.

''ஆமாண்டா, பாலு! வாசல்லே போகி றதை வாங்கித் தின்னக் கூடாது'' என்ற லீலா அதோடு நின்றிருக்கக் கூடாதா? அருணா சலத்தைப் பார்த்து, ''ஆத்திலே இருக்கிற பிரிஜிடர்லே 'ப்யூரா' ஐஸ் கிரீம் பண்ணிக் குழந்தைக்குத் தரலாமே!'' என்றாள்.

'ஆ! வீட்டு பிரிஜிடரில் ஐஸ்கிரீம். செய்ய மறந்துவிட்டோமே!' பாலுவுக்கு மட்டுமின்றி எல்லோருக்குமே ஒருமிக்க நாக்கில் ஜலம் கொட்டியது. அருணாசலமோ லீலா செய்த லீலையை நினைத்துத் தனக்குள்ளே பொருமிக் கொண்டார்.

பிரிஜிடேரில் ஐஸ்கிரீம் ஆராய்ச்சி நடக்க ஆரம்பித்தது. அம்மாவுக்கு ஒரு நாளும் காரி யம் செய்யாத கணேஷ் இப்போதுதானே கடைக்குச் சென்று ஐஸ்கிரீம் பவுடர் வாங்கி வந்தான். பவுடர் இருந்து, ஃப்ரிஜூம் இருந் தால் போதுமா? பக்குவம் சரியாக வராமல் பிடிவாதம் பிடித்தது.

எப்படிச் செய்தாலும் ஐஸ்கிரீம் அவர்கள் கைக்கு அழகாகவும் நாவுக்குச் சுவையாக வும் உள்ள நல்ல பொருளாக இல்லாமல் பலவித உருவங்களில் காட்சி அளித்தது. அதற்காக விட்டுவிடுவார்களா? குழந்தைக்கு ஐஸ்கிரீம் தராமல் இருப்பார்களா? முயற்சி தான் மனிதனின் வெற்றிக்கு அடையாளம் எனப் பெரியவர்கள் பொருள்படச் சொல்லி இருக்கிறார்களே !

அன்று அருணாசலம் ஆபீஸிலிருந்து திரும்பிய போது வீடு நிறையப் பெண்கள்... என்ன விசேஷமோ தெரியவில்லையே ! வந்த சுவடு தெரியாமல் படியிறங்கி வெளியே சென்று விட்டார். பொழுதைக் கழிக்க நாலிரு தெருக்கள் சுற்றிவிட்டு அவர் வீடு திரும்பிய போது, அவரைக் கண்டதுமே ஆனந்த ஆரவாரத்தோடு பாகீரதி பேச ஆரம் பித்தாள்.

''இத்தனை நேரம் யார் வந்திருந்தா சொல்லுங்கோ, பார்க்கலாம்! அத்தனை பேரும் லேடீஸ் கிளப் செக்ரடரிகள், மெம் பர்கள். இத்தனை நாளா என்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா. இப்ப என்னடான்னு அவாளே நம்ப வீடு தேடிண்டு வந்துட் டான்னு......!''

''அதனுடைய பெருமை ஃபிரிஜிடருக்குத் தான் சேரும். அதானே!'' அருணாசலம் அவள் வாக்கியத்தை முடித்தார்.

பாகீரதி தலையை ஆட்டிவிட்டுச் சிரித் தாள். '' 'வீட்டுலே ஃப்ரிஜ் எல்லாம் வெச்சுண்டிருக்கே ....! கிளப்பிலே சேர அழறியே'ன்னு ஆரம்பிச்சுட்டா....!''

''அது லாட்டரி சம்மானம்னு சொல்லித் தொலைக்கறதுக்கென்ன?''

''ரொம்ப நன்னாயிருக்கு! பிரிஜிடேர் வெச்சுக்கற அந்தஸ்துலே நம்ப வந்துட் டோம்னு பெருமையா காட்டிக்காம ஓசியிலே வந்ததுன்னு நம்ப பவிஷுக்கு வெளிச்சம் போடுவாளாக்கும்!''

''நம்ப வீட்டுலே பிரிஜிடர் இருக்குன்னு அவாளுக்கு எப்படித் தெரிஞ்சுது ? நீதான் கண்ட இடத்திலே.....!''

''ஆரம்பிச்சுட்டேளா? நான் ஒண்ணும் பெருமைக்காக ஒத்தர்கிட்டேயும் சொல்லிக் கலே. நாலு பேர்கிட்டே சொன்னாத்தானே பிரிஜிடேரை எப்படி யெல்லாம் உப யோகிக்கலாம்னு தெரியும்! நாமென்ன பரம் பரை பணக்காராளா, எல்லாத்தையும் தெரிஞ்சு வெச்சுக்க ?''

''சரி, சரி! இப்ப உன் குதூகலத்தைக் கெடுத்துண்டு அழக் கிளம்பிடாதே..... உன் தலையைத் தடவி உன்னை கிளப் மெம்ப ராக்கி விட்டார்கள். நான் குமாஸ்தா வேலையிலேந்து மேல் பதவிக்குப் போக யார் தலையைத் தடவறதுன்னுதான் புரியலே !''

பாகீரதி பேசாமல் நகர்ந்து விட்டாள்.

இரண்டு நாட்கள் கழித்துச் சாப்பிட உட்கார்ந்த அருணாசலம் இலையில் விழுந்த பதார்த்தங்களை நோக்கித் திடுக்கிட்டார்.

''என்ன பாகீ, கத்திரிக்காய் கிலோ ஏழு பைசாவா? வெண்டை பத்து பைசாவா?''

''என்ன அப்படிக் கேட்டுட்டேள்?''

''மூன்று நாட்களாகக் கத்திரிக்காய்க் கறி யும் வெண்டை குழம்புமாகவே இருக்கே!''

''நன்னா இருக்கா இல்லையா ?''

''ருசி பற்றிக் குற்றம் சொல்லலியே!''

''பார்த்தேளா! பிரிஜிடர் பெருமை அது தான். மூணு நாளானாலும் கெடாது. எனக்குக் கிளப்பிலே மிஸஸ் பட்டாபி சொல்லித்தான் தெரிஞ்சுது.''

''அட ராமா! முந்தாநாள் செய்ததையா போடுகிறாய்?''

''அதுலே என்ன தப்பு? ஊசலைப் போட றேனா? அழுகலைப் போடறேனா? கிளப்பிலே டிராமா நடத்தப் போறோம். பகல் வேளை



ஓவல்டின்

ஒப்பற்ற 'ஒலிம்பிக்' பானம்

'ஒலிம்பிக்' தென்பை உங்களுக்குத் தருவதற்கென சக்தி செறிந்து வருகிறது.

மற்றெந்த உணவு பானத்தையும் விட அதிக மால்ட் அடங்கப்பெற்று, சக்தி செறிவூட்டப்பட்டது ஓவல்டின். மால்ட் என்பது தென்பு தரும், இயற்கையின் ஒப்பற்ற ஊட்டப் பொருள்களில் ஒன்றாகும். அதிக மால்ட், பால், வைட்டமின்கள், புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், யாவும் அடங்கிய ஓவல்டின், ஆட்ட வீரர்களுக்குக் கிடைக்கும் அதே 'ஒலிம்பிக்' தென்பை உங்கள் குடும்பத்திற்கும் அளிக்கும்.
அருந்துங்கள் ஓவல்டின்: உடல்நலத்திற்கு ஓவல்டின், வலிமைக்கு ஓவல்டின், தென்புக்கு ஓவல்டின்.

சக்தி செறிவிக்கப்பட்ட ஓவல்டின், 1932 முதல் நடத்தப்பட்டுவரும் 7 ஒலிம்பிக் ஆட்ட விழாக்களிலும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பானமாக விளங்கிவருகிறது.



ஒவ்வொரு துளியிலும் ஊக்கம் துள்ளும்

ஓவல்டினை பாரதத்தில் ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்., நிறுவனம், லண்டனிலுள்ள ஏ வாண்டர் லிமிடெட்டின் லைசென்ஸ் பெற்றுத் தயாரிக்கிறது.

ஏகபோக விநியோகஸ்தர்கள்: வோல்டாஸ் லிமிடெட்.

லிலே பிராக்டிஸ். வீட்டிலே இருக்கிற நேரத்திலே 'டயலாக்ஸ்' மனப் பாடம். சமைக்க நேரம் ஏது? பத்மா காலேஜ் படிப் போடு கிடக்கிறாள். உங்கம்மாவுக்கோ வம் படிக்க உடம்புக்கு ஆகும்; சமையல் செய்யத் தான் முடியாது! நான் ஒண்டிக்கட்டை, எதைப் பார்க்கிறது? மிஸஸ் பட்டாபிதான் ஒழிவு நேரம் கிடைக்காதபோது ரெண்டு, மூன்று நாளைக்குச் சேர்த்துச் சமைச்சு பிரிஜிடரில் வெச்சால் கெடாது என்றாள். பரிமாறும்போது சுடவெச்சுத்தானே போடறேன். எவ்வளவு நன்னா இருக்கு பார்த்தேளா? நாமாகப் பிரிஜிடர் வாங்கலே. அதுவாக் கிடைத்ததை அனுபவிக்கக் கூடாதா என்ன?''

அதற்கப்புறம் அருணாசலம் சாப்பிட மட்டும்தான் வாய் திறந்தார்.

அன்று அருணாசலத்தையும் பாட்டியையும் தவிர வீட்டில் வேறு ஒருவரும் இல்லே. தினசரியைப் படித்துக் கொண்டிருந்த அருணாசலம் தன் அம்மா யாருடனோ பேசும் சப்தம் கேட்டு வெளியே வந்தார்.

ஒரு பழக் கூடைக்காரன் இரண்டு டஜன் ஆப்பிள், டஜன் சாத்துக்குடி, டஜன் மலே வாழைப் பழம், இரண்டு சேர் திராட்சை எல்லாவற்றையும் பரப்பிவிட்டு, ''வரேம்மா'' எனக் கூறிப் போய்விட்டான்.

''என்னம்மா இதெல்லாம்?''

''அதாண்டா, என் உடம்புக்கு ராத்திரி இந்த அடை தோசை பலகாரமெல்லாம் ஒத்துக்கறதா? இனி பழமாச் சாப்பிட்டா ஜெரிக்குமோன்னுதான் இப்படி. வயத்துக்குக் குளுமையான ஆகாரம் நல்லதுன்னு டாக்டர் கூடச் சொல்றாரே. இந்தப் பழக்காரன் ஜட்ஜ் ரங்கநாதன் வீட்டுக்கு வழக்கப்படி போடறவனாம். 'குளிர் பெட்டி இருக்கறப்போ ஏம்மா கவலைப்படறே, மூணு நாளைக்கு ஒருதரம்பழம்கொண்டாந்துதரேன்' என்றான். அவன் கணக்கு எழுதி வச்சுப்பான். மாசம் பிறந்து அவனுக்குப் பணம் கொடுத்தாப்போதும்.'' பாட்டி பிரிஜிடரைத் திறந்து பழங்களை அடுக்கினாள். உள்ளக் கனிவுடன் அத்தனை சாமான்களுக்கும் இடையே பிரிஜ் அக்கனிகளுக்கும் இடம் கொடுத்தது.


அன்று அருணாசலம் தனது குடும்பத்தோடு ஃபிரிஜ் தந்த குளிர் பானங்களைப் பருகிக் கொண்டிருந்தது வீட்டினருக்கே அதிசயமாக இருந்தது. ஃபிரிஜை பகிஷ்காரம் செய்திருந்தவரும் கூட அதில் சேர்ந்து விட்டதால் எல்லாருக்கும் மகிழ்ச்சி. அந்த நல்ல சமயத்தில்தான் திடும்பிரவேசம் செய்தார் ஒரு போலீஸ் அதிகாரி. ''அருணாசலம் வீடு இதுதானே?'' என்றார் அவர்.

''ஆமாம்'' என்றார் அருணாசலம்.

''உங்கள் வீட்டில் ஃபிரிஜிடேர் வைத்திருக்கிறீர்களா?'' என்றார் அவர்.

''என்னமோ ஏதோன்னு பயந்து விட்டேன். வெய்யிலிலே சுத்திக் களைச்சுத் தாகசாந்திக்கு வந்தேளா? அடி பாகி! ஆபீஸருக்கு 'ஜில்'னு 'ஜூஸ்' கொண்டு வா'' என்றாள் பாட்டி.

விளையும் பயிர்!



''நீங்க அலட்டிக்காதீர்களம்மா'' என்று கூறிய அதிகாரி, ''கேரளா ராஜ்யத்திலே நடத்தும் லாட்டரியிலே உங்களுக்கு ஃபிரிஜ் பரிசு வந்திருப்பதாக எங்களுக்கு அநாமதேயக் கடிதம் வந்திருக்கு. வாஸ்தவமா?'' என்றார் அதிகாரி.

''வாஸ்தவம்தான்'' என்றார் அருணாசலம்.

''சட்டப்படி அது தப்பு. நம் ராஜ்யத்துக்காரர்கள் இம்மாதிரி லாட்டரியில் கலந்து கொள்ளக்கூடாது. உங்களுக்குத்தெரியாதா?''

அனைவருக்கும் வெலவெலத்துவிட்டது.

''தெரியாது ஸார், நிச்சயமாகத் தெரியாது'' என்று குழறினார் அருணாசலம்.

''தெரிஞ்சாலும் தெரியாவிட்டாலும் உங்க மேலே 'ஆக்ஷன்' எடுக்கணும். ஃபிரிஜிடேரைப் பறிமுதல் பண்ணணும்.''

அருணாசலம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

போலீஸ் அதிகாரிக்கே ஒரு கனிவு ஏற்பட்டு விட்டது. ''இது முதல் தரமானதாலும், தெரியாத்தனத்தில் செஞ்சதாலும் உங்களுக்குத் தண்டனை ஒன்றும் இருக்காது. ஆனாலும் ஃபிரிஜ் பறிமுதலாகாமல் இருக்க முடியாது'' என்று கூறிவிட்டு, லாட்டரி நடத்தும் கம்பெனி, டிக்கட் விற்ற கடை இவற்றைப் பற்றி சாங்கோபாங்கமாக விசாரித்துவிட்டு அதிகாரி சென்று விட்டார்.

''சட்டம் என்னன்னு தெரியாம இப்படி ஒரு அப்பாவிப் பிராமணன் இருப்பானோ? எந்தப் பாவியோ போலீசுக்கு எழுதிவிடும் படியா ஆச்சே!'' என்று ஆராத்துயரத்துடனும் ஆத்திரத்துடனும் கூறினாள் பாகீரதி.

அவள் சபித்த அந்தப் பாவியும், அவளது அநுதாபத்துக்குப் பாத்திரமான அப்பாவியும் ஒருவரேதான் என்று மட்டும் அவளுக்குத் தெரிந்திருந்தால்...?

வட்ட மேஜை

- ☐ அகராதியும் வேறுதான்!
- ☐ கொள்முதல் விலை
- ☐ 'ராஜாஜி கலந்து கொள்ளவில்லை
- ☐ 'பாசம் பொல்லாதது'
- ☐ ஹிந்தி படும் பாடு!

'தனது நாட்டிடம் உண்மையான பக்தி கொண்டு அதற்குச் சேவை செய்பவனே தேச பக்தன்' என்பது அகராதிகளில் காணப்படும் அர்த்தம். ஆனால் மைசூர் கல்வி மந்திரி சங்கர கௌடா தரும் அர்த்தமே தனியானது. 'ஆங்கிலம் போன்ற ஓர் அந்நிய மொழியிடம் அன்பு கொள்வது தேச பக்திக் குறைவையே காட்டுகிறது' என்கிறார் அவர். ஹிந்தியையும் பிரதேச மொழிகளையும் மட்டும் விரும்பி, ஆங்கிலத்திடம் வெறுப்புக் காட்டுவதே தேச பக்தி என்பது அவர் கொள்கை. தாய் நாடாகிய இந்தியா முழுவதையும் கருத்தில் கொண்டு அதன் நலனைக் கருதுவது அவரது விளக்கப்படி தேச பக்தியாகவில்லை. இதன் படி அவர் பள்ளி மாணவராயிருந்த காலத்திலேயே காந்திஜியுடன் தோளோடு தோள் நின்று விடுதலைக்குப் போராடிய ராஜாஜியும் முன்ஷியும் இன்று தேசப் பற்றற்றவராகி விட்டனர். தேச பக்தர்களுக்குப் பதில் ஸ்ரீ திரிகுண சேன், சங்கர கௌடா போன்ற மொழி பக்தர்கள் கல்வி இலாகாவில் இடம் பெற்றிருப்பதும், பிரதேசப் பித்தைக் கடந்து நாட்டு நலனைக் கருதும் ஸ்ரீ சாக்ளா போன்றவர்கள் விலக நேர்ந்திருப்பதும் தேசத்தின் துர்ப்பாக்கியம்.

பெங்களூர் — வி. டி. ஸ்ரீநிவாஸன்

சென்ற ஆண்டின் விவசாயச் செலவுகளுக்கும், நடைமுறைச் செலவுகளுக்கும் உள்ள ஒரு வித்தியாசத்தை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால் நிலைமை நன்கு தெரியும். இந்த ஓராண்டில் ரசாயன உரங்களின் விலை 25 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கலப்பு உரங்களின் விலை 25 சதவிகிதம் அதிகரித்துள்ளது. தொழிலாளர்களின் கூலிகள் 30 சதவிகிதம் அதிகரித்துள்ளன. இவை ஒரு ஆண்டில் ஏற்பட்ட விலை ஏற்றம். கொள்முதல் விலை நிர்ணயித்தோ சுமார் மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அதன் பிறகு உற்பத்திச் செலவுகள் 40 சதவிகிதம் அதிகரித்துள்ளன என்பது மிகையாகாது.

பிரதி வருடமும் அரசாங்க அலுவலர்களுக்கும், கம்பெனிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும், ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் சம்பள விகிதங்கள் கூடிக்கொண்டே போகின்றன. விவசாய மக்கள் மட்டும் புறக்கணிக்கப்படுவது சரியா?

இதோடு ஒவ்வோர் ஆண்டும் நிலத்தின் வளம் குறைகிறது. கண்டு முதலும் குறைந்துகொண்டே வருகிறது. இவைகளை எண்ணத்தில் கொண்டு நமது தமிழக அரசு புதிய கொள்முதல் விலைகளை உயர்த்தி நிர்ணயிக்கக் கோருகிறேன்.

மயிலம் — எஸ். சுப்பா ரெட்டியார்

கல்கி 15–10–67ல் வெளியாகியுள்ள 'ராஜாஜி கலந்துகொள்ளவில்லை' என்ற உபதலையங்கத்திலிருந்து ராஜாஜியின் உதவியில்லாத நிலையிலும் சுதந்திரக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு நல்ல பல முடிவுகளை எடுக்க முடியும் என்பது தெளிவாகிறது. 'மகன் தந்தைக்காற்றும் உதவி'யை உரிய முறையில் அவர்கள் செய்திருக்கிறார்கள். இதனால் எல்லோரையும் விடத் தலைவர் ராஜாஜியுடைய இதயம் குளிர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும் ராஜாஜி பல்லாண்டு வாழ்ந்து நமக்கெல்லாம் சீரிய வழிகாட்டி வரவேண்டும் என்பதே இந்நாட்டின் பிரார்த்தனை.

குன்றத்தூர் — வி. ச. வாசுதேவன்

கல்கி 15–10–67ல் வெளியாகியுள்ள ''பாசம் பொல்லாதது'' என்கிற சிறுகதை தற்கால நாகரிகப் பெண்கள் படித்துப் பயன் பெற வேண்டிய ஒன்று. இக்கதை ஒரு பெண்ணால் எழுதப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. கதையில் வரும் ரகுபதியைப் போல எத்தனை வயோதிகர்கள் இம்மாதிரி நாட்டுப் பெண்களிடம் கஷ்டப்பட்டுக் காலம் கழித்து வருகிறார்களோ!

புதுதில்லி — ஆர். பட்டாபிராமன்

கல்கி 15–10–67 இதழில் 'கபன்' விமரிசகர், ''தும பின ஸஜன பர்ஸே நயன்'' என்ற பாட்டு கருத்துச் செறிந்திருப்பதாக எழுதியிருக்கிறார். இதிலிருந்து விமரிசகர் ஹிந்தி அறிவு உடையவர் என்று தெரிகிறது. ஆனால் ''தும் பின் ஸஜன்'' என்ற வார்த்தைகளை ''தும பின ஸஜன'' என்று எழுதி, பொருளே இல்லாமல் சிதைத்திருக்கிறார்!

புது தில்லி — எஸ். நீலகண்டன்

ஃ ஃ ஃ

[பாடும் முறையை நண்பர் கேட்டுப் பார்த்தால், இக் கடிதம் எழுதியிருக்க மாட்டார். பாட்டுக்காக மெய்யொற்றுக்களை மாற்றிக் கொள்வது ஹிந்தியர்களின் பழக்கமே.

— ஆசிரியர்]

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam

Registered as a Newspaper in Ceylon
REGISTERED No. M. 4392

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

